

அலீல்

# கடையில் பூத்த கவிதைகள்

# கடையில் பூத்த கவிதைகள்

கலாபூஷணம் ஆதம்பாவா அஸீஸ்
- சம்மாந்துறை அஸீஸ் -

தேசிய கலை இலக்கிய தேனகம்
சம்மாந்துறை

**Kadail Poottha Kavithaikal**

© **Sammanthurai Azeez** - 47/B, Ameer Ali Road, Sammanthurai / 077 8444271, 067 2260596 / First Edition - January 2016 / Published - Thesia Kalai Ilakkiya Thenakam, Sammanthurai / Type Setting - U.L. Aliyar / Layout & Cover Design - Nawas Sawfi / Printed - Excellent Print, Sainthamaruthu. 077 640 12 96, 071 82 17 910 / Pages - 172 / Price - Rs 300/=

**ISBN :** 978-955-43028-0-8

என்னிதயத் துணைவிக்கு

என்னோ டொன்றாய் இணைந்திடவே
இல்லற மேற்றாயே துணையாக
பண்ணோடு கலந்த இசையாக
பலர் போற்ற அழகாய் உபசரித்தாயே.

சில்லறைக் கடையின் சிக்கலுள்ளும்
சிரமங்கள் பாராது கால்கடுக்க
பல்லாண்டு நின்று உதவி செய்து
பாவெழுதும் பாவலன் ஆக்கியென்னை.

முகம்மது உவைஸ், சித்தி அனூஸா, பர்ஸானா,
பர்வின், பைரோஸா இத்தனை
முத்துக்களையும்
பக்குவமாய் வளர்த்து படிப்பித்து
பாருக்குள் நல்ல விதை நட்டீரே !

இன்ப துன்பம் ஏற்றத் தாழ்வுகள்
எத்னையோ வந்து வந்தே போனாலும்
அன்பால் ஆதரித்தாய் அது போதும்
ஆகிறத்து நாள் வருமட்டும் ஆஜறாவே.

2015-06-25

# பொய் அழகுகள் இல்லாத மெய் அழகுக் கவிதைகள்

'சம்மாந்துறை அஸீஸ்' அவர்கள் சம்மாந்துறை மத்திய கல்லூரியில் 1966/1967 கால கட்டங்களில் என்னிடம் சாதாரண தரத்தில் இலக்கியம் கற்ற மாணவர். அப்போதிருந்தே கவிதை எழுதுவதில் ஆர்வமுள்ளவராகத் திகழ்ந்தார். சிறு சிறு கவிதைகளை எழுதிக் காட்டுவார். பத்திரிகை வானொலிகளுக்கும் அனுப்பி வைப்பார். சில பிரசுரிக்கப்படும். பல கவிதைகள் காணாமல் போய்விடுவதுமுண்டு. பிரசுரிக்கப்படுவதில்லையே என்று கவலைப்படுவதுமில்லை.

'யூசுப் சுலைகா' சாரணபாஸ்கரன் காவியம் அப்போது சாதாரண தரத்துக்கு இலக்கிய பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அப்பாடத்தைப் படிப்பிக்கும்போது அவர் மிக ஆர்வமாக இருப்பதும் , அளவு கடந்த இரசனையோடும் இருந்து வந்துள்ளமையை இன்றும் என்னால் நினைவுபடுத்தாமலிருக்க முடியாது. யூசுப் சுலைகாவில் அவரைக் கவர்ந்த சில பாடல்களை அடுத்தநாள் பாடமாக்கிக் கொண்டு வந்து வகுப்பிலே பாடிக்காட்டுவதுமுண்டு. தனது குரல் வளத்தில் குறைபாடுகள் இருந்திட்டபோதிலும் வெட்கப்படாமல் முயன்று கொண்டிருப்பார். பிற்காலத்தில் இப்பயிற்சி கவிதை அரங்குகளில் கவிபாடும் ஆற்றல் வளர்ந்திருப்பதை இன்று அவதானிக்க முடிகிறது.

பெருத்த ஒரு குடும்பத்தின் மூத்தவர் என்பதாலும் தந்தையின் பல சரக்குக் கடையை கவனிக்கும் பொறுப்பும் ஜனாப் அஸீஸ் அவர்களின் கடமையாக கட்டாயப்படுத்தப்பட்டது. அதனால் அவர் தொடர்ந்து கற்கும் ஆர்வம் தடைப்பட்டது எனலாம். எனவே தந்தைக்கு உதவியாக வியாபாரத்தில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார். ஒருநாள் இவரது தந்தை 1970 களில் இருக்கலாம். என்னிடம் எழுதப்பட்ட காகிதம் ஒன்றை தந்து படிக்குமாறு கூறினார். அது அஸீஸ் அவர்களால் எழுதப்பட்ட ஒரு கவிதை. மகனைக் குறைகூற முடியாமலும் புத்திமதிகள் கூறுமாறு என்னை வேண்டினார். வியாபாரத்திற்கு இது ஒத்துவருமா ? என்பதுதான் அவரது கேள்வி. இன்னொரு நாள் அஸீஸ் அவர்கள் இரவு நேரத்தில் எனது இல்லத்தில்

என்னைச் சந்தித்தார். "சேர் கவிதை எழுதுபவர்கள் வறுமைக் குள்ளாவதாகக் கேள்விப்படுகிறேன்" என்பது அவரது ஆதங்கம். அப்படியல்ல. நமது தொழிலையும் செய்து கொண்டு உங்கள் மனதைத் தொட்டவைகளை எழுதிக் கொண்டே யிருங்கள்.என புத்திமதிகள் கூறினேன். இப்படி பல சந்தர்ப்பங்களில் எங்களது சந்திப்புக்கள் உரையாடல்கள் தொடர்ந்தன.

ஜனாப் அஸீஸ் அவர்களின் கவிதைகள் பெரும்பாலும் நான் வாசித்ததுண்டு. அவருடைய கவிதைகளின் கருப்பொருள்கள் பெரும்பாலும் பொய் அழகுகள் இல்லாது மெய் அழகுகளைக் கொண்டதாக இருப்பதைக் காணலாம். தனது சூழலில் வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் இடங்களில் தான் அனுபவித்த சம்பவங்கள் அவரைத் தூண்டின என்றால் மிகையாகாது. வைக்கோல் பட்டறை ஜீவன், இலவச சவர்க்காரங்கள், கல்முனைச் சந்தை, சீதேவிக் கோழி போன்றவைகளும் எங்கள் உம்மா என்ற கவிதையும், புவியாள்வாய் என்று தனது மகளைப் பற்றிய கவிதையும் என்னைக் கவர்ந்த இனிய உறவுகள்

இவை தவிர காலஞ்சென்றவர்களுக்கான இரங்கல் கவிதைகளும் இவரால் அவ்வப்போது வெளியிடப்பட்டு நன்மதிப்பைப் பெற்றிருந்ததையும் சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது. கவிஞர்கள் வறுமைக்குள்ளாவார்கள் என்ற அச்சம் அவரை சவாலுக்குள்ளாக்கி எதிர் நீச்சலடித்து தன்னையும் தன் குடும்பத்தையும் வாழவைத்து முன்னுக்கு வந்த 'கலாபூஷணம்' அப்துல் அஸீஸ் அவர்களை வாழ்த்தி மேலும் மேலும் அவரது ஆக்கங்கள் வெளிவர பிரார்த்திக் கின்றேன்.

**கலாபூஷணம் எஸ். அப்துல் றாசிக் J.P.**
*மஜ்லிஸ் அஸ்ஸூறா,*
*ஓய்வு பெற்ற அதிபர்*
*சம்மாந்துறை.*
*0773433547*
*15.01.2006*

## அமைதி கலந்த கலகக் குரல்

அஸீஸ் காக்கா' நான் உலகை அறிந்த காலத்திலிருந்து தெரிந்த பெயர். அந்தப் பருவத்தில் நான் அவரைச் சந்திக்காத நாட்களே இல்லை எனலாம். பத்திரிகையில் எழுதுகின்ற என் ஊரவருள் நான் அறிந்த முதல்வராகவும் அவரையே குறிப்பிட வேண்டும். 'சம்மாந்துறை அஸீஸ்' என்று சின்ன வயதிலே இப்பெயரைப் பத்திரிகையிலே பார்த்திருக்கிறேன். 'கவிஞன்', கவிதை' என்ற உணர்வை அவரூடாகவே அக்காலத்தில் நான் பெற்றிருக்கிறேன் எனலாம். இத்தனைக்கும் அவர் என் பக்கத்து வீட்டுச் சில்லறைக் கடைக் காரராகவே எமக்கு அறிமுகவானவர். அவருடைய ' கடையில் பூத்த கவிதைகள்' என்ற இந்தக் கவிதைத் தொகுதி வெளிவருவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது.

நான் தினகரனில் வாரம் இரு தடவை ' எண்ணப்பெருவெளியில் ' என்று பத்தி எழுதி வருகிறேன். அந்தப் பத்தித் தொடரில் நான் இரண்டாவதாக எழுதியது 'நன்றியுள்ள நாய்' என்பது அது சம்மாந்துறை அஸீஸின் கவிதை பற்றியது. பொருத்தம் கருதி அதனை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"'அபர பிரமன்' என்கிற படைப்பாளி சமூகத்தின் மிக முக்கிய அந்தஸ்தைப் பெறுகின்றவன். ஆனால் அவனை யாரும் பெரிதாக திரும்பிப் பார்ப்பதில்லை. அவர்களால் மாற்றம் ஏற்படுகிறபோது மாத்திரம் அவர்களைப் புகழ்ந்துவிட்டு பின்னர் வசதியாக மறந்து விடுவதுமுண்டு. சிக்மண்ட் பிறைடினது பிரபல்யமான ஒரு வசனம் உண்டு.

"படைப்பாளிகளின் முன்னால் ஏறத்தாள எல்லாப் புத்தி ஜீவிகளும் தங்கள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டியிருக்கும் "

படைப்பாளிகள் அத்தகைய உன்னதமான அந்தஸ்தினைப் பெற்றவர்கள்.அத்தகைய படைப்பாளிகளை இப்போது காண்பதுவும் அரிது.

"பூமி அதிர்ச்சியை விலங்குகள் உணர்வதுபோல சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை யதார்த்தபூர்வமாக கிரகிக்கக் கூடிய ஆற்றல் அல்லது சக்தி படைப்புக்களுக்கும் அதனைப் படைப்பவனுக்கும் இருக்கிறது."

என்று ஓர் அறிஞர் குறிப்பிடுவார். இந்த வகையில் ஒவ்வொரு சமூகத்தினதும் மிக நுண்மையான செயற்பாடுகளைக் கூட கிரகிக்கின்ற அல்லது கண்டுகொள்கின்ற விபரிக்கின்ற ஞானம் படைப்பாளிகளுக்கு உண்டு. சில வேளைகளில் கோபத்தினால் அவன் எகுறுண்டு எழுதுகின்ற விடயங்கள் மிக முக்கியத்துவம் பெறுவதுண்டு. அந்தக் கோபம் மாபெரிய மாற்றங்களுக்குக் காரணமாவதும் உண்டு. அத்தகைய ஒரு மாற்றமே இலங்கை அரசுக்கும் நடந்திருக்கிறது எனலாம். பலரது கோபங்கள் 'ஆசியாவின் ஆச்சரியமாக' முன்னாள் அரசின் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

படைப்பாளி நன்றாகப் படித்திருக்க வேண்டும் என்பதல்ல. அவன் உணர்வுகள், அவன் எழுத்து மிக முக்கியமாகி விடுகிறது. நாட்டார் இலக்கியத்தின் படைப்பாளிகளான மக்கள் கவிஞர்கள் இன்றும் பேசப்படுகிறார்கள். மிக நீண்ட காலமாக 'சம்மாந்துறை அஸீஸ்' என்ற பெயரில் ஒரு கவிஞன் எழுதி வருகிறான். சாதாரண மக்களுடைய பிரச்சினைகள்தான் அவரது கவிதையின் பொருளாயின. அஸீஸ் சாதாரண ஒரு வியாபாரி. ஆனால் ஒரு நல்ல கலைஞன். கண்ட இடத்திலே பட்டென்று கருத்தைத் தெரிவிக்கக் கூடியதைரிய மிக்க எழுத்தாளன். பெரும்பாலான நாட்களில் அவரது குரல் வானொலியின் ஏதாவது ஒரு அலைவரிசையில் மக்கள் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும்.

கிழக்கின் கவிதைப் பாரம்பரியத்தில் கவனிக்கப்பட வேண்டிய ஒரு கவிஞரான அஸீஸ் அண்மையில் மிக முக்கியமான கவிதையை எழுதியிருந்தார். அந்தக் கவிதையின் தலைப்பு 'வைக்கோல் பட்டறை ஜீவன்'.

"கடந்த 2014 இறுதிப் பகுதியில் சிறுபான்மை அரசியலின் வரலாற்றில் மிகக் கறை படிந்த ஒரு விடயம் நடந்து விட்டது. வடக்கிற்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி வடக்கு மாகாண சபையை மிகக் காரசாரமாக விமர்சித்திருந்தார்.

மாகாண சபை தொடர்பாக வைக்கோல் பட்டறையில் வசிக்கின்ற ஜீவனுக்கு ஒத்த கருத்துக்களை அவர் அங்கு வெளியிட்டார். அதனால் பலரும் மனதுக்குள் புளுங்கினர். இந்தப் புளுக்கத்தினால் பாதிக்கப்பட்ட அஸீஸ் இந்தக் கவிதையை எழுதினார்.

மாடுகள் பூட்டி வயலுக்குள் செல்கையில்

மரியாதையாய் இரு சில்லுக்கு இடையில் ஓடிவரும்
மாடுகள் புல் மேய்கையிலே எதிரே
மண்டியிட்டு துள்ளி துள்ளி குதிக்கும்.

பூச்சி பூரான் இலை தளை ஆடினாலும்
புதுக் குரலெடுத்தே புவியை அசைக்கும்
காய்ச்சி வைத்த பாலென்றாலும் புசியாமல்
காவல் காத்தே கண்ணுறங்கும்.

பெரியோர்கள் சினங் கொண்டு நாயென்றாலும்
பெரிதாகவே பாதுகாப்போம் நாம்
மலிவாய் எங்களுக்கு வந்தே வாய்த்த
மாவீரன் என்போம் பெருமையோடு.

யார் பெரியவர்? யார் மாவீரர் என்பது புரிகிறதுதானே. வார்த்தை களை அளந்து பேச வேண்டும் அல்லாவிடில் துன்பப்பட நேரிடும். அளந்து பேசாதவனுக்கு எதிராக கவிஞர்கள் தமது ஆயுதங்களைத் தூக்கி விடுவார்கள். அதுதான் நடந்திருக்கிறது."

அநீதிக்கெதிராக மிகத் தைரியத்துடன் சமூக. இன. உணர்வுகளுக் கப்பால் குரலெழுப்புகின்ற உன்னதமான கவிஞனை நாம் பெற்றிருக்கிறோம். அவரது கவிதைகள் கடை தழுவியது மாத்திர மன்றி தனிமனிதன், தொழில், ஊர், நாடு, சமூகம், சமயம் என விரிந்திருப்பது மகிழ்ச்சி தருகின்றது. உண்மையான ஒரு எழுத்தாளன் மனதில் பட்டதை அற்புதமாக எழுத்தில் வடித்து விடுவான். அந்த யதார்த்தமே அஸீஸின் கவிதைகளில் நிகழ்ந்திருக்கிறது. அவரது பெரும்பாலான அனுபவங்கள் நமக்கு மிக வித்தியாசமானவையும் புதிதானவையாகவும் உள்ளன.

அதிகமாக எழுதவேண்டும் என்ற ஆவலில் எழுதிக் குவிப்பவன் கவிஞனல்ல. கவிதையை வாழ்க்கையாகக் கொள்ள வேண்டும். வாழ்க்கையே கவிதையாக வேண்டும். அவ்வாறு எழுதுபவனே உண்மையான கவிஞன். அவனைச் சுற்றியிருக்கிற ஒவ்வொன்றும் அவனுக்குக் கவிதையாகிவிடும். அஸீஸின் கவிதையுலகிலும் இது நடந்திருக்கிறது."

கவிதை எழுதப்போனவர்களின் கதை பல உள. அவர்களின் கவிதை இடையில் இல்லாமல் போன கதைகளும் உள. நீலாவணனின் 'முருங்கைக்காய்' இதற்கு நல்ல உதாரணம். சம்மாந்துறை அஸீஸின் 'கடையில் பூத்த கவிதைகள்' என்பதில் கடையுள் கவிதை உருவாகும் அனுபவமும் அவர் மகிழ்ச்சியும் இழையோடுகிறது. கவிஞர் தனது கடையை – பலசரக்குக் கடையைச் 'சுவனத்துக் கடை'யாகக் காணும் அனுபவம் தனி அழகு. அஸீஸின் கடையில் கூலியாய் நின்ற இக்பாலின் அனுபவம் அவரது முதலாளித்துவச் சிந்தனைக்கு எதிரான 'இக்பாலினது நாமம் நீண்டு நிலைக்குமே' என்ற கருத்தாக உருப்பெற்றிருக்கிறது. அவர் சாமான் வாங்கச் செல்லும் 'கல்முனைச் சந்தை'யின் 1970 களில் இருந்த நிலை அவரது கவிதையில் பதிவாகியிருக்கிறது. சந்தையில் நடக்கும் அநியாயங்களையும் அவர் கண்டிக்கத் தவறவில்லை.

கைகட்டி வாய் பொத்தி அடிமை போன்று
கட்டுண்டு வாங்குவோர் மிக்கவுண்டு
எல்லையில்லா அநியாயம் என்ன சொல்வேன்
எவரிதனைக் கேட்பாரோ தெரியாதப்பா

சம்மாந்துறையின் இளைய அரசியல் தலைமைத்துவமாயிருந்து சாதனைகள் பல புரிந்தமர்ஹூம் அன்வர் இஸ்மாயில் முயற்சியால் உருவான ஹிஜ்ரா பொதுச்சந்தையை 'கண்ணெனக் காப்போம்' எனக் கவிஞர் வாழ்த்துகின்றார். ஒரு கவிஞனின் பணி என்ன என்பதற்கு 1986 இல் 'எங்களூர் சம்மாந்துறை' என அவர் எழுதிய கவிதை மிகச் சான்று. இயற்கையைப் பாராட்டி நிருவாக, அரசியல், ரீதியாகக் கண்டிக்கும் அவர் போக்கு விண்டு காட்ட வேண்டியது.

இறை சிந்தனையும் சமய சிந்தனையும் அவர் கவிதையில் ஆங்காங்கே தொனிக்கிறது. அவற்றுள் தன்னைப் படைத்ததை 'ஏன் படைத்தாய் இறைவா' என அவர் வேண்டும் கவிதை சம்மாந்துறை அஸீஸின்

கவிதையாக்கத்திற்கு நல்ல எடுத்துக்காட்டு. அஸீஸின் அத்தகைய கவிதைகளைப் பற்றி விரிவாக குறிப்பு எழுத வேண்டிய அவசியம் இருக்கிறது.

உலக நாட்டு நடப்புக்களைக் கவிதையாக்குவதில் அவர் சாமார்த்தியம் புரிந்திருக்கிறார். அவ்வகையில் அவரது சில கவிதைகளைக் குறிப்பிட முடியும். விவசாயத் திணைக்களம் 1969 இல் நடத்திய போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளைத் தவிர்த்து போடிமார்களை அரசாங்கம் கௌரவித்ததனை வீரத்துடன் அவர் கண்டிக்கிறார்.

கரையிலே குந்தி மீனைச் செதிலிடைக் கோர்ப்போருக்கு
நிலை பெயர் பட்டம் சூட்டும் நியதிபோல் போடிமாரை
விளைநில வேந்தராக்கி விருதளிக்கின்ற தன்மை
பிழை மாபிழை என்று பேசுதே கவிதை நெஞ்சம்.

வான்மதியைப் பார்த்து பல கவிஞர்கள் அதில் மாந்தி பல கவிதைகளை எழுதியுள்ளனர். அஸீஸ் காண்கின்ற வான்மதியுடனான உரையாடல் மிக வித்தியாசமானது. அமெரிக்காவின் அப்பலோ விண்கல ஏவுகணை முயற்சியை 'மாலைப் பொழுதில்' என்ற கவிதையில் அவர் சாடுகிறார். 1973இல் இடம்பெற்ற பொருள் தட்டுப்பாட்டை 'வாழ்ந்தால் பார்' மகளே என ஏங்குகிறார். தொழிலாளிகளின் ஏக்கம் அவருடைய பெரும்பாலான கவிதைகளில் தொனிக்கிறது. விவசாயிகள் பற்றி அவர் சமூக கவிதைகளை இத்தொகுதியில் எழுதியுள்ளமை குறிப்பிடத் தக்கது. அதேபோன்று தோட்டத் தோழிலாளர்களின் உணர்வுகளையும் அவரது சில கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. 'கதையாய் கனவாய் போனதடி' எனத் தொட்டத் தொழிலாளர்களின் இன்னல்களை அவர் பாடுகின்றார்.

நாட்டின் அரசியல் சார்ந்த முக்கியமான சம்பவங்களும் கவிஞரது மனதை தீண்டி இருக்கின்றன. ஸ்ரீ இலக்கப் போராட்டத்தில் உயிரிழந்த 'நாகநாதன்', 'கிபீர் விமானங்களின் மோதலின் பின்னாலுள்ள தெய்வ நீதி, 'மர்ம மனிதர்கள்' பற்றி அவர் எழுப்பும் கேள்விகள் 'வைக்கோல் பட்டறை ஜீவனி'ல் அவர் பூடகமாகப் பேசும் செய்திகள், 'துரத்தப்பட்ட பிச்சைக்காரர்' 'தடைகள்' 'பனங்காய்ப் பணியாரம்' முதலானவையும் 'வெள்ளைத்தாள்' கவிதையில் அவர் சொல்லும் சிவராமின் செய்திகளும் நமது அரசியல் சூழலைச் சித்திரிக்கின்றன.

இதுபோன்று தொகுதியில் இரங்கல் கவிதைகள் பல உள. இக்கவிதைகள் தேசிய ரீதியாகவும் ஊர் ரீதியாகவும் மிக முக்கியத்துவம் பெற்றன. அதன் மூலம் பலரை அவர் பதிவு செய்திருக்கிறார். அஸீஸின் கவிதைகளை வெறுமனே பொருள்சார் அளவு கோல் கொண்டு மாத்திரம் பார்க்க வேண்டியதில்லை. அழகாகவும், அழகியல் உணர்வுகளுடனும் அவரது பல கவிதைகள் பதிவாகியுள்ளன. பல இடங்களில் பேச்சோசைப் பண்பிருக்கிறது. வானொலியில் வாசிப்பதற்கு அவர் எழுதியதால் இத்தகைய பண்பு மிகைத்திருக்கவும் கூடும். அஸீஸ் நமது காலத்தின் மிக முக்கியமான வித்தியாசமான கவி என்பதில் சந்தேகமில்லை.

அஸீஸின் கவிதைகள் மூலம் அவ்வக்கால நாட்டு நடப்புகளையும், ஊர்ச் செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஈழநாடு, செய்தி, சங்கு, வீரகேசரி, சுதந்திரன், தினபதி, இன்ஸான், காங்கிரஸ், விடிவெள்ளி முதலான பத்திரிகைகள் பற்றிய தகவல்களையும் அதன் இலக்கிய, கவிதைகள் பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. சம்மாந்துறை அஸீஸ் சம்மாந்துறைக்கு மட்டுமல்ல ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகில் தனக்கென்று தனித்துவமான பாணியைக் கொண்ட நல்லதொரு கவிஞராகப் பெயர் பெற்றவர். அவரது கவிதைகள் போல அவரும் அவர் வாழ்வும் இனிமையும் அதேபோல் போராட்டமும் நிறைந்தன. அவர் கவிதைகளை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் நமது ஈழத்தின் மொழி, அரசியல், பொருளாதார அம்சங்களை வெளிக்கொணர முடியும்.

சம்மாந்துறை அஸீஸின் கவிதைகளை ஒருங்குசேர வாசிக்கும் சந்தர்ப்பத்தை அவர் நமக்கு வழங்கியிருக்கிறார். அவர் கவிதைகள் எல்லோராலும் வாசிக்கப்பட வேண்டியன. நமக்குள்ளிருந்து மக்கள் கவிஞனாக அமைதியாகக் குரலெழுப்பும் ஒரு கலகக்காரனாகவே சம்மாந்துறை அஸீஸ் எனக்குத் தெரிகிறார். அவருக்கு எமது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் என்றும் உண்டு.

**கலாநிதி றமீஸ் அப்துல்லா**

*தமிழ்த் துறைத் தலைவர்*

*தென்கிழக்குப் பல்கலைக் கழகம்*

*ஒலுவில்*

*0774805646*

*20.01.2016*

## காலப்பதிவுகள்

கவிஞர் சம்மாந்துறை அஸீஸ் எழுதிய 'கடையில் பூத்த கவிதைகள்' நூல் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அறுபதுகளின் பிற்பகுதியில் தினபதி நாளிதழின் கவிதா மண்டலத்தில் எழுதத் தொடங்கிய இவர், இன்றுவரை எழுதிக் கொண்டிருக்கும் கவிஞராக மிளிர்கின்றார். இக்கவிதை நூலின் பெயரும் உள்ளடக்கங்களும் அவரின் வாழ்வியல் நோக்கங்களைத் தெளிவாகச் சொல்கின்றன. அவரின் பலசரக்குக் கடையே முழுவாழ்வாக அமைந்ததால் , அவ்வாழ்க்கையின் ஊடாக தான் கண்டவற்றை – தன் மனதைத் தொட்டவற்றை அழகாகக் கவிதைக்குள் கொண்டுவந்திருப்பது பாராட்டத்தக்கதே.

'பொய்மை கண்டுள்ளம் பொங்கிப் பொருமுவோர் புலவர்' என்று கவிஞர் நீலாவணன்கூறியதற்கமைய அநீதிகளைப் பார்த்து மனம் கொதித்துக் குமுறலோடு அவ்வப்போது கவிதை படைத்தவர் சம்மாந்துறை அஸீஸ் என்பதையும் இத்தொகுதியிலுள்ள பல கவிதைகள் விளக்குகின்றன.

இக்கவிதைகள் அனைத்தும் காலப் பதிவுகளாகவும் சமூக நலனுக்காகக் குரல் கொடுப்பனவாகவும், தான் நேசித்த பெருந்தகைகளின் பிரிவுக்காக மனம் கசிந்து இரங்குவதாகவும் அமைந்து வாசகர் உள்ளத்தைக் கவரக்கூடியதாகவும் உள்ளன.

பொதுவாக 'கடையில் பூத்த கவிதைகள்', யார் விவசாய மன்னன்?, மாலைப் பொழுதில், சீதேவிக் கொழி, நாகநாதா, மர்ம மனிதன், மீன் குப்பை, இளமைத் துடிப்பு, போன்ற கவிதைகள் இதயத்தைத் தொடும் கவிதைகளாக அமைந்துள்ளன.

மேலும் இருபத்தேழு குறுங்கவிதைகளும் குறிப்பிடத் தக்கவையே. அவற்றுள், 'வசந்த காலம்', பட்டாசு, வீ.ஆனந்தன் ஆகியவை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆழமான பார்வையைக் காட்டுகின்றன.

வீட்டோடு கடையும் இணைந்திருந்ததால்
விடுமுறைகளில்லை !
நல்ல நாள், பெருநாள், சுகதுக்கங்கள், புதினங்கள் இல்லை!
விளக்க மறியல் வாழ்க்கை ? வாழ்கின்றார். இக்கவிஞர்.
(சுவனத்துக் கடை)

அந்த வாழ்நாளில், கவிதைக்குக் கருவொன்று கிடைத்துவிட்டது.
கழுத்தையும் தலையையும் நாசியையும்
தொண்டையையும், நாக்கையும், நெருக்குகிறது.
பிரசவ வேதனைபோல்... கடைக்குள்...

கவனமாக வெட்டிவைத்திருந்த வெள்ளைத்தாளையும்
பேனாவையும் எடுத்து முதல் வரிகளை எழுதுகிறேன்...
வேதனை சற்றுக் குறைகிறது. வேருக்கின்றது.
விழிகளில் கைகளில் காந்தம் ஒளிர்கையிலே...

"மூன்று வகை முட்டாசி தாருங்கள்"...ஒருகுரல்
வெற்றிலை பாக்கு சீனி தேயிலை பிஸ்கட். விரைவாகத் தாருங்கள் !
வீட்டில் கல்யாணம் பேசவந்துள்ளார்கள்! மற்றொரு குரல்.

வண்டியில் இருந்தவாறே இன்னொருவர்," ஆயிரம் வைத்துள்ளேன்.
விரைவாய் பால்மா பக்கட் ஒன்றும் மீதியையும் கொண்டு வாங்க"
என்கின்றார்!

"வயலுக்குள் பாம்பு தீண்டியவருக்கு... முதலாளி,
பட்டோலைச் சாமான் விரைவில் தரவேண்டும்"
என்கிறார். இன்னோர் அவசரக்காரர்.

அத்தனை பேருக்கும் சீராய்க் கொடுத்தே
அதற்குப் பின் எழுத வேண்டும் அழகாய் !
முத்தான கவிதைகள் படைத்து
பத்திரிகைகளுக்கனுப்பிப் பிரசுரித்துப் படிக்கும்போது
கடையில் பூத்த கவிதைகள் காதுக்கும் மனத்துக்கும்
இன்பந் தரும் !' என்று கூறுகிறார் சம்மாந்துறை அஸீஸ்.

உண்மையை நேசித்து மக்களோடு உறவாடி வாழ்ந்து கடையும் நடாத்தி கவிதைகளும் எழுதி ஆத்ம திருப்தி அடைந்து வரும் நல்ல கவிஞர் ஆதம்பாவா அப்துல் அஸீஸ். நாங்கள் நல்லதைப் பார்த்து படித்து ரசித்து அதைப் படைத்தவரை நாவார வாழ்த்தி ஊக்கு விப்பதே தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

ஆகவே சம்மாந்துறை அஸீஸின் காலப் பதிவுகளான இக்கவிதைத் தொகுதியை தமிழ் வாசகர் அக்கறையோடு வரவேற்று பணங் கொடுத்து வாங்கிப் படித்துப் பாராட்டவேண்டும். நானும் இக் கவிஞரை மனதாரப் பாராட்டி மேலும் பல நூல்களை வெளியிட எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டுகிறேன். நன்றி.

**மு.சடாட்சரன்,**
ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
பெரிய நீலாவணை, கல்முனை

*10-01-2016*

## பணிவும் பக்குவமும்

'சம்மாந்துறை அஸீஸ்'! எத்தனையோ அஸீஸ்கள் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர்கள் சம்மாந்துறை அஸீஸ் போலாகார். விசித்திரமான ஒரு பிறவியாக அவர் வாழ்வு அமைந்துள்ளது. சில்லறைக் கடை நடத்தும் ஒரு வர்த்தகர் அதேவேளை உலகுப் போக்குடன் உறவாடிய ஒரு கவிஞர் அவருடைய கவிதைகளைப் படிக்கும்போது அவர் மாணவனாக என்னிடம் படிக்கவில்லையே என்ற ஏக்கம். மறுபுறம் நான் மாணவனாக அவரிடம் படிக்கவில்லையே என்ற ஆதங்கம். ஏனெனில் பணிவு, பக்குவம் ஆகிய இரு பண்புகளும் அவரிடமும் அவர் கவிதைகளிலும் காணப்படுகின்றன. மனிதநேயம், எளிமை, பணிவு, பக்குவம் என்பன அவரிடம் மொத்தமாய் திரண்டுள்ளன.

அவருடைய கவிதைகளை ஒவ்வொரு எழுத்தாக படிக்கும் சந்தர்ப்பம் மற்றவர்களைவிட எனக்கு முழுமையாய் கிடைத்தது. அவருடைய எழுத்துக்களை கணினியில் நான் பதிக்கின்றபோது அவற்றினூடாக அவருடைய உணர்வுகளை புரிந்து கொள்ள முடிந்தது. நம்முடன் உறவாடும் மக்ளை மட்டுமன்றி நம்மை அண்டிவாழும் பிராணிகளையும் அவர் விட்டுவைக்கவில்லை. நாயும், கோழியும் அவரின் கவிதைக்குப் பொருளாயின.

எந்தக் கடையிலும் கல்லா என்பது இதயம் எனலாம்.. பொதுவாக கவிதைகள் கவிஞரின் இதயத்தில் பிறக்கும் . ஆனால் சம்மாந்துறை அஸீஸின் கல்லாவில் காசும் பூத்தது. கவிதைகளும் பூத்தன. அவருடைய கடையுடனுறவாடிய அத்தனை உள்ளங்களும் அவருக்கு கவிதையாக மாறியுள்ளன. கடைச் சிப்பந்தி இக்பால், பொருள் கொள்வனவு செய்த முருகன் ஸ்டோர்ஸ் முதலாளி, ஆகியோர் பற்றிய கவிதைகள் அவருடைய இரக்க சிந்தையையும் மனித நேயத்தையும் மானிட உறவுகளையும் பிரதிபலிப்பன.

மேலும் அவரது கவிதைகள் உழவன், தோட்டத் தொழிலாளி, மூட்டை சுமப்பவன், என்போரின் வாழ்வாதார நிலைமைகளையும்

வேதனைகளையும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துவன. பனங்காப் பணியாரம் வாசிக்கும்போதே அதன் சுவையால் நாவூறுகிறது. அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் வல்லமை எல்லாருக்கும் இருப்பதில்லை. அநீதி கண்டு பொங்கி எழும் தன்மை அவரது பல கவிதைகளில் இழையோடியுள்ளன. யார் விவசாய மன்னன்? ,மர்ம மனிதர்கள் என்பன அவற்றுள் சில. கொள்ளையர் பற்றி கூறும்போது ஆவேசத்துடன் பொங்கி எழுகின்றார். "வம்பர்கள் கூட்டத்தை... கம்பத்தில் கட்டிவிட்டு...." என்றும் மர்ம மனிதர்களை "அங்கங்கு மரத்தில் கட்டிவைத்தே..." போன்ற அடிகள் அவரது மனக் கொதிப்பை வெளிப்படுத்துவன.

அவர், தன் மனதில் பட்டதை பட்டென்று கவிதையில் கூறும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதை பல சந்தர்ப்பங்களில் நான் அவதானித் திருக்கிறேன். சம்மாந்துறையில் இந்த ஆற்றல் கவிஞர் ஈழமேகம் பக்கீர்த்தம்பியிடம் இருந்தது. அடுத்து பாவலர் பஸீல் காரியப்பரிடமும் இருந்தது.

இவை தவிர நினைவுக் கவிதைகளும் இரங்கல் கவிதைகளும் அதிகம் எழுதியுள்ளார். காயிதே மில்லத், விபுலானந்த அடிகள், நாகநாதன் என்.போர் நினைவாக கவிதை படைத்தவர் தம் வாழ்நாளில் இறையடி எய்திய பலருக்கும் இரங்கல் கவிதைகளையும் படைத்துள்ளார். தனது தம்பி சம்சுதீன், வீ.ஆனந்தன், இஸ்மாயில் பொறியியலாளர், பட்டின சபைத் தலைவர் அமீர் அலி, டாக்டர் மீராலெவ்வை, அப்துல் மஜீது அமைச்சர், எம்எச்எம். அஷ்ஃரப், யூ.எல்.எம்..முகைதீன் ,ஈழமேகம், ஆமீதுலெவ்வைப் பரிகாரி, மூலிகைக் கடை இப்றாகீம் , மருந்துக்கடை இப்றாலெவ்வை , செலகிக் காக்கா என்று பலருக்கும் இரங்கலாக கவிதைகள் படைத்து உறவினர்க்கும் அனுதாபிகளுக்கும் மன அமைதியைத் தந்துள்ளார்.

இயற்கை, அந்தி மாலை, வசந்த காலம் போன்றவை இயற்கையுடன் அவர் கொண்டிருந்த ,ஈடுபாட்டை வெளிப்படுத்துவன. தனது தாயகமான சம்மாந்துறை பற்றிய கவிதை தாயகத்தின் வளங்களைக் கூறி 1986 வாக்கில் அங்கு காணப்பட்ட அவலங்களையும் குறைபாடுகளையும் வெளிப்படுத்துவனவாகும். பொதுச் சந்தைக் கட்டிடம் திறந்தபோது வெளியிட்ட கவிதை பொதுச் சொத்தை

பேணவேண்டிய கட்டப்பாட்டை வலியுறுத்துகிறது. 'மீன் குப்பை' மீன் கழிவுகளை தெருக்களில் வீசும் பெண்குலத்தைச் சாடி நல்லறிவூட்டுகிறது.

இத்தனைக்கும் மத்தியில் அவரது சமயம், ஆன்மீகம், அறநெறி சார்ந்த கவிதைகளும் உள்ளத்தை ஈர்க்கின்றன இன்பநிறை நோன்பே, அருள் செய்வாய் இறைவா, ஏன் படைத்தாய் இறைவா? நபி மொழி என்பன உள்ளத்தில் உணர்ச்சி ஊட்டுவன.

இவ்விதம் சம்மாந்துறை அஸீஸ், பாரதக் கவி பாரதியாரைப் போன்று எதையும் விட்டு வைக்காது கவிதை படைத்து வருகிறார். ஊரை மட்டுமல்லாது உலகைப் பற்றிய நடப்புக்களிலும் அக்கறை கொண்டு உள்ளதைக் கூறும் துணிவுள்ள கவிஞராகத் திகழ்கிறார்.

எதிர்காலத்தில் இளையோர்க்கு நல்லறிவூட்டும் கவிதைகளைப் படைத்து சமூகத்துக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் வளமூட்ட வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

**கலாபூஷணம் யூ.எல். அலியார் M.A (Ed.)**
சிறந்த நூலுக்கான இலக்கிய விருது (வ.கி.மா.)
இலக்கிய ஆய்வுக்கான முதலமைச்சர் விருது (கி.மா.)
அரச மொழிபெயர்ப்பாளர், சமாதான நீதவான (அ.இ.)

## பல துறைகளிலும் சஞ்சாரம் செய்யும் கவிதைகள்

சம்மாந்துறை அஸீஸ் என்ற புனைவிலிருக்கும் கலாபூஷணம் ஆதம்பாவா அப்துல் அஸீஸ், தனது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த தனது விருப்பத்துக்குரிய இரண்டையும் தொடர்புபடுத்தி "கடையில் பூத்த கவிதைகள்" என்ற பெயரில் கவிதை நூலைத் தொகுத்து வெளியிடுகின்றார். இவருடைய கடையையும் கவிதையையும் பிரிக்க முடியாது. தனது பலசரக்குக் கடையில் சுவர்க்கத்தில் சுவைப்பதுபோல எல்லாவற்றையும் சுவைக்கலா மென்று சுவனத்துக்கடை என்று கவிதை படைத்துள்ளார்.

நூலைத் தன் துணைவியார் ஆஜறாவுக்குச் சமர்ப்பணமாக்கி அவர் இணைந்து ஒத்துழைத்தமையையும், அவரின் சத்தான எச்சங்களையும் விளக்கியுள்ளார். தாய்க்குப் பின் தாரம் என்பதனை எங்கள் உம்மா கவிதையாக்கித் துணைவிக்குச் சமர்ப்பணமாக்கியுள்ளார். பதினான்கு கடுவன்களைத் தம்பிகளாகவும் இருவரைத் தங்கைகளாகவும், தன்னை மூத்த கடுவனாகவும் கொண்டு பதினேழு பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கி தாயின் பெருத்த பண்ணையைக் காட்டுவதற்கு எங்கள் உம்மா கவிதையில் 'தேர்தலில் போட்டியிடு வோர் எங்கள் உம்மாவைக் கேட்டுத்தான் கட்டுப்பணம் கட்டுவர்' என்கின்றார். 'வாக்கு வங்கியாம்' அவர் தாயின் குடும்பம். தன்னைப் பெற்ற தாயைப்பிரார்த்தித்து விட்டுத் - தான் பெற்ற தலைமகனைப் 'புவியாள்வாய்' என்று ஆசிர்வதிக்கின்றார்.

கடையில் பூத்த கவிதையில்'-பலதரப்பட்ட தேவைகளோடு சாமான்கள் வாங்குவதற்கு கடைக்கு வருகிறார்கள். கடுமுடுக்கிகளாகப் பலர். அந்த நண்டுக் கடிக்குள் கவிதைப் பிரசவ வேதனை கவிஞருக்கு. இவர் கடையிலிருந்து கொண்டு கவிதை எழுதியதைக் கூறியுள்ள பாங்குக்காகத்தான் "நண்டு கடியும் பிள்ளைப் பெறும்" என்ற பண்டு மொழி பிறந்ததோவென்று எண்ணத் தோணுகிறது.

தனது சில்லறைக் கடைக்குப் பலசரக்குக் கொள்முதலுக்காக பிரதானமாகக் கல்முனைச் சந்தைக்குச் செல்வார்.

அங்கு, தான் பெற்ற விருப்பு வெறுப்பான அனுபவங்களைக் கல்முனைச் சந்தைக் கவிதையில் கூறுகிறார். கண்ணெனக் காப்போம் கவிதை, சம்மாந்துறை ஹிஜ்றா புதுச் சந்தை திறப்புப் பற்றிக் கூறுகிறது. எங்களூர் சம்மாந்துறையில் ஊர் அவலமும், ஏன் படைத்தாய் இறைவா கவிதையில் மனித அவலமும் கூறப்படுகிறது. இன்பநிறை நோன்பு- நோன்பு திறக்கும் காட்சியை இனிய கவிதை வரிகளால் காட்டுகிறது. நபி மொழியில்- மாற்றார் உரிமைகளை மதிக்கும் பண்பு வலியுறுத்தப்படுகிறது.

விவசாய மன்னன் விருது, உழைக்கும் விவசாயிக்குக் கிடைக்காமல் உறிஞ்சும் போடிக்குக் கிடைத்துள்ளது. என்பதைக் " கரையிலிருந்து செதிலில் காட்டுகிறார். மாலைப் பொழுதில்,"வான்மதியே! என்ன கவலையடி? ஏனழுதாய் ? உன்னழகுப் பொன்னேர் முகமும் பொலிவிழந்து காண்பதென்ன? நெஞ்சத் துயரென்னை நீங்க உரைத்திடுவாய் அஞ்சுகமே! " என்று கவிதை நயம் சொட்டக் கேட்கின்றார். கியூவின் நோக்காடு, மன்னார் வளைகுடாவில் எண்ணெய் கிடைக்க வேண்டுமென்ற அங்கலாய்ப்பு, மேல்நாட்டுப் பாணிகளில் " கால்வயிற்றைக் காக்க இயலாமல் ஆட்டுக் கடா முடியில் வாலிபர்களும் உரித்து அவித்த பனங்கிழங்காய் உலகம் ரசித்திட அரிதட்டு ஆடையிலே வனிதையரும் கட்டாக் காலிகள் போல் கதிகெட்டு அலைகின்றார். என்ற கோபாக்கினியும், விலை ஏறுகிறது, பசி அதிகரிக்கிறது, மூட்டையின் பாரம் குறையவில்லை, கூலியும் உயரவில்லை. இந்த ஏக்கம் - ஏக்கம் கவிதையில், விவசாயக் கடன் கேட்டு உழவன் குரலில் குரல் கொடுத்து , உழைப்போம் தோழாவில் உழைக்க ஏவி, நாடும் வீடும் நமதன்றோவில் கடன்களை இறுப்பதற்கு உழவர்களை வேண்டியவர், கல்லோயா தீரத்துக் கழனிகளில் நெல்விளைவித்துக் கப்பலிலே அரிசி ஏற்றுமதி செய்யக் கனவு காண்கிறார்- மனைதோறும் நல்லுழவர் கவிதையில் . இலவச சவர்க்காரம் கவிதையில் எத்தனையோ கூறிவிட்டு இறுதியில் "மனிதனை மனிதனாய் மதித்து வாழ மறந்தோரின் இதயத்தின் அழுக்குக்கறை கணப் பொழுதில் போக்கி நல்ல கண்ணியவானாக்கச் சவர்க்காரம்"

தேடுகிறார் .சீதேவிக் கோழி செத்த கவலையையும், அதனால் அடைந்த பலாபலன்களையும் கூறியதோடு அதன் வாரிசுகளைக்

கொண்டு ஆறுதல் பெறுவதாகக் கூறியுள்ளார். மலை வளம் பெருக்கி நாட்டின் நில வளத்தை உயர்வாக்கும் தோட்டத் தொழிலாளருக்காகக் குரல் கொடுத்துப் பேசுபவர்கள் , அவர்களின் வாழ்வுத் தரமுயர உழைத்தார்களா என்று கேட்கிறார்- கதையாய் கனவாய்ப் போனதடி கவிதையில்.

அநியாயம் என்று துப்பாக்கிக் கலாச்சாரத்தைத் தொட்டு காலி முகத் திடலில் நாகநாதனை அடித்தது, கிபீர் விமானங்கள் கொடுமை செய்த நிலையில் மோதியழிந்தது, கிறீஸ் மர்ம மனிதர்களின் வருகை, ஆகியவற்றில் ஆத்திரம் பல டிகிறிகள் வரை ஏறுகிறது. இவைகளுக் கிடையில் தமிழ் மொழிக்கு உரிமை பெற 1971 ஆம் ஆண்டு முஸ்லிம்களை அழைத்துள்ளார். பள்ளிச் சிறார்களுக்கு வீதி விதிமுறைக் கவிதையை கூறியுள்ளமை பாச உணர்வை வெளிப்படுத் துகிறது. மீன் குப்பை கவிதை மிகத் தேவைப்பட்டதொன்றாக அடையாளப்படுகிறது. பனங்காப் பணியாரம் சுட்டுக் காட்டுகிறார். வாயூகூகிறது தின்றால் எப்படியென்று பார்ப்பதற்கு அவரது பலசரக்குக் கடையிலாவது கிடைக்குமா பார்க்கலாம்.

1968 ம் ஆண்டு தனது முறுக்கேறுகின்ற பருவத்தில் உருவான இளமைத் துடிப்புக் கவிதை, இனிய இசையுடன் விரக தாபத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து - இயற்கையைப் பெண்ணுருவத்தில் ஓசை நயத்துடன் காதலிக்கிறார். மற்றுமொரு கவிதையில் தங்கச் சிலையொன்றுடன் கேள்விகள் கேட்டு விடையெடுத்துத் தலையிலிருந்த குடத்தையும் இறக்கி மகிழ்கிறார். இந்தப் பருவம் ஆரைத்தான் விட்டது? தொழில் தேடும் படலத்தில் இருப்பதைக் கூறும் கவிதைகளின் இறுதியில்"பாடுபட்டும் பலன் கிடைக்காமல் பரிதவிக்கின்றேன் தோழா " என்றும்,

"கல்வி கற்றுத் தொழில் தேடி
காலச் சுவட்டில் அலைகையிலே
வெல்லும் வாழ்க்கைப் போராட்டம்
விரிந்து கவியாய்ப் பீறிடுதே"

என்று பாடுகிறார்.

எரிந்த நாணற் காட்டுக்குள்ளிருந்து வந்த பறவைகளுக்கு அடைக் கலம்வழங்குவது, செய்த குற்றம் தெரியாமலே தண்டனை அனுபவிக்கும்

அவலம், புலம் பெயர்ந்தோரை அழைக்கும் பணி, ஊடகவியலாளர் சிவராமுக்காக உருகுவது, பழைய நண்பர்களுடன் நல்லூர்க் கந்தன் பதியின் மணற் பரப்பின் வெளியில் , பனங்கூழ் பருகவும், பழைய சோனகத் தெருவில் உலாவருவதற்கும் ஆசைப்படுவது, தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளர்களுக்குக் கல்வீட்டுக் கனவுகள், மண்வீட்டுக் கதை யாகுமா? ? என்று கேள்வி கேட்கும், பஞ்ச சீல நெஞ்சங்களைப் பாவநாற்றச் சாக்கடைகளாகக் காணுவதும், மன்னாரில் எண்ணெய் வளக் கனவின் மிதப்பு, தன்னுயிர் போகும்போதும் இன்னோர் உயிர் காத்த கவிஞர் வீ.ஆனந்தனின் கண்ணீர்ச் செய்தி, இப்படிப்பற்பல செய்திகள் அவ்வருமைக் குறும்பாக்களில் விரவியுள்ளன. விசேடமாகப் பேருந்துப் பயணத்தில்

" பிரயாணி தூங்கிவந்தால் சொகுசுப் பயணம்
சாரதி தூங்கினால் கடைசிப் பயணம்"

என்று கூறியுள்ளது இவைகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் இருக்கிறது.

இறந்தவர்களுக்கென்று இரங்கற்பாக்கள் பல இருக்கின்றன. சொந்த தம்பி சம்சுத்தீனுக்கும், தாய் மாமன் ஆமீதுவெவவைப் பரிகாரிக்கும், வாப்பாவுக்கும், மாமனார் மீராசாய்வுக்கும், இதயங்கனிந்து இரங்கல் வழங்கியுள்ளார். ஊர்ப்பிரமுகர்களான இஸ்மாயில் என்ஜினியர், மருமக்கள் அப்துல் மஜீத் பீ.ஏ., அமீர் அலி சேர்மன் அவர்களுக்கும், எழுதப்பட்டிருக்கிறது. ஈழமேகம் பக்கீர்த்தம்பி, தலைவர் அஷ்ஃரப், யூஎல்.எம். முகைதீன், டொக்டர் மீராலெவ்வை ஆகியோர்களுக்கும் இரங்கற் கவி படைத்துள்ளார்.

விபுலானந்தர் புகழ் பாட வந்தவர்,

"தக்க பெரு நிதியாக ஈழம் கண்ட தமிழூற்றை வற்றாத
கல்வியாற்றை" என்று புகழ்கின்றார்.

மலையக மக்கள் முன்னணியின் பெருமகன் சந்திர சேகரனுக்கும் , கல்முனை முருகன் ஸ்டோர்ஸ் வேலாயுதம் பிள்ளைக்கும் இரங்கல் பாடியுள்ளார்.

ஸமீம் ஸ்டோர்ஸ் முகம்மதலி, அவர் தம்பி – ஆயுள்வேத மருந்தக சொந்தக்காரரர் இப்றாலெவ்வை, செலகிக்காக்கா, முகம்மது ஸமீம் என்பவர்களும் இறைப்பெய்தியபோது கவிஞர் அஸீஸ் அவர்களால் பாடல் பெற்றுள்ளனர் இரங்கலாக. மேலும் முஸ்லிம் லீக்கின் தலைவராயிருந்து மறைந்த காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்களுக்கும் இரங்கல் கவிதை வழங்கியுள்ளார்.

இவ்வாறு பல துறைகளில் சஞ்சாரம் செய்து பல அருமையான கவிதைகளைத் தந்துள்ளார். திறப்பு விழாக்கள், சிறப்பு மலர் வெளியீடுகளில் இவரது கவிதைகளைக் காணலாம். மலைநாட்டுத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் பிரச்சினைகளில் இவருக்கு அதிக அக்கறை இருந்துள்ளதை இவரது கவிதைகளில் இடையிடையே காணக்கூடியதாக உள்ளது. தினபதி கவிதா மண்டலம் இவருக்காகவே உருவானது போல தெரிகிறது. இவரது கவிதை உணர்வுகளுக்கு தினபதி, வீரகேசரி, சுதந்திரன், இன்சான், விடிவெள்ளி, சங்கு, காங்கிரஸ், சில இடை வெளியீடுகள், பிறை எப்.எம். சூரியன் எப்.எம்., ஊவா சமூக வானொலி, ஈழநாடு வார மலர் ஆகியன ஆதரவு நல்கி ஊக்கமளித்துள்ளன.

இக்காலத்து நக்கீரர்களின் கவிதைகள்கூட இப்போதைய சஞ்சிகைகள் என்னும் சங்கப் பலகைகளில் நீரிழுப்பின் பின்னால் இழுபட்டுக் கழிபட்டுப் போகின்றன. ஆனால் இந்த நூலில் உள்ள அநேகமான கவிதைகள் பலகையால் ஏற்கப்பட்டுப் பிரசுரமாகியிருப்பது கவிதை களின் சிறந்த கணிப்பீட்டுக்கு வாய்ப்பளித்துள்ளது. இந்த நூலுக்கு ஒரு சிறப்புரை வழங்குவதற்கு எனக்கும் வாய்ப்புக் கிடைத்தமையை யிட்டு மகிழ்கின்றேன்.

**கலாபூஷணம் கலைமணி ஏ.ஸி.இஸ்மாலெவ்வை**
*சம்மாந்துறை*
*0779496704*
*15.01.2016*

## அற்புதமான கலைஞர்

கவிஞர் சம்மாந்துறை அஸீஸ் தேன் சொட்டும் பேனாவின் சொந்தக்காரர். சம்மாந்துறையைபிரபலப்படுத்துவதிலும் அதன் கீர்த்தியை ஓங்கி ஒலிப்பதிலும் நிறையவேசாதித்தவர். இயல்பான கவிதை நடையினாலும் ஆடம்பரமில்லாத பதப் பிரயோகங்களாலும் தன்னுடைய ஆக்கங்களை அழகுபடுத்தியவர். முற்றத்தில் நிரம்பிக்கிடந்த அழகிய மொழியை தன்னுடைய வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட அம்சங்களுடன் பிசைந்தெடுத்து கலாபூர்வமாச் செதுக்கி அழகு பார்ப்பதில் வெற்றிபெற்றவர். நாளைய இலக்கியச் சொல்நெறியை நேற்றே கண்டுபிடித்துக் காரியமாக்கிய அற்புதமான கலைஞர்.

பிரபலத்தில் ஆர்வமற்று விருதுகளுக்காகப் படியேறித் திரிவதை வெறுத்து தன்னுடைய பணியை அபாரமாகக் காரியசித்தியுடன் சாதித்துக் காட்டியவர். இயல்பாகவே அன்பும் கருணையும் நிதானமும் ஆரவாரமின்மையும் அவருடைய குண நலன்களாய் அமைந்துவிட்டன. இதனால் இலக்கியமும் மொழியும் இவரின் இயல்பான குணநலன்களுடன் பொருந்தக் கூடியவகையில் வெளிப்படுகின்றன. வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் மென்மையையும் எளிமையையும் தனது அணிகலனாய் இவர் கொண்டமையினால் மிகக் கடினமான விடயதானங்களை மிகஎளிதாய் எடுத்துரைத்தல் இவருக்குச் சித்திப்பட்டுவிட்டது.

அனேகமான படைப்பாளிகளிடம் இருப்பதாக நம்பப்படுகின்ற தொழிலின் மீதான பொறுப்புணர்ச்சி இன்மை இவரிடம் அறவேகாணப்படாத பண்பாகும். தன்னுடைய தொழிலை இளமைக் காலத்திலிருந்தேமிகக் கண்ணியமாகச் செய்துவருகின்ற ஒருசில்லறைக் கடைமுதவாளி இவர். அது போலவே நிதிக் கையாள்கையிலும் நிதிநிருவாகத்திலும் தன்னிலை அறிந்து நடந்துகொள்ளும் தனிமனித ஆளுமைகள் நிரம்பப் பெற்றவர்.

சிறு வயது முதலே தினபதி கவிதாமண்டலத்தின் மூலம் ஏராளமான இவரின் கவிதைகள் வெளியிடப்பட்டுள்ளன. திக்வெல்லகமால், பாலமுனைபாறூக் முதலியவர்களின் சமகாலத்தில் இருந்தே எழுத்துலகில் பிரவேசித்து இன்றுவரை தீவிரமாக எழுதிக் கொண்டிருப்பவர். பத்திரிகை மட்டுமல்லாது வானொலி முதலிய ஊடகங்கள் மூலமாகவும் பல்வேறு மட்டங்களிலும் வாசகர்களையும் இரசிகர்களையும் சம்பாதித்துக் கொண்டவர்.

சம்மாந்துறையில் கடந்த ஐந்து தசாப்தங்களாக எழுதிக் கொண்டிருக்கும் இவர் நாவலர் ஈழமேகம், பாவலர் பஸீல் காரியப்பர், மாறன் யூ. செயின், கவிமணி ஏ.ஸி. இஸ்மாலெவ்வை முதலியவர்கள் வரிசையில் முக்கிய இடம்பிடித்துள்ளார். இந்தப் பிரதேசத்தின் மூத்தபடைப்பாளிகளான புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன், மருதூர்க் கொத்தன், ஜீவா ஜீவரெத்தினம், அன்புமுகைதீன் முதலியவர்களின் கவிதைப் பாரம்பரியத்தை வருஷித்துக் கொண்டவர்.

இவரின் படைப்பாற்றலும் ஆதர்சமும் என்போன்றவர்களுக்கு வழிகாட்டின என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவருக்கு என்றும் என் பிரார்த்தனைகள்.

**மன்சூர். ஏ. காதிர் M.Ed.**

*சின்னஆலிம் சதுக்கம்*

*சம்மாந்துறை*

*01.12.2015*

## அனுபவக் கரைசலின் பிரதி

தென்கிழக்குப் பிரதேசத்தில் சம்மாந்துறையின் அரசியல், எழுத்திலக்கியம், விருந்தோம்பல், மொழிக் கையாளல் என எல்லாவற்றிலும் தனித்துவமும் அடையாள மேன்மையும் உண்டு. ஒரு தசாப்த காலத்துக்கு மேலான எனது அனுபவக் காட்சியின் வெளிப்பாடே இது.

ஈழமேகம் பக்கீர்த்தம்பி, பாலவர் பஸீல் காரியப்பர், செயின் மாஸ்டர், றமீஸ் அப்துல்லா என நீண்டு செல்லும் பட்டியலாளர்கள் அனைவருமே தமது அடையாளங்களுடன் இலக்கியத்தை ருசித்து வெளிப்படுத்தி வருபவர்கள் என்பது எமது பார்வை. அந்த தொடரில்தான் அஸீஸ் காக்காவையும் நோக்க முடிகிறது.

பல்கலைக்கழகக் காலம் மற்றும் அல் மர்ஜானின் தமிழ்ப்பாட ஆசிரியராகப் பணியாற்றக் கிடைத்த ஒரு தசாப்த கால இடைவெளி . இவற்றுக்குள் இப்பிரதேச வெளிப்பட்டாளர்களில் ஈழமேகத்தைத் தவிர மற்றோருடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டு அவர்களால் வழிப்படுத்தப்பட்ட அல்லது வழிப்படுத்தப்பட்டுவரும் ரசனை மாணவரில் நானும் ஒருவன்.

"தம்பி, அஸ்ஸலாமு அலைக்கும். நான் அஸீஸ் காக்கா கதக்கன் கிளி. வீசிர பேட்டிய தினகரனில் பாத்தன் மகன். நல்லா இருந்திச்சி. நல்லம் தம்பி. நல்லம்." என்ற எனது எழுத்திற்கான இறுதி தொலைபேசி அழைப்பு வரை எனது ஆக்கங்களை எங்கு பார்த்தாலும் வாழ்த்தி, செப்பனிடும் மூத்த படைப்பாளி ஒருவரின் முதலாவது வெளிப்பாட்டிற்கு குறிப்புரை எழுதக் கிடைத்தமையை மேற்பேறென்றே கருதுகிறேன்.

கல்வித்தரம், சமூக தொழிலியல் சார் அந்தஸ்து இவைகளைக் கொண்டு மாறி மாறி சொரிகின்ற குறிப்புரையாளர்களிலிருந்து விலகி அஸீஸ் காக்காவில் காலம், அவரது அனுபவம், முதிர்ந்த வயதிலும்

இளமையான எழுத்துக்கள், சமூகப் பார்வை, இவைகளைக் கொண்டு நோக்கும்போது ஒரு சிறந்த படைப்பாளிக்குரிய பண்புகளை நான் அவரிடம் காண முடிகிறது.

மேதாவித்தனமாக நின்று வடிசீலை கொண்ட பார்வையிலிருந்து மாறி படைப்பாளியின் வெளிப்பாடுகள் , அவனது உந்துகை, அவனது சாரம் என்ற அடிப்படையில் நின்று தரிசிக்கும்போது ஒரு சமூகத்தின் அளவுகோலாகவும் மீட்டலின் அடையாளமாகவும் முற்போக்கு எழுத்தாளனாகவும் அஸீஸ் காக்காவை நோக்காமல் இருக்க முடியாது.

கடையினை முன்வைத்து விரியும் கவிதைகள், உறவுகளை அரவணைக்கும் கவிதைகள், மரணித்தவர்களின் உண்மை கூறும் கவிதைகள், ஊருக்காய் உரமிட்ட கவிதைகள், மற்றும் சமய சமூக ,எதிர்ப்பியல் கவிதைகள் என பல தரப்பட்ட சாரங்களையும் தன்னகத்தே கொண்டு விரிந்துள்ளது 'கடையில் பூத்த கவிதைகள்' கவிதை முடுக்கிவிட்டால் அதனை எப்படியாவது தள்ளிவிட எத்தனிக்கும் பொழுதுகளும் அப்பொழுதுகளை கொள்ளைகொண்டு போராடும் இயல்பியல் நடவடிக்கைகளும் எடுத்த கருத்தினை மறக்கடிக்கின்ற அல்லது மாற்றிவிடுகின்ற வேதனையை எழுத் தாளர்கள் அனுபவிக்காமல் இருக்க முடியாது. அப்படியான ஒரு யதார்த்தத்தை நம் முன் கொண்டுவருகிகிறார் அஸீஸ் காக்கா" கடையில் பூத்த கவிதை"க்குள்.

"வெட்டிவைத்திருந்த வெள்ளைத் தாளையும்
பேனையையும் எடுத்து முதல் வரிகளை எழுதுகிறேன்.
வேதனை சற்றுக் குறைகிறது வேருக்கிறது..." என

ஆதன் ஆரம்பத்தைக் கூறும் கவிஞர் இடையில் ஏற்பட்ட உணர்வுகளை

'மூன்று வகை முட்டாசி தாருங்கள்
இந்த ஐந்து ரூபாவுக்கு என்றான் ஓர் துடிப்பான பையன் .
எத்தனை நாள்களாய் யாரிடம் சேர்த்தானோ அந்தப் பணத்தை
வெற்றிலை பாக்கு சீனி தேயிலை பிஸ்கட் விரைவாகத் தாருங்கள்
எங்கள் வீட்டில் கல்யாணம் பேசவந்துள்ளார்கள் ஆட்கள்
என்றோர் இளைஞன் வேகமாகக் கேட்கிறான்."

ஏன தொழிலின் போக்கினையும் கவிதையின் அனுபவத்தையும் கூறி இருக்கும் பரிமாறலுக்கு பலமான கைதட்டலைக் கொடுக்காமல் இருக்கமுடியாது.

உறவுகளுக்குக் கவிஞர் முக்கியத்துவம் கொடுக்கிறார். இன்ப துன்பங்களுக்குள் நின்று முட்டுக் கொடுத்து ஐவரையும் உருவராக வளர்த்தெடுத்து பாருக்கு நாற்றாக்கியதாக மனைவிக்கு சமர்ப்பணம் கூறும் கவிஞர் எங்கள் உம்மா, வாப்பா, மகன் உவைஸ், முதலாம வனாகக் கிடைத்ததும் எழுதப்பட்ட 'புவியாள்வாய்' என்ற கவிதை உள்ளிட்டவை அஸீஸ் காககாவின் உறவுகளின் தேடல்களை கட்டியம் கூறி நிற்கும் படைப்புக்களாகும்.

உழைப்புக்கும் உழைப்பாளிகளுக்கும் மேலிடம் வழங்கும் போக்கு அஸீஸ் காக்காவின் கவிதைகளில் மேலோங்கி நிற்கிறது. இக்கவிதைகளில் அநீதிக்கெதிரான குரல் தாளமாக வெளிக் கிளம்புகிறது. கல்முனைச் சந்தை, யார் விவசாய மன்னன், ஏக்கம், உழவன் குரல், உழைப்போம் தோழா, மனைதோறும் நம்முழவர், கதையாய் கனவாய் போனதடி, முதலிய கவிதைகளில் உழைப்பின் மேன்மை தெரிகிறது. சம்மாந்துறையின் தொழில் முதன்மைக்கேற்ப உழவர்களே இங்கு தலைமகனாகின்றனர்.

உழவர்களை ஓரங்கட்டிவிட்டு தொழின் திறன் பயிற்சிப் பார்வை யிடலுக்காக 1969 இல் அரசு போடிமார்களை இந்தியாவுக்கு அனுப்பியது. இதில் பிழை காணும் கவிஞர் தமது ஆதங்கத்தை 'யார் விவசாய மன்னன்?'கவிதையில் பதிந்துள்ளார். சுபத்திரனில் 'ஆண்டவன் நீதான்' கவிதையின் சாரமும் வேகமும் இதிலும் தெரிகிறது. கால ஒன்றிணைப்பின் வெளிப்பாடாக இத்தன்மை இருக்கலாம்.

'ஏக்கம்' என்ற கவிதையில் மூட்டை சுமக்கும் நாட்டாமைத் தொழி லாளர்கள் மீதான மனிதாபிமான உணர்வு மேலோங்கி நிற்கிறது. அஸீஸ் காக்காவின் கவிதைகளில் மனிதாபிமானத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளதுடன் கவிஞரே பாத்திரமாக மாறுகின்ற படிமமும் பரவலாகியுள்ளது.

"அன்று பெற்ற கூலியையே
இன்றும் நாங்கள் பெறுகின்றோம்
என்றோ எங்கள் வாழ்வுயரும்ஏக்கம் தீரும் நாள் வருமோ ?

என்பது ஏக்கத்தின் உதாரண வரிகளாகும். சமூக விடயங்களை வேகமாக எடுத்தாளுந்திறன் அஸீஸ் காக்காவிடம் உண்டு. அநாகரிகத்தை நமக்கான நாகரிகமாகக் கொள்ளும் நாதியற்ற செயலைக் கண்டிக்கிறார். இஸ்லாமிய ஆடை என்ற பெயரில் சில 'அபாயாக்கள் அரிதட்டு சல்வாரிகளை முந்திச் செல்லும் நிலைக்கு ஆகிவிட்ட இன்றைய இஸ்லாமிய பெயர்தாங்களுக்கு 'திரிந்திடுவாய்' தலைப்பு நல்லதொரு அழைப்பாகும்.

"உரித்தவித்த பனங்கிழங்காய் உலகத்தார் ரசித்திடவே அரிதட்டு
ஆடையிலே அலங்கரித்து அலைகின்ற கட்டாக்காலி போல்
வனிதையர்கள் சிலபேரும்..."

என்ற வரிகளில் திருத்தப் பதிவு இடம்பெற்றுள்ளது.

இரங்கல் கவிதைகள் இத்தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தனிப்பிரதியாக்கியிருந்தால் அவற்றின் பெறுமானம் அதிகரித்திருக்கும். சம்சுதீன் தம்பியில் தொடங்கி ஆமீதுலெவ்வைப் பரிகாரி, வாப்பா, விபுலானந்தர், ஈழமேகம், அப்துல் மஜீது பீ. ஏ, யூ எல் .எம். முகைதீன், அண்மைய வித்தியா வரை அப்பட்டியல் தொடர்கிறது.

சம்மாந்துறையின் நிரப்பப்படாத அரசியல் மஜீது எம்.பி. அவரிடம் ஏச்சும் அறையும் பட்டால் நாம் எதிர்பார்ப்பது நிச்சயம் என சம்மாந்துறையூரார்கள் கூறக் கேள்வியுற்றுள்ளேன்.

"சுட்டாலும் வெண்மை தரும் சங்கு அவர்
சுடு சொல் கேட்டாலே வெற்றி நமக்கே
காட்டாற்று வெள்ளமாம் அவர் நெஞ்சம் தினமும்
கலங்கும் ஏழைகட்கும் அப்துல் மஜீதே தஞ்சம்"

ஏன்ற வரிகளில் அவரைப் பற்றி மேலெண்ணப்பதிவு உயர்கிறது.

முஸ்லிம்களின் தலைவர்கள் எனப் பலர் தங்களை அடையாளப் படுத்தியபோதும் அஷ்ஃரப் என்ற நாமத்தை எவருமே முந்திவிட முடியாது.ஏசியவர்களும் எதிர்த்துப் பேசியவர்களும் கூட எந்தக் கட்சியில் வலம் வந்தாலும் அவர் முகம் காட்டியே வியாபாரம் செய்ய வேண்டும் என்ற அளவிற்கு மாறியுள்ள பெருந்தலைவர் அவர். அதிருப்திகள் எதிர்ப்பலைகள் எதுவுமே வேகாமல் இன்றும் கட்சிக்காக வாக்களிக்கும் போராளிகளை உருவாக்கி நல்லதொரு அடித்தளமிட்ட சாணக்கியத் தலைவர் அவர் ..கட்சியை ஆரம்பித்து வளர்த்து முதல் மரணித்தது வரையிலான அம்சங்களை' எங்கே மறைந்தாயோ எம் தலைவா' என்ற தலைப்பில் சாரப்படுத்தியுள்ளார் அஸீஸ் காக்கா.

சாட்டுப் போக்கிற்காய் தொழில் வழங்கும் தலைமையாக அவர் இருக்கவில்லை. கட்சி, இன, ஊர் வேறுபாடுகளின்றி தொழில் கொடுத்தார். தோழில் துறையால் பலரை மனிதராக்கிய பெருமை அவருக்கு உண்டு. சிங்கள தமிழ் பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிர சிற்கு வாக்குகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பினை இன்றுள்ள அரசியலாளருக்கு தனது அமைச்சின் மூலம் ஏற்படுத்தியவர்

"கப்பல் துறையும் புனர்வாழ்வும் புனரமைப்பும்
காலத்தால் அழியாதிருக்க
தப்பாமல் வேலை வாய்ப்புக்களை
தாராளமாய் வழங்கினீரே"

என்கின்ற பகுதியில் இதனைக் காண முடியும்.

கைக்கூ வடிவத்தைத் தழுவிய சிறிய ரக கவிதைகள் இதில் உண்டு. அவரது ஏனைய கவிதைகளில் இல்லாத இறுக்கமும் படிமமும் பெறுமானமும் இக்கவிதைகளில் மேலெழுந்துள்ளது என்றே கூறலாம். இவற்றில்

"கூரையில் சுரக்காய் கொட்டுக்குள் நெல்லு - முடா பானைக்குள் அரிசி வங்கியில் சேமிப்பு யாரிடமும் கையேந்தா ஊரார் நாங்கள் - அன்று துரத்தப்பட்ட பிச்சக்காரரானோம்" என்ற "துரத்தப்பட்ட பிச்சைக் காரர்கள்" கவிதையில் வெளியேற்றப்பட்ட அனுபவத்தைத் தாங்கிய மக்களின் உணர்வு பற்றியும்

“தலைநகரிலிருந்து - இரவில்ஊருக்குத் தூரப்பயணம்
பிரயாணி தூங்கி வந்தால் சொகுசுப் பயணம்
சாரதி தூங்கினால்
கடைசிப் பயணம்

எனும் ‘பேருந்து‘ கவிதையில் விபத்து எச்சரிக்கை பற்றியும் கூறும் திறன் ரசிக்கத்தக்கதாக உள்ளது.

எழுதத் தொடங்கிய காலமுதல் எழுதிக் கொண்டே இருக்கும் ஒருவராகவும் வானொலிகளை இன்னும் பயன்படுத்தும் கவிக் குரலாளராகவும் நல்லதொரு பல்துறை வாசிப்பாளராகவும் சுவைஞ ராகவும் தன்னை இந்த வயதிலும் அடையாளப்படுத்தியுள்ள அஸீஸ் காக்காவின் “கடையில் பூத்த கவிதைகள்” காலத்தின் பதிவு..

இத்தொகுதி அஸீஸ் காக்காவின் அதீத பிரயத்தனத்தின் வெளிப் பாடு. அஸீஸ் காக்காவின் முதுமைப் பருவத்தில் கிடைத்த முதற் குழந்தை இது.

அவரது எழுத்துக்களில் எளிமையும் வேகமும் உறுதியும் தெரிகிறது. பேச்சுத்தமிழும் செந்தமிழும் இத்தொகுதியில் கைகோத்தாடுகிறது. கலாபூஷணம் ஆதம்பாவா அப்துல் அஸீஸ் அவர்களின் இத்தொகு திக்குள் பயணிக்கும் எம்போன்ற இளவல்களுக்கு இறந்த காலத் தடயங்கள் நிறையவே கிடைக்கின்றன.

இதனுடன் நின்றுவிடாமல் மீதமுள்ள படைப்புக்களையும் விரை வாகத் தந்து வாசிப்புலகத்தை உசார்ப்படுத்தவேண்டுமென பணிவுக் கட்டளை இடுவதுடன் இம்முயற்சியை இலக்கிய உலகு உவந்தேற்று அஸீஸ் காக்காவை தட்டிக்கொடுக்க வேண்டும் என எதிர்பார்க் கின்றோம். இதுவே வாசகர்களின் உண்மைப் பணியும் கூட. இளமை யின் துடிப்பல்ல இது. முதுமையின் இளமை.

வாழ்க வளமுடன்.

**ஜெஸ்மி எம். மூஸா**
522C, ஸம்ஸம் வீதி
மருதமுனை-03
0773624690
01.09.2015

## அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை அகமகிழ்கிறது!

நாம் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல இலக்கியவாதிகளை உள்ளடக்கியதாக மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையினை தாபித்து அதனூடாக இனங்களினதும் கலாசார ரீதியாகவும் வாழ்வியல் ரீதியாகவும் ஒரே தாயின் பிள்ளைகள் போன்று வாழ்ந்து வரும் வேளையில் இன்னல்லுறவை மேலும் வலுப்படுத்தும் உறவுப்பாலமாக செயற்படவேண்டும் என்பதே எம் பேரவையின் இலக்காகும். அதனை நோக்கியே நாம் பயணிக்கிறோம்.

நாம் படைக்கும் இலக்கியமானது மனித வாழ்வியலையும் மானிட நேயத்தையும் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். இலக்கியத்துக் காகவே இலக்கியம் என்ற புரையோடிப்போன தத்துவம் இன்றைய நவீன சமுதாயத்துக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்ற உண்மையை உணரும் காலம் இன்று. இலக்கியவாதிகள் படைக்கும் இலக்கியமானது மனித நேயம் மனித மேம்பாடு இன ஒற்றுமை என்பவற்றை இலக்காகவும் இலட்சியக் கோட்பாடாகவும் கொண்டிருக்க வேண்டும்.

அத்தகைய உரிய குறிக்கோளுடன் எதிர்காலத்தில் எமது அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கிறது. எமது பயணத்துடன் கலாபூஷணம் அஸீஸ் அவர்களும் இணைந்து கொண்டுள்ளார். இவரது கடையில் பூத்த கவிதைகள் அனைத்தும் மிக ஆழமான சமூக உணர்வுகளையும், சமூக இணைப்பினையும் வலிந்து நிற்கின்றன.

அஸீஸ் மாமாவின் எழுத்துக்களில் அதிக நாட்டம் கொண்டவன் நான். எனது ஒவ்வொரு செய்ற்பாடுகளுக்கும் நேரிலும் தொலை பேசி ஊடாகவும் வாழ்த்துக்களையும், ஆழமான கருத்துக்களையும், தெரிவித்துக் கொள்வது இவரது சிறப்பாகும்.

மாமாவின் எழுத்துக்களில் ஆழமான கருத்தும் உறுதியும் தெரிகிறது. பேச்சுத்தமிழுக்கும், செந்தமிழுக்கும் இத்தொகுதி பறைசாற்றுகிறது. அழகாய் கல்லாவில் பூத்த கவிதைத் தொகுப்புக்குள் பயணிக்கும் எம்மைப் போன்ற ஆர்வம் காட்டும் ஆர்வலர்களுக்கு பழமையும், தொல்லியல் கருத்துக்களும், வரலாற்றுத் தடயங்களும் அதிகமாகப் பதிவாகியுள்ளது. மாமாவின் கவிப்புலமை இலக்கிய உலகுக்கு புதிய உந்து சக்தியாக அமையும் என்பது திண்ணமே. வளமுடன் இனிதே தொடர்ந்து படைப்புக்கள் வெளிவரவேண்டும் என எதிர் பார்க்கின்றேன்.

**வரலாற்று ஆய்வாளர் ஜலீல் ஜீ**
*தாபிதத் தலைவர்*
*அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர்*
*மேம்பாட்டுப் பேரவை*
*0779802423*

*07.01.2016*

## சம்மாந்துறையின் கவிதை ஊற்று

நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி, பாவலர் பஸீல் காரியப்பர், மாறன் யூ.செயின், மன்சூர் ஏ. காதிர் என்று நீளும் கவிதை ஆளுமைகளைப் பிரசவித்த சம்மாந்துறைப் பதியின் இன்னுமொரு கவிதை ஊற்று ஆதம்பாவா அஸீஸ் அவர்கள்.

ஊரின்மீது கொண்ட பற்றுதனில் , தனது பெயருக்கு முன்னால் ஊரின் பெயரையும் சேர்த்துக் கொண்டு 'சம்மாந்துறை அஸீஸ் எனும் பெயரில் மிக நீண்ட காலமாக எழுதிவருபவர் இவர்.

தினபதி கவிதா மண்டலம் தந்த அரவணைப்பில் அறிமுகமாகிய இக்கவிஞரின் கவிதைகள் அக்காலத்தில் அடிக்கடி பிரசுர களம் கண்டன.

எளிமையான சொற்கள், பாமரரும் படித்தின்புறக்கூடியதாக அமைந்த- அவர்களுக்குப் பரிச்சயமான சிக்கலற்ற மொழிநடை, ஓசை நயம் என்பன இவரின் சிறப்புக்கும் மக்கள் ஈர்ப்புக்கும் காரணமாய் வளம் சேர்த்தன.

"மூட்டை சுமக்கும் என் தோழா முதுகும் வளைந்து தேயுதடா " என்று தொடங்கும் கவி வரிகளை உள்ளடக்கியதான கவிதையை ஒத்த பல நல்ல கவிதைகளின் சொந்தக்காரர் சம்மாந்துறை அஸீஸ்.

நலிவடைந்த சமூகத்தின் குரலாக- மனித நேயம் மிகுந்ததாக இவர்தம் கவிதைகளின் பாடுபொருள் அமைந்திருக்கும்.

சம்மாந்துறை மண்ணில் வாழ்ந்த மற்றுமொரு இலக்கிய ஆளுமை தோழர் வீ.ஆனந்தன் ஏற்பாடு செய்த மக்கள் கலை இலக்கிய வட்டக் கவியரங்குகளில் அஸீஸ் படித்த கவிதைகள் மக்கள் அபிமானம் பெற்றவை. ஆனந்தன் அவர்களோடு அஸீஸுக்கிருந்த தோழமை, அவருடைய இலக்கிய வழிகாட்டல்கள் கலந்துரையாடல்கள் என்பனவும் அஸீஸின் கவிதைகளில் புடம் போட்டன.

1968 காலப்குதியில் இருந்தே கவிதை எழுதிவரும் கவிஞர் , கவிதைக்காக 'கலாபூஷணம்" உட்பட பல பட்டங்களையும் பரிசு களையும் பெற்றவர். அவருடைய கவிதைத் தொகுதி இப்பொழுது வெளிவருகிறது. அவரின் கவிதைகளை ஒருசேரப் படிக்கக் கிடைத்த மகிழ்ச்சி நமக்கு.

கலாபூஷணம் அஸீஸ் அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்.

**கலாபூஷணம் பாலமுனை பாறூக் J.P.**

*14 ஏ. பர்ஷானா மன்ஸில்*
*பாலமுனை 3*
*0775367712,*
*07756217680*

*08.01.2016*

## இலகு தமிழில் அழகு நடையில் எழுதும் கவிஞர்

கவிஞர் சம்மாந்துறை அஸீஸும் நானும் சமகாலத்தில் இலக்கியப் பிரவேசம் பெற்றவர்கள். தினபதிப் பத்திரிகையிலும் வெற்றிமணி சஞ்சிகையிலும் நாம் அப்போது எழுதிய கன்னிக் கவிதைகள் வாசகர்களாலும் விமர்சகர்களாலும் கவனம் கொள்ளப்பட்டன.

சம்மாந்துறை அஸீஸ் இலகு தமிழில் அழகு நடையில் எழுதுவதில் கண்ணாக இருந்தார். சமூகப் பிரச்சினைகளை, தேவைகளை, உழைப் பாளர் வியர்வை வேள்விகளை தமது கவிதையின் கருப்பொருளாகக் கொண்டு அவர் எழுதிய கவிதைகள் மிகக் காத்திரமானது.

"கத்தரிக் காய்க்கும், கறிவேப்பிலைக்கும், செத்தல் மிளகாய்க்கும்
சீனிக்குமிங்கே, பெத்தாச்சி போல பெருவயதாகி,
நித்தமும் நமது நெஞ்சைப் பிழிகையிலே,
அடுப்பங்கரையெங்கும் அல்லோல கல்லோலம்,
துடுப்பில்லா தோணிபோல துணைகள் தவிக்கையிலே,
இடுப்பொடிய பாடுபட்டும் எம் வாழ்வில்
மகிழ்வில்லையே என்றேங்கும் தோழர்காள்,
ஏக்கத்தைத் தாழிடுக!
இன்னும் ஐந்தாண்டில் ஈழவளம் பொங்குமென
மந்திரிமார் செப்புகின்றார் மனமே கலங்காதே"

என்று அவர் அப்போது எழுதிய இக்கவிதை இப்போதும் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

**கலாபூஷணம் ஆசுகவி அன்புடீன்**
அட்டாளைச்சேனை
077 8624215

04.01.2016

## வாழ்த்துக் கவி

*சம்மாந்துறை கலாபூஷணம் அஸீஸின்*

*எழுதுகோலும் பழையது அவர் விரலும் அப்படி !*

*கிராமிய மணம் வடிகிறது*

*எழுத்துக்களுக்கு இளமை செய்யும் வரிகளில் !*

*அவர் ஊர்ப்பாசை விளக்கில் தெரிகிறது எம்மனங்கூட!*

*பறனில் உறங்கி*

*வயல் வாய்க்காலில் குளிக்கும் இன்பம்*

*அஸீஸ் கவிதை!*

**ராஜகவி ஏ.சி.றாஹில்**
*318, புதிய நகர் நிந்தவூர்*

*12.01.2016*

## சில்லறைக் கடையிலிருந்து ஒரு கவிதை நூல்

அறுபதுகளின் பிற்கூற்றில் வெளிவரத் தொடங்கிய தினபதி தினசரிப் பத்திரிகை , தினம் ஒரு கவிதை வெளியிடும் கவிதா மண்டலத்தை ஆரம்பித்தது. கவிஞர் பாலபாரதி இதற்குப் பொறுப்பாக நின்று சிறப்பாக முன்னெடுத்தார். இந்த மண்டலத்தின் மூலமாக நாடெங்கிலுமிருந்து பெருவாரியான கவிஞர்கள் வெளிப்பட்டனர். அவ்வாறு வெளிப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் சம்மாந்துறை அஸீஸ். அக்காலகட்டத்திலே தொடர்ச்சியாக எழுதியவர் சமகால வாழ்வுணர்வை வார்த்தை ஜாலங்ளற்ற கவிதைகளாக வடித்தவர்.

அன்று எழுதியவர்களில் ஒருசிலர் மாத்திரமே இன்றும் எழுது கிறார்கள். அநேகமானவர்கள் காணாமலே போய்விட்டார்கள். அந்தப் பட்டியலிலிருந்து தற்செயலாகத் தப்பியவர்தான் ஆ. அஸீஸ்.

ஆரம்காலத்திலிருந்தே எமக்கிடையே கடிதத் தொடர்பு இருந்து வந்தது. அவ்வப்போது சந்தித்ததுமுண்டு. இப்பொழுதெல்லாம் தொலைபேசிமூலமே பேசிக்கொள்கிறோம். புத்தகம் போட வேண்டியதன் அவசியம்பற்றி நான் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்துள்ளேன். அது இப்போது சாத்தியமாகியுள்ளதில் எனக்கு அளவற்ற மகிழ்ச்சி.

கவிதையை சிலகாலம் மறந்திருந்தபோதிலும் அவர் ஒரு நாளும் தனது சில்லறைக் கடையை மறக்கவில்லை. உழைத்துவாழ ஆரம்பித்து... திருமணம் செய்து... பிள்ளைகள் பெற்று வளர்த்து... அவர்கள் படித்து பதவிகளில் அமர்ந்த பின்பும் சில்லறைக் கடை தொடர்கிறது. தன்னைவாழ வைத்த சில்லறைக் கடையை இலக்கியத்தில் வாழவைக்க கவிதை நூலோடும் கடையை சம்பந்தப்படுத்தியுள்ளார்.

சம்மாந்துறை அஸீஸ் அன்றும் சரி இன்றும் சரி சில்லறைக் கடையிலிருந்து கவிதை எழுதியபோதும் அவர் ஒரு சில்லறைக் கவிஞன் அல்ல என்பதை உறுதிப்படுத்தி குறிப்பிட்ட கால இலங்கைத் தமிழ்க் கவிதைப் போக்கை அடையாளப்படுத்தும் ஒரு தொகுப்பாக இது அமையுமென்று திடமாக நான் நம்புகிறேன்.

நண்பரின் முயற்சி மேலும் தொடரவேண்டும்.

**திக்வெல்லை கமால்**
*104, அடுலுகம, பண்டாரகம.*
*0716386955*
dickwelleKamal@gmail.com

*06.01.2016*

## மண்மணம் கமழும் கவிதைகள்

சம்மாந்துறையைச் சேர்ந்த கலாபூஷணம் ஜனாப் ஆதம்பாவா அஸீஸ் அவர்கள் இளமைக் காலத்திலிருந்தே இலக்கிய எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்டவராக திகழுபவர். எனவே இவருக்கு கலைத் துறையில் நல்ல அனுபவமும் ஆளுமையும் இருக்கிறது.

அன்றாடம் யதார்ர்த்த வாழ்வில் நடக்கும் சமூக அநீதிகளை மிக துணிச்சலாகவும் , துல்லியமாகவும் தன் ஊர்ப்பாசையில் உலகிற்கு தன் கவிதைகள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டி, காலத்தின் கண்ணாடியாக திகழ்பவர்.

இவரின் கவிதைகள் மண்மணம் கமழும் கிராமத்திற்கு எம்மை அழைத்துச் செல்லும். பைந்தமிழில் சொல்லாமல் பாமர மொழியில் தம் கவிதைகளை சொல்லி எல்லோர் நெஞ்சங்களையும் நிறைப்பார். இவர் இலக்கியத் துறையில் பல பரிமாணங்களைப் பெற்று பல பதவிகளை வகித்தபோதும் இறுமாப்பு இல்லாத அடக்கமான அமைதியான, மற்ற கவிஞர்களையும் தட்டிக் கொடுத்து பாராட்டி மகிழும் மனிதாபிமான மனிதர்

இவரின் எழுத்துப்பணி மென்மேலும் தொடரவும் இன்னும் பல கவிதை நூல்கள் வெளிவர வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**என்.கே.வேணி**

*25/10 சேச் வீதி, பலாங்கொடை*

*071 6421440, 045 2286067*

*03.01.2016*

## வாழ்த்துப்பா

அஸீஸ் காக்காவுக்கு
பேசத் தெரியாது சொல்லத் தெரியும்,

சொல்லத் தெரிந்த மொழி தமிழ்
வெல்லத் தெரிந்த மொழி கவிதை,
இவர் கவிதை
ஆர்ப்பாட்டமில்லாத
அந்திவானின் அழகுபோல!

இவர் கவிதை
தன் கண்களால் பேசும்
தம் மனசோடு வாசம் செய்யும்,
இலகு தமிழ் நடை
இவருக்குச் சேவகம் செய்கிறது!

காலம் கடந்தாலும்
தம் மண்ணின் அகல் விளக்கு,
இத்தொகுப்பின் மூலம்
அகிலமெல்லாம் தன் ஒளி பரப்பும்!

**சம்மாந்துறை மஷூறா ஏ மஜீட்**

*15.01.2016*

## தீன் தமிழ் வளர்க்கும் அஸீஸ் காக்கா

*கலையில் ஓர் எடை போட்டார்*
*கடை வைத்திருக்கும் நம் அஸீஸ் காக்கா.*
*தமிழ் மொழியின் சாட்சியில்*
*தீன் தமிழை வளர்க்கும்,*
*தமிழ்த் தொண்டனாய்*
*இலகு தமிழில் பழகிய மொழியில்*
*பாவார்த்தவர் நம் அஸீஸ் காக்கா!*

*காசினியில் வந்துதித்த*
*கீர்த்தி செழிப்போரின்,*
*கண்ணியமிக்க நாமத்தில் ஒரு*
*தூய்மைமிக்க சிறந்த குணமுள்ள*
*பெரியார் நம் அஸீஸ் காக்கா!*

*சத்தியந் தவறாது*
*தடம் புரளாது*
*தயாள குணமுள்ளவர்*
*தரணியில் நடந்தவற்றை*
*தான் அறிந்தவற்றை*
*தன் சமூகத்துக்காய்*
*தந்துதவுகிறார்*
*நம் அஸீஸ் காக்கா.*

**றஸ்மினா றாசிக்**
*வழித்துணை ஆசிரியர்,*
குருநாகல்
*0723846686*

*18.01.2016*

# கைகோர்க்கும் கவிதைகள் - ஓர் அவதானக் குறிப்பு

கவிஞர் சம்மாந்துறை அஸீஸ் அவர்களுடனான நேசத்தை விடவும் அவரின்கவிதைகளையே நான் உள்வாங்கிய கணங்கள் அதிகமாவை. அவ்வப்போது தேசியப் பத்திரிகைகளிலும் பிறை வானொலியிலும் அவரின் எழுத்தும் குரலும் எனது உணர்வுகளை தட்டிவிட்டன.

அனுபவம் மீதான அவரின் கவித்துவப் பார்வையால் உயிலோட்ட மான கவிதைகள் அவரில் இருந்து எழுந்தன. பேனாவோடு புறப்படும் இவர் எழுத்துக்கள் எளிமையானவை. ஆடம்பரமற்ற கவிதைவளம் நிறைந்தவை.

இந்நியதிகள் இக்கவிதைகளை நீண்டகாலம் இருப்புக் கொள்ளச் செய்தன. மொழியுடனான தேர்ச்சியும் உறவுமே புரிதல் கொள்ளக் கூடிய ரம்மியமான கவிதைகள் இவரிடமிருந்து பிறக்கின்றன. கவிஞரினால் வெளிக்கொணரப்படும் இப்புத்தகம் இலக்கியப் பண்ணையில் எப்போதும் கைகோர்க்கும் கவிதைகளாக வலம் வரும் என்று பிரார்த்திக்கிறேன்.

இவருடைய புதல்வி அனுஷா அஸீஸ் அவர்களும் பத்திரிகை, வானொலிகள் (பிறை, ஊவா) நல்ல கவிதைகளைப் படைத்து வரு கிறார். கவிதைகள் பற்றி பல தரப்பட்ட தளங்களில் கருத்தாடல்கள் நிலவும் இன்று துணிவுடன் தன் கவிதைகளை அடையாளமிடும் இக்கவிஞருக்கு உளம் சொல்லும் வாழ்த்துக்கள்.


**M.M. விஜிலி** B.A. PGDE

உளநல ஆசிரியர்

கமு/சம்மாந்துறை அல் அஷ்ஹர் வித்தியாலயம்

*077 9797210*


*14.01.2016*

## வாழ்த்துக் கவி

*சம்மாந்துறை அஸீஸ்*
*வான் அலைகளுக்குப் பழக்கப்பட்டவர்*
*கவிதைக்களம் நிகழ்சியினை நான்*
*தயாரிதளித்த காலங்களில்*
*வாரத்தற்கு ஒரு கவிதையாவது*
*வானொலி நிலையத்திற்கு வந்து சேரும்!*

*சின்னக் கவிதைகள் ஆனால் பாரமாக இருக்கும்*
*அவர் எழுத்துக்களை நியாயமாக நிறுத்தியிருப்பபர்.*
*வியாபாரி என்பதால்...*
*அவரின் கவிதைகளில் சிலேடைகள் இருக்கும்*
*சின்னக் காலத்து சிலேட்டு எழுத்துக்களாய் இருக்கும்*
*அஸீஸின் கவிதைகளில் தாகம் இருக்கும்*
*அதை நிறைவு செய்யும் வேகமும் இருக்கும்.*

*துணிச்சலான எழுத்துக்கள் தூர நோக்கு இருக்கும்*
*அவர் கவிதைகளைப் படிக்கும்போது*
*அவரைக்காணவேண்டும் என்ற எண்ணம் துளிர்க்கும்.*

*ஆரம்பத்தில் சம்மாந்துறை அஸீஸை*
*என் மனத்திறகுள் இப்படித்தான் நினைத்தேன்...*
*புதுநிறம் புன்னகைப்பதில் சிரமம்*
*குட்டையான சதைப்படிப்பு இளைஞனென்று*

நேரில் கண்டதும் என் மனதிற்குள்
இருந்த சித்திரத்தை சிரித்து அழித்தேன்.
வெள்ளக் கம்பை உரித்தாற்போல்
வெள்ளையும் சுள்ளியுமான உடம்பு.

உள்ளுக்குள் இருப்பதை ஒழிக்கால் சொல்லும் சிறப்பு
வயதையும் வயோதிபத்தையும் மறந்த சுறுசுறுப்பு
மொத்தத்தில் ஒரு நல்ல கவிஞன்
நல்லதை நிறுத்து தந்த
இந்த கவிஞனின் புத்தகத்தை...
நாளை இன்னும் ஒரு கடைக்கு
நிறுத்துக் கொடுப்பதை நிறுத்துங்கள்

அஸீஸ் தொடர்ந்து எழுதுங்கள்
உங்கள் உடல் நடை தளர்ந்தாலும்
உங்கள் கவிதைகள் இந்த மண்ணில்
கால் எடுத்து நடக்கும் - உங்கள்
பேனா முனைக்கு என்றும் என் வாழ்த்துக்கள்.

இங்கு
**அல்ஹாஜ் யூனூஸ் K. றகுமான்**
(தயாரிப்பாளர் & அறிவிப்பாளர்)
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
*0771615978*

## வாழ்த்துக் கவி

நாம் இரட்டையர்
எங்களை நாம்
கண்டபோது
எட்டிப் பார்த்தோம்- எதிரே
அஸீஸ் காக்காவின் கடை

அஸீஸ் காக்காவின்
கடைக்குப் போவதென்றால்
எனக்குப் பிடிக்கும்
என்னைவிட அவளுக்கு
என் பாதிக்கு அது
ரொம்பப் பிடிக்கும்

உம்மா சொன்னதுமே
அவள் முந்திக் கொள்வாள்
காசை வாங்கிக் கொண்டு
ஓடிச் செல்வாள்

ஓடும் வேகம்
வருவதில் இல்லை
அந்தக் கடையில்
சனவெள்ளம்
சின்னவள் இவளால்

எப்படி இதற்குள்
சாமான் வாங்குவது
ஓரமாய் ஒருவாங்கு
ஏறி உட்கார்ந்து
எதையோ நசிப்பாள்

காத்து காத்து நேரம் செல்லும்
உரத்த குரலில் உம்மா
சொல்லும்
அவளை கொஞ்சம்
கூட்டிவா என்று
சிட்டாய் பறப்பேன்

என்னை அனுப்பியது
ஏன் என மறந்து
நானும் சேர்ந்து
உட்கார்ந்து கொள்வேன்

கடலோரத்தில்
கதைபேசுவது போல
கடையோரத்தில்
கதைத்துத் தீர்த்தோம்

சனவெள்ளம் சற்றுக் குறையும்
எட்டிப் பாப்பார்
அஸீஸ் காக்கா
என்ன வேண்டும்
என்று கேட்பார்
இருவரும் பொருளை
மறந்த நிலையில்
திரும்பி வருவோம்

அந்தக் கடையில்
எங்களைத் தொலைத்த
காரணம் என்ன?
இதுவரை நாங்கள்
தெரியாதிருந்தோம்

அவளும் நானும்
ரசிக்கும் கவிதை

கள்ளத்தனமாய்
காவு கொண்டு
காற்றாய் வீசி எங்களில்பட்டு
தெறித்திருக்கலாம்

கண்டு கொண்டோம்
அவர் கவிதை கண்டு

பிரித்துப் படித்தேன்
சொட்டுச் சொட்டாய்
வடித்த தேனை
போத்தலில் அடைத்து
புத்தகம் என்றார்

பள்ளிப் படிப்பில்
இலக்கியம் என்றால்
எனக்குப் பிடிக்கும்
புகழேந்திப் புலவர் பாட்டு
புனிதவதியார் பாட்டுப் புத்தகம்
ஆசிய ஜோதி கவிதை வரிகள்
சொற்களைப் பிரித்து
சுவையை உணர்வேன்
சொட்டுச் சொட்டாய்-கவித்
தேனை ருசிப்பேன்

பள்ளிப் படிப்பு முடிந்து போனது
நீண்ட நாளாய்
அதன் சுவையில்லை
இப்போது உணர்ந்தேன்
இன்பம் சுவைத்தேன்
கடையில் பூத்த கவிதை
அணிநடை சற்றும்
விலகாமலேயே
விளக்கம் சொல்லும்
விதத்தினைக் கண்டேன்.

இந்தக் கடைக்குள்
எப்படிக் காக்கா
கவிதைக் கொத்து

பண்டிதர் போல
பழந்தமிழ் புலவர் போல
தராசில் போட்டு
நிறுத்துப் பார்க்கிறேன்
எப்படிக் காக்கா
இப்படிக் கவிதை

கடலோரக் காற்றுப் போல
கடையோரக் கவிதைக் காற்று
எனக்குள் வீசுது
இப்போதெல்லாம்.

**நஸீஹா இப்றாஹீம்**
வாத்தியார் வளவு
சம்மாந்துறை.
*20.01.2016*

## பாமரன் தரும் வெண்பாக்கள்

செந்தேன் றமிழெடுத்துச் சிறப்பாய் கவியெழுதச்
சிந்தை மிகக் கொண்டு வந்தாய் - சொந்தக்
காலூன்றிப் பலகாலம் கவியெழுதுமுனக் கெந்தன்
கோலூன்றித் தந்தேன் கொடை

வணிகமிடை பத்திரிகை வகையறிந்தே – எழுதிவந்த
அணிகவிதை அத்தனையும் ஒன்றாய் - பணியெனவே
நூலாக்கம் செய்து நுகரத் தருமுனக்கு
ஏலாக்கம் செய்வான் இறை

மூத்த கவிவாணர் முக்கனித் தேன் றமிழெடுத்து
யாத்த கவிதைகளுன் சாயல் - ஆர்த்த
சொற்சிலம்பம் காதிற் சோராது – நடனமிட்டு
கற்கண்டாய் ஆகுமுந்தன் கவி

சம்மாந்துறை தந்த சரிநிகர்த்த கவிஞர்களில்
செம்மாந்து நீயங்கு யிருப்பாய் - நம்மண்ணின்
பெருமையது காக்கும் பெருந்கவியில் நீயொன்றாய்
கரும்பினிக்க நின்ற கவி.

பத்தேழு வயதினிலே பக்குவமாய் கவியெழுதும்
வித்துவத்தை நீயெங்கு கற்றாய்- மொத்தத்தில்
புதிய நடையெடுத்து புனையும் கவிதையதில்
புதிய மனம் கொள்ளும் பார்த்து.

**மு.ஆதம்பாவா (அபூ அப்கான்)**
*சம்மாந்துறை 0776266884*

*16.01.2016*

## ஆறு ஆசி பகர் என்பா

பசீல்காரியப்பர் பண்ணிகர்த்த பாங்கினிலே எங்கள்
அஸீஸ் காக்காவின் அருந்தமிழினழகு – வசீகரமாய்
நோக்குங் கருப்பொருளில் நூதனமாய்க் கவியுரைத்து
ஆக்குங் கவிதைக் கென்னாசி

சம்மாந்துறை ஈன்ற சாத்வீகக் கவிமழையே
இம்மாநிலம் போற்றும் இன்சுவையே – நம்மோடு
வாழுங்காலத்தில் வாடாத கவி புனைந்தாய்
ஈழ மேகத்தின் சாயல்

உனக்குள் இருப்பவற்றை உசிதமாய் உணர்த்துகின்றாய்
இனிக்கும் சொற்கரும்பை எடுத்து – மனக்குளத்தில்
பூத்துக் குலுங்குகின்ற பூங்கவிதை அத்தனையும்
மூத்த புலவர்களின் மூச்சு.

எல்லாக் கவிதைகளும் எடுத்துணர்த்தும் வாழ்வியலை
நல்லாய்ப் படைத்தளித்தாய் நாளும் - சொல்லாடல்
நாட்டு நடப்புக்களை நளினமாய்ச் செவி நனைத்தே
ஊட்டும் தேன் திவலை ஊற்று.

எத்தனையோ தலைப்புக்களில் ஏற்புடைய கவிதைகளை
வித்துவத்தீ மூளாமல் விதைத்தாய் - முத்தமிழில்
ஊறும் சுவை கொண்டு ஊற்றிப் பருகவைத்தாய்
கூறும் உன்புகழை ஊரு

கடையில் பூத்த கவிதை எனும் புத்தகத்தின்
நடையில் செந்தமிழின் நடனம் - படைத்தகவி
கற்றுத் தெளிந்தோர்க்கும் கற்கண்டு போலினிக்கும்
சொற்கொண்டு தந்தாய் சுவைத்து.

**எம்.ஐ. அச்சிமுகம்மட்**
*(ஆசிரியர்) சம்மாந்துறை*
*0776567578.*
Mohamedsml927@gmail.com
*14.01.2016*

## பதிப்புரை

பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் இருந்து எழுத்துத் துறையில்ஈடுபாடு காட்டி பல்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதிப் புகழ்பெற்று எங்களுக்குப் பெருமை சேர்த்தவர் எங்கள் தந்தை.

கால ஓட்டத்தின் வேகத்தில் வேலைச்சுமைகள் அதிகரித்தபோதிலும் அவற்றுக்கும் விடை கொடுக்கத் தவறியதில்லை. இருந்தும் கால நேரம் பாராமல் பேனாவோடு காகிதத்தில் பேசிக் கொண்டிருப் பதையே நான் பெருமளவு நேரங்களில் என் தந்தையைக் காண்ப துவும் உண்டு.

பத்திரிகைகளுக்குக் கவிதைகளையும் உருவகக் கதைகள் எழுதுவதையும் நம் நாட்டு வானொலிகளில் கவிதை ஆக்கங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதனால் பன்முகப்பட்ட கவிதை நிகழ்ச் சிகளிலும் பங்கு கொள்வார்.

தனது உயிரிலிருந்து பிறந்த ஆக்கங்களை ஒரு நூலுருவில் பார்க்கவேண்டும் என்ற அவா என் தந்தைக்கு நீண்ட காலமாக இதயத்தில் பதிந்திருந்தது. ஆகவே உள் மன ஆசையை நிறை வேற்றிவைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள்ளும் துளிர் விட்டது.

அதன் நிமித்தம் அல்லாஹ்வின் அருள்கொண்டு அவருடைய பல கவிதைகளைத் தொகுத்து 'கடையில் பூத்த கவிதைகள்' என்ற தலைப்பில் ஒரு கவிதை நூலை பதிப்பிப்பதில் மகன் என்ற வகையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி.

அஸீஸ் முகம்மது உவைஸ்
IT Manager
FAHES - WOQOD Vehicle Inspection
Doha - Qatar
0097455466768

47/B அமீர் அலி வீதி,
சம்மாந்துறை
2015-12-20

## வெளியீட்டுரை

"கடையில் பூத்த கவிதைகள்" இங்கிதமான ஒரு தலைப்பாக நூலின் பெயர் இனிக்கிறது.

இத்தொகுதியில் இழையும் கவிதைகளைப் படைத்த கவிஞரைப் பற்றி விள்ளப்போனால் கல்வித் தராதரம் இருந்தும் அரச சார்பற்ற எந்த ஒரு பதவியினையும் விரும்பாது 'வியாபாரம்' எனும் தொழிலையே வாழ்வியலுக்குத் துணையாகக் கொண்ட ஓர் இனியவர்.

'வியாபாரம்'எனும் தொழிலை மேற்கொண்டு தொடர்வதங்குக் கடை ஒன்றை விரித்து இதைத் தொழில்படும் போதெல்லாம் கண்களில் படுகின்ற- கருத்தைத் தொடுகின்ற காட்சிகள் இவை தொடர்பான கற்பனைகள். , நெஞ்சைத் தொடும் சமூக, தேசிய நிகழ்வுகள்...என்று பலதரப்பட்ட கருப்பொருள்களைக் கொண்டதாக ஜனரஞ்சகமாகக் கவிதைகள் விரியும்.

இத்தன்மைக்கான கவிஞராகிய ஏ.அஸீஸ் அவர்கள் 'சம்மாந்துறை அஸீஸ்' எனும் பெயரில் தனது கவிதைகளை எழுதிக்கொண்டு இலங்கினார். பின்னர், 'கலாபூஷணம்' விருது பெற்றதும் 'கலாபூஷணம் சம்மாந்துறை அஸீஸ்' எனும் பெயரில் இன்னும் எழுதிக் கொண்டு இலங்குகிறார்.

1968 ஆம் அண்டு கவிதை இலக்கியம் படைக்கும் முயற்சியில் அடி எடுத்து வைத்த இவரது இலக்குகளில் மனம் மனைவி-மக்கள் எல்லோருமே இவரது கவிதைகள் ஆக்கத்திற்கும் தொழிலுக்கும் பக்கபலமாகவும் அமைந்தனர். அருமையான இந்த மனித ஜீவன் களைப் பாராட்டியே ஆகவேண்டும்.

இத் தனித் தன்மைத்தான சூழல்களையெல்லாம் தனக்கு வளமாக்கிஎழுதிய இவரது கவிதைகள் அவ்வப்போது பல தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் சிறப்பு மலர்களிலும் பிரசுரமாகி

வெளிவந்து இருந்தன. இலங்கை வானொலியிலும் இவரது கவிதைகள் ஒலித்து இலங்கின.

இவர் கவிதை இலக்கியம் படைப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சம்மாந்துறை மண்ணின் இன்றைய எதிர்கால சந்ததிகளின் தேடல்களுக்கும் மேம்பாடுகளுக்குமான காத்திரமான முயற்சி களுக்கும் தன் ஆற்றல்களை அர்ப்பணித்து இலங்கினார்.

*1973* ஆம் ஆண்டில் உதயமான சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம் எனும் காத்திரமான அமைப்பில் சங்கமம் ஆகி இன்னும் இதன் பொருளாளராக இயங்கி இலங்குகிறார்.

*1994* ஆம் ஆண்டில் உதயமாகி தொகுப்புக்கள் நூல்கள் வெளியிடும் காத்திரமான, பணியில் ஈடுபட்டுவரும் 'தேசிய கலை இலக்கிய தேனகம்' எனும் அமைப்பிலும் இவர் ஒரு முக்கியஸ்தராக அமைந்துள்ளார்.

இந்த வகையில் 'கலாபூஷணம் சம்மாந்துறை அஸீஸ் அவர்களின் கவிதைகளைத் தொகுத்து இம்மண்ணின் சார்பாக ஒரு நூலாக வெளியிடும் கடமைப்பாடு எனது 'தேசிய கலை இலக்கிய தேனகம்' எனும் அமைப்பிற்கும் இருக்கிறது.

இந்த இலக்கிய தேனகம் அமைப்பு இதுவரை ஏழு தொகுப்பு நூல்களை வெளியிட்டு இருக்கிறது. இப்போது எட்டாவது தொகுப்பு நூலாக,'கலாபூஷணம் சம்மாந்துறை அஸீஸ் அவர்களின் கடையில் பூத்த கவிதைகள் ' எனும் தொகுப்பு வெளியிடப்பட்டு இருக்கிறது. இன்றைய எதிர்கால சந்ததிகளின் தேடல்களுக்கு இது சாலவும் பயன்படுவதாக இருக்கும். என்கின்ற நம்பிக்கையில் இக்கவிதைத் தொகுதியினை எமது வாசக நெஞ்சங்களான சமூகத்தின் முன் வைக்கிறோம். பார்த்து படித்து சுவைத்து பயன்பெற இது போன்ற படைப்புக்கள் தொடர்ந்தும் வெளிவர உந்துதலாக இயங்குவோம்.

**கலாபூஷணம் மாறன் யூ.ஸெயின்**

*தலைவர்*

*அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை ஒன்றியம்*

*சம்மாந்துறை*

*0772174119.*

## கடைக் கவிஞன் வாழ்க!

சில்லறைக் கடைச் சிறையில்
சின்ன வயசிலிருந்து ஆயுள் கைதி
சிறை வாழ்க்கையிலே சீரோடு வாழும்
சம்மாந்துறை அஸீஸெனும் கவிஞன்!

கடைதான் இவர் வீடு
கடைதான் இவர் பொழுது போக்கிடம்
கடைதான் இவர் காரியாலயம்
கடைதான் இவர் வாழும் உலகம்!

கடையில் இருக்கும் போது கற்பனையில் உதிக்கும்
இடையில் குறிப்பெடுத்து இனிய கவிதை பிறக்கும்
மடை திறந்த வெள்ளமாய் மனம் சிரிக்கும்
தடையின்றியே திசைகள் பிரசுரிக்கும்!

ஓய்வான வேளையில் வானலையில்
ஒய்யாரமாய் கவி பறக்கும்
ஒரு கூட்டம் கவி கேட்டு வாழ்த்துக் கூறும்
பெரு மகிழ்வில் இன்ப அலைகள் மோதும்!

இவர் பணி தொடர இனிய வாழ்த்துக்கள்
இவர் நல் வாழ்வுக்கு நாயனை வேண்டுகிறேன்.

இறையருட் கவிஞர்
**ஏ. இப்றாஹிம்**
O.M பாஸி ஆலிம் வீதி
சம்மாந்துறை

## கடை முதலாளியின் கவிதைக் கதை

எனது இலக்கிய ஆர்வத்துக்கு வித்திட்டவர் உம்மாவின் வாப்பா ஆதம்பாவாபரிகாரி என்பதைக் குறிப்பிடலாம் இவர் பள்ளவெளி வட்டானையாகவும் ஆயுள்வேத வைத்தியராகவும் இரண்டாம் வட்டாரத்தின் நீண்ட நாள் உறுப்பினராகவும் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்தார். இவர் தனது வீடு தேடிவருவோர்க்கு பத்திரிகைகள் புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பதுடன் வாசிப்புப் பழக்கத்தையும் பொது அறிவினையும் மேம்படுத்துவதற்கு ஊக்கமளித்தார். இந்த வகையில் நானும் சிறுவயதிலிருந்தே வைத்திய நூல்களையும் பத்திரிகைகளையும் கவிதை கட்டுரை செய்திகளையும் வாசிக்கும் பழக்கத்துக்குள்ளானேன். இவைகளை எழுதியவர்களை ஞாபகத்தில் வைத்திருந்து அவர்களுக்கு மதிப்பும் கொடுத்து தனக்குத் தெரியாத வைகளை அறிந்து விளங்கிக் கொள்ளும் நடைமுறைக்குள் பிணைக் கப்பட்டேன்.

1955 களில் எமதூரில் எல்லா இடங்களிலும் வானொலிகள் இல்லை . வானொலி கேட்போரும் குறைவாகவே இருந்தனர் இக்குறை பாட்டை நிவர்த்தி செய்ய அரசாங்க செலவில் சனசமூக நிலையங்கள் ஊடாக றேடியோக் குடில்களை கச்சேரி மூலமாக அமைத்திருந்தனர் இந்த வகையில் சம்மாந்துறை சின்னப்பள்ளி குளத்தோரம் அமைக்கப்பட்டிருந்த குடிலில் நாங்கள் றேடியோவைக் கேட்போம். குடிலின் உட்புறம் மணல் பரவியிருப்பார்கள். அதன் மேலிருந்து நண்பர்களுடன் இரண்டு சதம் ஐந்து சதங்களுக்கு கச்சான், கடலை வாங்கி நண்பர்களுடன் திண்டு மகிழ்ந்ததனை இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன்.

அன்றைய காலத்தில் வானொலி இல்லாத சூழலில் எங்கள் வீட்டில் ஒரு கிராமபோன் இருந்தது. ஒய்வான நேரத்தில் ஒவ்வொரு இசைத்தட்டுக்கும் ஊசி மாற்றி கைகளால் விசை கொடுப்பதன் மூலமாகவே இசையினைக் கேட்டுக் கொள்ளலாம். கிராஅத்துக்கள் இஸ்லாமிய கீதங்கள் அறிஞர் கலீலுர் றஹ்மானின் மார்க்கச் சொற்பொழி வுகள் புதிய பழைய தமிழ் ஹிந்திப் பாடல்களைக் கேட்டு மகிழ்வோம்.

எனது வீட்டுச் சூழலில் நடக்கும் சந்தோசமான இரவு கண்விழிப்பு நிகழ்வுகளுக்கு எங்கள் கிராமபோனை (வீணப்பெட்டி) வாடகைக்கு எடுத்துச் செல்வார்கள். கிராமபோன் இரவில் படிக்கும்போது அவ்வீட்டுக்கு முன்னால் வருகை தந்து அதை ரசிக்கும் பக்குவம் அக்காலப் பெண்களிடம் காணப்படவில்லை. அதனால் பாட்டு இசைக்கும்போது கிடுகு வேலிக்குப் பின்னால் நின்று பெண்கள் பாட்டை ரசிப்பார்கள். காலையில்தான் வீட்டுச் சொந்தக்காரர் பிய்த்திருக்கு கிடுகு வேலியைச் சரிசெய்வது பழகிப்போன சமாசாரமாகிவிடும்.

எனது உள்ளத்து உணர்வுகள் மென்மையானவையே. நல்லது செய்பவர்களைப் பாராட்டுவேன். தீயவை செய்வேரரை எதிர்த்து நிற்கும் மனோநிலை இல்லாதவனாக நான் இருந்தததனால் அவ்வெறுப்புணர்வினை கவிதையாகவும் கட்டுரையாகவும் உருவகக் கதையாகவும் சிறுகதையாகவும் எனது பதினெட்டாம் வயதிலிருந்தே எழுத ஆரம்பித்துவிட்டேன். எனக்கு அதன் வாயிலாக பாராட்டுக் களும் வரவேற்புக்களும் கிடைத்தன. அவற்றைத்தாண்டி எதிர்ப்புக் களும் கிழம்பின. போதாமைக்கு வேறு வேலை இல்லாததும் வருமானம் இல்லாத தொழில் என்ற ஏச்சும் கிடைத்தது குறித்த சில பேரிடமிருந்து.

எனது கன்னிப் பிரசவமானது பாடசாலை இலக்கிய மன்றத்தில் என் ஆற்றலை வளர்த்தது மட்டுமல்லாமல் படைப்புக்களுக்கான களமாகவும் அமைந்திருந்தது. இலங்கை வானொலியில் 'சிறுவர் மலர்' ஞாயிறு தோறும் உதவியது. ஏம்.டி.குணசேனாவின் 'தினபதி' நாளிதள் கவிதா மண்டலம் மூலம் எனது அதிகமான கவிதைகள் பிரசுரமானதுடன் எனக்கான இலக்கிய தடாகத்தினுள் தேசிய ரீதியான அடையாளத்தினையும் அந்தஸ்தினையும் வழங்கியது என்ற விடயத்தினை நன்றி உணர்வுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலக்கியத் தடாகத்தில் காலூன்றிய எனக்கு மூத்த கவிஞர்களின் உறவும் அறிமுகமும் கிடைத்தது. அந்த வகையில் எனக்கு ஈழமேகம் பக்கீர்த்தம்பி, கலாநிதி எம்.ஏ.நுஃமான், புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன், கவிஞர் நீலாவணன், பண்டியூரான், ஜீவா ஜீவரெட்னம், புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, ஏ.இக்பால், மருதூர்க்கனி,

மருதூர் மஜீட், மாஸ்டர் சிவலிங்கம், சொக்கன் ( யாழ்ப்பாணம்) யுவன், எம். ஏ. அஸீஸ் பொத்துவில், அன்பு முகையதீன், பாவலர் பஸீல் காரியப்பர்,அண்ணல் கிண்ணியா, ச.வே.பஞ்சாட்சரம், மு.சோமசுந்தரம்பிள்ளை-யாழ்ப்பாணம், காசி ஆனந்தன் மட்டக்களப்பு, சண்முக சிவலிங்கம்,ஈழவேந்தன், பாலபரதி, மு.சடாட்சரன், எஸ்.ரி. சிவநாயகம், எம்.எம.முஸ்தபா, அப்துல்லா' ஆசிரியர், மாறன் யூ.செயின் ஆசிரியர், தற்போதய காதி நீதிபதி சலாம் சேர் என்று நீண்டு கொண்ட சென்றது.

தனது படைப்புக்கள் வானொலியில் உலாவந்தன. அதனைச் சுட்டிக்காட்டுவதனால் இலங்கை வானொலி, வர்த்தக தேசிய சேவை முதல் ஊவா, பிறை எப் எம், சக்தி எப் எம், தமிழ் எப் எம், சூரியன் எப். எம், இலண்டன் விபிசி, வானொலிகளில் கருத்துக்களாக கருத்துக்களம், கவிதைக்களம், என்பன எனது படைப்புகளுக்கு உயிர் ஊட்டின. இவற்றுக்கு மேலாக இலங்கை தொலைக் காட்சி, நிறுவனங்களும் தனக்கு சந்தர்ப்பத்தினை வழங்கி தேசிய அடையாளத்தினை பெற்றுத்தர உதவியமையை மறக்கவே முடியாதுள்ளது.

வானொலியின் அறிவிப்பாளர்களாலும் எனது கவிதைக்கு உயிர் ஊட்டினார்கள், அழகும் சேர்த்தார்கள் அவர்களினை நினைவு கூறல் சாலப்பொருந்துமென நினைக்கின்றேன். அந்த வகையில் ஜெயகிருஸ்ணா, சீதாராமன், நூறானியா ஹஸன், கனிஸ்தா லூகஸ், விசு கருணநிதி, நாகபூஷனி, எழில்வேந்தன், சந்திரமோகன், ஏ.ஆர்.எம்.ஜிப்ரி, கே.எஸ்.ராஜா, முஸ்லீம் நிகழ்ச்சி தயாரிப்பாளர் அல்ஹாஜ் அல் ஹாபில் எம்.எம்.ஹனீபா, முத்தையா ஜகமோகன், ஜெயந்தி ஜெயசங்கர், உவைசுர்ரஹ்மான், யூனுஸ் கே.ரஹ்மான், எம்.எம்.தாஜ், இர்சாட் ஏ.காதர், ஏ.எம்.ஜபீர், கலீலுர்ரஹ்மான், பஸீர் அப்துல் கையும், எஸ்.எம்.ஜவாத், ஏ.ஆர்.எம்.நசீர், ஏ.ஆர்.எம். நௌபீல், றஸ்மின், சரீபுத்தீன், எஸ்.தௌபீக், றசீட் எம். அனீபா, பிரபா, யோகராசா சந்திர குமார், முகம்மது தாரீக், மிஸ்ரின், சினாஸ், றாஹில், சர்மா ஐயா, முகுந்தன், நவநீதன், றுக்சன், றமீஸ், அசோக், தேவா, றிஸ்வானா, தர்சினி, சிறீரங்கா, மபாயிர் மௌலானா, முசர்ரப் என்று வானொலி தொலைக்காட்சி உறவுகள் நீண்டு போகின்றது.

வானொலி நேயர்களின் உறவுகளானது முகம் காணாத உறவுகள்தான் ஆனால் அவர்களின் மனித நேயம் மானிட உதவிச் செயற்பாடுகள் எனது மனதை நெகிழவும் வைத்திருக்கிறது. குறிப்பாக 2004 இல் இடம்பெற்ற சுனாமி கடலலை அனர்த்த வேளையில் எனது மண்பதிக்கு மக்கள் எல்லோரும் அகதிகளாக தஞ்சம் அடைந்த நேரம். எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது மறுமுனையில் புத்தளம் நுரைச்சோலையைச் சேர்ந்த வானொலி நண்பன் ஹிதாயதுள்ளாஹ் ஜெஸ்மின் எனது பிரதேசத்தின் நிலவரம் ஏனைய சம்பவங்களைத் தெரிந்து கொண்டார். மறுதினமே எனது கடைக்கு முன்னால் பெரிய லொறியில் நிவாரணப் பொருட்களுடன் வந்து அவர்கள் கைகளால் அவற்றை வினியோகித்ததை இன்னும் என்னால் மறக்க முடியாதுள்ளது.

எனது கவிதைகள் கருத்துக்கள் காற்றலையில் தவழ்ந்து சென்றாலும் தொலைபேசி ஊடாக கருத்துக்களையும் வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொள்ள பறந்து வரும் மறக்க முடியாத வானொலி நேயர்களின் உறவுகளது நாமங்களை இங்கே தருகின்றேன். கம்பளை பஸ்ருள்ளாஹ், கொச்சிக்கடை ராஜன், வெள்ளவத்தை சுஹைதா, மன்னார் ஜெகன் நாதன், முரக்கொட்டாஞ் சேனை சசீதரன், என். கே.வேணி, நீலா மணிமாறன், யாசிம்பாவா உசைன், அப்துல் ஹை, சலீம்(நிந்தவூர் நிருபர்), ஆலங்குடா மௌஜூஜ், தாண்டியடி சிவாஜி, தாரிகா மர்சூக், றஸ்மினா றாசிக், கயாஸ் அப்துல்லாஹ், விஜலி, மாஹிறா, இப்றாஹிம் எம். நபீல், கலைதாசன் ஹகீம், ஜி.நா.ராஜ், விஜய லட்சுமி வவுனியா, அமிர்தலிங்கம் வவுனிக்குளம், ஜி.சங்கர் ஹட்டன், பெருமாள் துரைராசா மன்னார், குணரத்தினம் வவுனியா, பூவேந்தன் நல்லூர், எஸ் கணேஸ் தெஹிவளை, ஜேசுதாஸ் வெலிமடை, ஹிதாயத்துல்லாஹ் ஜெஸ்மின் புத்தளம், ஜமாலியா தாஹிர் குருணாகலை, மீராசாய்வு அனுராதபுரம், பாலாபாலச்திரன், ஹட்டன், கலாநிதி துறைநீலாவணை, அரிச்சந்திரா கல்முனை, வேலணை வேனியன், சுலைமான் ராபி, ஆப்தீன் ஆலிம் அக்கரைப்பற்று, அனீம் வாழைச்சேனை, லதீபா வாழைச்சேனை, கபூர் சம்மாந்துறை, அனீசா சம்மாந்துறை போன்றவர்கள் வானொலி எழுத்துத் துறைக்கு உந்து சக்தியாக இருக்கின்றார்கள்.

எனது கவிதைகளை வடிவுறச் செதுக்கிய கடையில் பூத்த கவிதை நூலுக்கு முன்னுரை தந்த ஓய்வு பெற்ற அதிபர் கலாபூஷணம் எஸ்.ஏ.

ராசிக் சேர் அவர்களுக்கும் திறனாய்வு வழங்கிய கலாபூஷணம் மு. சடாச்சரன் அவர்களுக்கும், மதிப்புரை தந்த கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் அவர்களுக்கும், சாற்றுரை வழங்கிய கலாபூஷணம் யூ.எல்.அலியார் சேர் அவர்களுக்கும், பதிப்புரை தந்த எனது அன்பு மகன் முகம்மது உவைஸ் அவர்களுக்கும், விதப்புரை வழங்கிய ஜெஸ்மி எம்.மூஸா ஆசிரியர் அவர்களுக்கும், சிறப்புரை தந்த கலாபூஷணம் ஏ.சி.இஸ்மாலெவ்வை சேர்

அவர்களுக்கும், வெளியீட்டு உரை வழங்கிய கலாபூஷணம் மாறன் யு.செயின் சேர் அவர்களுக்கும், பேரவை உரை நல்கிய அம்பாரை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுத் தலைவர் ஜலீல் ஜி அவர்களுக்கும், கலாபூஷணம் அன்பு நண்பர் பாலமுனை பாறூக் அவர்களுக்கும், கலாபூசணம் அன்புடீன் அவர்களுக்கும், கவிஞர் மருதமுனை விஜிலி அவர்களுக்கும், அறிவிப்பாளர் பிறை எப்.எம். யூனுஸ் கே.ர்'மான் அவர்களுக்கும், எழுத்தாளர் திக்குவெல்லை கமால் அவர்களுக்கும், எம்.கே.வேணி பலாங்கொடை அவர் களுக்கும், கவிதாயினி மசூறா ஏ. மஜீட் அவர்களுக்கும், நஸீஹா இப்றாஹிம் அவர்களுக்கும், மு.ஆதம்பாவா அபூஅப்கான் அவர் களுக்கும், எம்.ஐ. அச்சிமுகம்மது ஆசிரியர் சம்மாந்துறை அவர்களுக்கும், டைப்பின் செட் செய்த கலாபூஷணம் யூ.எல் அலியார் சேர் அவர்களுக்கும், நூலாசிரியர் பற்றிய குறிப்பை வழங்கிய கவிஞர் மன்சூர் ஏ.காதர் சேர் அவர்களுக்கும். என் எண்ண அலையில் உருவாகும் கவிதைகளை முதலில் அவதானித்து திருத்தங்கள் செய்து தரும் இறையருட்' கவிஞர் ஏ.இப்றாஹிம் சேர் அவர்களுக்கும், நூலுருவில் தங்கள் கரங்களில் தவழ்வதற்கு துணையாக இருந்து செயற்பட்ட கவிஞர் நவாஸ் சௌபி அவர்களுக்கும், இரவில் வயல் வெளியில் யானைக் காவல் காக்கும்போது வானொலி கேட்டபவர்களுக்கும், சந்தையில், சந்தியில் கண்டு பாராட்டுபவர்களுக்கும், வெதுப்பகங் களில் வேலை செய்வோரும், வீட்டிலிருந்து கைத்தொழில்கள் செய்வோரும் என்னைக் காணுகின்ற இடங்களில் மனச்சந்தோசத் துடன் ஒலிபரப்பப் பட்டவைகளையும், பத்திரிகைகளில் வெளிவந்தவைகளையும் கேட்டு வாசித்து பாராட்டுக்களையும், குறைகளையும் மறக்காமல் தெரிவித்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். பல வேலைகளுக்கு மத்தியிலும் எழுத்துப் பிழைகளைத் திருத்தித் தந்த ஏ.நஸீஹா இப்ஹிம்,

ஏ.சித்தி சுஹைறா ஆசிரியர் அவர்ளுக்கும், சம்சுனா மஜீட் அவர்களுக்கும், எனது மனைவி ஹாஜறா உம்மா, பிள்ளைகளான சித்தி அனூஷா, பர்வீன், பர்சானா, ரோஸா, மருமக்களான ரி.எல்.முகம்மது றசீன் அவர்க ளுக்கும், சீனிமுகம்மது இல்லியாஸ் அவர்களுக்கும் ஆதம்லெவ்வை முகம்மது சித்தீக் அவர்களுக்கும், எனது அன்பு மருமகள் செல்லத்துரை பாத்திமா சஜீறா அவர்களுக்கும், ஆடியோடி வேலைகள் செய்து எனக்கு உதவிய எனது பேரன் பேத்திகளான அமீர் அலி முகம்மது இஸ்ஹாக், முகம்மது இஸ்பாக் அவர்களுக்கும் முகம்மது உவைஸ், அப்துர் ரஹ்மான், பாத்திமா இபாதா அவர்களுக்கும் முகம்மது சித்தீக் பாத்திமா சம்ஹா அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். எனது அழைப்பை ஏற்று தூர இடங்களிலிருந்து வந்த அனைவருக்கும் நன்றி கூறி கவிதைகளை அவ்வப்போது பிரசுரித்து என்னை ஊக்கப்படுத்திய தினசரிகள், வார இதழ்கள், சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகள். இதை மேலும் அழகுற செய்து தந்த அமாறா எக்ஸ்பேடைஸ் உரிமையாளர் சுலைமா லெப்பை முஹம்மட் சகீர் அவர்களுககும் எனது நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். இன்னும் எனக்கு பலவகையிலும் உதவி புரிந்த எனது அன்பு தம்பி தங்கைமார்களுக்கும் நன்றியோடு இருக்கின்றேன்.

எது எப்போது நடக்க வேண்டுமோ அது அப்போது நடந்தே தீரும் என்பதைப்போல இறைவன் அருளால் அது இன்று நிறைவேறி இருக்கிறதே எனது கனவுகன் நனவாகி உள்ளது. நெஞ்சப் பாரம் குறைந்து விட்டது, எனது கடையில் பூத்த கவிதைப் புத்தகத்தை தூக்கி மூலையில் போடாது, பழைய பத்திரிகை வாங்குவோருக்கு கொடுத்திடாது, ஒரு முறையேனும் வாசித்துப் பாருங்கள்.

நன்றி நன்றி மிக்க நன்றி.

அன்புடன்
2016-02-10

உங்கள்
**ஆதம்பாவா அஸீஸ்**
47B, அமீர் அலி வீதி, சம்மாந்துறை.
0778444271 / 0672260596

## கடையில் உள்ள கவிதைகள்

எங்கள் உம்மா / 65
புவியாள்வாய் / 67
கடையில் பூத்த கவிதைகள் / 68
சுவனத்துக் கடை / 70
இக்பால் எனும் நாமம் நீண்டு நிலைக்கும் / 71
கல்முனைச் சந்தை / 73
கண்ணெனக் காப்போம் / 74
எங்களூர் சம்மாந்துறை (1986 இல்) / 76
ஏன் படைத்தாய் இறைவா / 78
இன்ப நிறை நோன்பே / 79
நபி மொழி / 80
அருள் செய்வாய் / 81
அந்த நினைவு / 82
யார் விவசாய மன்னன் / 83
மாலைப் பொழுதில் / 84
வாழ்ந்தால் பார் / 86
காலங்கள் போற்றிடட்டும் / 87
திருந்திடுவாய் / 88
தேர்வு நல்லாள் / 89
ஏக்கம் / 90
உழவன் குரல் / 91
உழைப்போம் தோழா / 92
நாடும் வீடும் நமதன்றோ / 93
மனைதோறும் நல்லுழவர் / 94

இலவச சவர்க்காரங்கள் / 95
சீதேவிக் கோழி / 97
கதையாய் கனவாய்ப் போனதடி / 98
அநியாயம் செய்கின்றார் / 99
போற்றுவோம் / 100
நாகநாதா / 102
கிபீர் விமானங்கள் / 103
வைக்கோல் பட்டறை ஜீவன் / 105
யோசி அண்ணே / 106
ஈழத்து முஸ்லிம்காள் / 107
வீதி விதிமுறை / 108
மீன் குப்பை / 109
உள்ளத்து உணர்வலைகள் / 110
செம்மொழி மாநாடு – 2010 / 111
பனங்காப் பணியாரம் / 113
இளமைத் துடிப்பு / 115
இயற்கைப் பெண்ணாள் / 116
தங்கச் சிலை / 117
பரிதவிக்கின்றேன் / 118
இதயம் பாடுதே / 119
மர்ம மனிதர்கள் / 120

**குறும்பாக் கவிதைகள் / 122 - 130**

**இரங்கற் பாக்கள்**


மர்ஹூம் எங்கள் வாப்பா / 133

மர்ஹூம் தம்பி சம்சுதீன் / 135

மர்ஹூம் அல்ஹாஜ் இஸ்மாலெப்பை மீராசாஹிப் / 137

மர்ஹூம் மாவீரன் மன்சூர் / 139

மர்ஹூம் ஆமீது லெவ்வை பரிகாரி / 141

அமரர் விபுலாநந்தர் புகழ் வாழ்க / 142

மர்ஹூம் ஈழமேகம் / 143

பொன்மனச் செம்மல் அமரர் சந்திர சேகரன் / 144

பிள்ளையினார் அமரர் வேலாயுத பிள்ளை / 145

பெருவிளக்கே அணைந்தனையோ / 147

எங்கள் தங்கத் துரை / 149

எங்கே மறைந்தாயோ எம் தலைவா / 151

நெஞ்சங்களில் நிலைத்து வாழ்வீர் / 153

மர்ஹூம் டொக்டர் மீராலெப்பை போடி / 156

மர்ஹூம் காயிதே மில்லத் / 158

மர்ஹூம் ஆறுன் துரையே அமீரலியே / 159

மர்ஹூம் முஹம்மதலிக்காக்கா நினைவில் (சமீம் ஸ்டோர்) / 161

ஆயுர்வேத மருந்தகம் மர்ஹூம் இப்றாலெப்பை காக்கா / 164

மர்ஹூம் செலகிக் காக்கா / 166

விட்டுப் பிரியா வயது மர்ஹூம் முகம்மது சமீம் / 168

மர்ஹூம் முகம்மது இப்றாஹிமுக்கு / 170

வித்தியா மகளே! / 172

## எங்கள் உம்மா

வரிசை உம்மா என்றே
வடிவாய் மூத்தப்பா பெயர் வைத்தாலும்
ஆசியா உம்மா வென்றே
அனைவரும் அழைத்தாலும்,
ஆசியாக் கண்டம் போல்- அவ
மனசும் சிரிப்பும் பெரிய துங்கோ...

பதின் நான்கு தம்பியரையும்
பண்பான இரு தங்கைகளையும்
கண்ணெனக் காத்து வளர்த்திடவே
வாப்பாவுடன் கஷ்டப்பட்டே
வளமாய் உயர்த்திய அவ...

வயல் விதைப்புக்கு எங்கவாப்பா
வைத்திருந்த நெல்லுப் பட்டறையை,
இல்லையென்று கூறாமல் கேட்டவர்களுக்கு
அள்ளிக் கொடுத்தே ஏச்சுப்பட்டவ அவ...

வண்டிமாடு பூட்டி பள்ளவெளி
வயலில் சூடு வைப்பதனை,
கண்ணால் காணச் சென்றவ, ஒவ்வொரு
கதிராய் புறக்கி எடுக்காமல்-அவர்.....

வருவதற்குள் உங்கள் அளவுக்கு
உப்பட்டிகளை அள்ளி எடுங்கடி - என்று
சொல்லி ஆனந்தம் கண்டு
வாப்பாவிடம் வகையாக மாட்டின அவ..

வீட்டுக்குள் வந்த தெரு
விசர் நாயைத் துரத்தாமல்-அது
என்னை வேண்டுமானால் கடிக்கட்டும்
எட்டி நில்லுங்கடா என்றவ அவ.

தேர்தலில் போட்டி இடுவோர்- எங்கள்
உம்மாவைக் கேட்டுத்தான்
கட்டுப் பணம் கட்டுவார்கள்-உம்மா
வாக்கு வங்கி என்பதனால்தான்.

என்னும்மா நீடுவாழ சுகத்துடன்
இறையோனை வேண்டுகின்றோம்
நீங்களும் அவவுக்காய்
நீட்டுங்கள் இரு கரத்தையும்.

பெற்றோரை முதியோரை நாம்மதித்து
முகம்கோணாது பராமரித்து
ஆதியிறையின் அருளையும்
அன்பையும் பெறுவோம் நாம்.

*2010-03-21*

## புவியாள்வாய்

இருளில் வெள்ளி ஒளிர்வதுபோல்
என்மகனே நீ சிரிக்கின்றாய்
பொருள்கள் கோடி அதனுள்ளே
புதைத்து வைத்துச் சிரிக்கின்றாய்.

பொய்யும் புரட்டும் புழுகுகளும்
பொங்கிப் பாயும் பூமியிலே !
மெய்யும் அன்பும் மேவிடவே
மேதினி யில்நீ வாழ்ந்திடுவாய் !

அன்னம் பிசைந்தே ஊட்டுகையில்
அள்ளி எனக்கும் தருகின்றாய் !
கன்னற் சுவையில் கவிகோடி
கனிவாய் நாளும் தருகின்றாய்

அன்னை கரத்தை நீட்டுகிறாள்
அவள்மேல் நீயும் தாவுகிறாய்
உன்னை இலங்கை அன்னையுமெ
உவப்போ டணைக்கத் துடிக்கின்றாள் !

சின்ன மகனே நம்மன்னை
சீர்பல கோடி பெற்றிடவும்
புன்மை அகன்றே ஓட்டிடவும்
புறப்படு மகனே புவியாள்வாய்

*(1976-9-20 இல் பிறந்த என் மகன் முகம்மது உவைஸ் அவர்களுக்கு)*

*தினபதி 20-03-77*

## கடையில் பூத்த கவிதைகள்

கவிதைக்குக் கருவொன்று கிடைத்து விட்டது
கழுத்தையும் தலையையும் நாசியையும்
தொண்டையையும் நாக்கையும் நெருக்குகிறது
பிரசவ வேதனைபோல் கடைக்குள் கனமாக....

வெட்டி வைத்திருந்த வெள்ளைத் தாளையும்
பேனையையும் எடுத்து முதல் வரிகளை எழுதுகின்றேன்
வேதனைகள் சற்று குறைகிறது வேருக்கின்றது
விழிகளில் கைகளில் காந்தம் ஒளிர்கையிலே....

மூன்றுவகை முட்டாசி தாருங்கள் இந்த
ஐந்து ருபாவுக்கும் என்கின்றார் ஓர்
துடிப்பான பையன் : எத்தனை நாட்களாய்
யாரிடம் சேர்த்தானோ அந்தப் பணத்தை.

வெற்றிலை பாக்கு சீனி தேயிலை பிஸ்கட்
விரைவாக தாருங்கள் எங்கள் வீட்டில்
கல்யாணம் பேச வந்துள்ளார்கள் ஆட்கள்
என்றோர் இளைஞன் வேகமாகக் கேட்கின்றான்

வண்டியில் இருந்தவாறு இன்னொருவர்
வடிவாய் ஆயிரம் வைத்துள்ளேன்
விரைவாய் பால்மா பக்கட்டொன்றும்
மீதியையும் கொண்டுவாங்க என்கின்றார்.

இலாக்கட பிசின் பெருங்காயம் வசம்பு வசிவாசி
வயலுக்குள் பாம்பு தீண்டிய வருக்கு
பட்டோலைச் சாமான் விரைவில் தரவேண்டும்
என்கின்றார் இன்னோர் அவசரக்காரர்.

அத்தனை பேருக்கும் சீராய்க் கொடுத்தே
அதற்குப் பின் எழுத வேண்டும் அழகாய்
முத்தான கவிதைகள் படைத்து
வானொலிக்கும் பத்திரிகைகளுக்கும்
தொடர்பு கொண்டு அனுப்பிவிட்டு
பிரசுரித்து ஒலிபரப்பை கேட்கும்போது
கடையில் பூத்த கவிதைகள்
கனிவான சந்தோசம் தரும் தோழா !

*2015-06-25*

## சுவனத்துக் கடை

எப்பொருளும் இல்லை யெனக்
கூறாக் கடை யென்றால் அது அவசிய
பலசரக்குக் கடைதானுங்க என்நாளும்
வியாபாரம் இறைவன் துணையுடனே!

சுக்கு மல்லி நச்சீரகம் மிளகு மஞ்சள்
செத்தல் மிளகாய் பெருஞ்சீரகம் அத்தனையும்
பக்குவமாய் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு
பால்வகை மாவு இனிப்புப் பண்டங்களுடன்

கத்தரி போஞ்சி கறிமிளகாய் தக்காளி பாகல்
கருவாட்டு வகை கூனி மாசி இறைச்சிச் சம்பல்
கருஞ்சீரகம் பூடு வசம்பு சுக்கு திப்பிலி
ஓமம் கரியபவளம் பெருங்காய வகைகளையும்

முக்கனிகளுடன் பேரீச்சை முந்திரிகை வற்றல்
கொடித் தோடை பாண் பருப்பு பெரிய வெங்காயம்
உப்போடு கூடிய முப்பத்தைந்தும் கையடக்க
தொலைபேசி அட்டைகளும் கடையில் உண்டு!

வீட்டோடு கடையும் இணைத்திருந்தால்
விடுமுறைக ளில்லை கடைக்காரருக்கு
நல்லநாள் பெருநாள் சுகதுக்கங்கள்
புதினங்களில்லை விளக்க மறியல் வாழ்க்கை

இரும்பு தங்கம் கிருமி நாசினி புடைவை
எரிபொருள் கடைகள் வைத்தாலும்
பலசரக்குக் கடையை சுவனத்துக் கடையென்பேன்
விரும்பியதை உண்ணலாம் மகிழலாம் எப்போதும்.

*2010-07-23*

# இக்பால் எனும் நாமம் நீண்டு நிலைக்குமே!

கல்யாணம் முடித்த பின்னர்
தொழில்களைத் தேர்ந்தெடுத்தே
சில்லறைக் கடைவைப்போ மென்று
முதலடி வைத்த ஆரம்ப காலம்.

வாடிக்கையாளரின் நெரிசலை
விரைவாகக் குறைப்பதற்காய்
உதவிக்கு ஆட்கள் பலர் அன்று
தேவையான இனிய வசந்த காலம்.

காத்தான் குடிசென்று பலநாட்கள்
கனக்க வீதிகளில் அலைந்து தேடி,
நல்ல பிள்ளைகளை அழைத்து வந்து-பொருட்களை
நயமாய் மலிவாய் விற்ற காலம்.

பலர் வருவார்கள் போவார்கள் - தொழில்
பழகிய பின் விலகிச் செல்வார்கள்
சில்லறைக் கடையின் சிரமம் தாங்காது
சினம் கொண்டே பிரிந்து போவார்கள்.

அவர்களி லொருவர் நல்முத்தாய்
'மூத்த மகனாய்' முகாமையாளராய்
வெள்ளைக் காரதுரையாய் எங்களிடம்
நீண்டநாள் நிலைத்து நின்றவர்.

நம்பிக்கை நாணயம்
சோம்ப லில்லா சுறுசுறுப்பு
தந்தைக்கு மகனாற்றும் சேவை-அவர்
குடும்ப பொறுப்பை சுமக்கும் பண்பு.

அத்தனையும் அடிமனதில், நம்பிக்கையுடன் உழைத்தார்
பெரும் நட்சத்திரமாய் திகழ்ந்தார்
இன்னும் எங்கள் உறவுகள்
நீண்டு நிலைக்கின்றதே-அல்ஹம்துலில்லாஹ்.

ஊருக்கு வரச்சொல்லி — அடிக்கடி
உண்டு மகிழ வைப்பார்
வெள்ளி விடுமுறை வரும்போ தெல்லாம் எங்கள்
குடும்பத்தோடு வந்து சேர்வார்கள்.

முதலாளி தொழில் பயிற்சி உறவு
ஆண்டுகள் பல கடந்தாலும்
என்றும் நிலைத்து வேர்கள் விடுமே
மெத்தைப் பள்ளி வாசலைப் போல்.

அதற்கு எதிரே இருக்கும்
பலசரக்கு கடையது போல்
முகம்மது இஸ்மாயில் முகம்மது இக்பால்
எனும் நாமம் நீண்டு நிலைக்குமே.

*1986-10-15*

## கல்முனைச் சந்தை

ஈழத்து முன்னணிச் சந்தையொன்று
எப்பொருளும் இல்லையெனக் கூறாச்சந்தை
ஆழ்கடலும் கழனிகளும் சூழ்ந்திலங்கும்
அழகுநகர் கல்முனையில் அமையுஞ்சந்தை !

சந்தைக்கு ஏற்புடைய கட்டிடங்கள்
சார்புடனே இற்றை வரை அமையவில்லை
மந்தைகளின் தொல்லையும் மட்டென்றில்லை
மழை பொழிந்தால்' சந்தைநிலம் சகதியப்பா !

கழுதாவளை வெற்றிலையும் காலிப் பாக்கும்
கருஞ்சிவப்புக் கத்தரியும் பாகற்காயும்,
மிளகாயும் கிழங்கினமும் மீனிறைச்சி
மலிவாக முக்கனிகள் அனைத்து முண்டு

யானைவிலை குதிரை விலை விற்குமப்பா
யாழ்நாட்டின் புகையிலையும் பனையின் சாமான்
ஏனையவும் சந்தை நிறை கொண்டிருக்கும்
இவை விற்கும் வர்த்தகரின் இரைச்சல் என்னே !

கைகட்டி வாய்பொத்தி அடிமை போன்று
கட்டுண்டு வாங்குவோர் மிக்கவுண்டு
எல்லை யில்லா அநியாயம் என்னசொல்வேன்
எவரிதனைக் கேட்பாரோ தெரியாதப்பா !

தினபதி 1972-08-23

அன்றைய நிலவரம் செப்பினேன் அப்படி
இன்றோ பண்புள்ள வர்த்தகப் பெருமக்கள்
நன்றே வரவேற்று வாகாய் விற்பனையில்
எமக்குதவும் சீர்மையை என்னென்பேன்.

## கண்ணெனக் காப்போம்

முருங்கை இலைக் கறிக்கும்
பொட்டியான் கருவாட்டுக்கும்
முருங்கைக் காய்க்கும்
விரால் கருவாட்டுக்கும்
பொன்னாங்கண்ணி இலக்கறிக்கும்
துடி உழுவை மீனுக்கும்..

முத்தல் சுரக்காய்க்கும்
முகம் சிவந்த கூனிக்கும்
மரவள்ளிக் கிழங்குக்கும்
மாட்டிறைச்சி வெள்ளைச் சொதிக்கும்.

தமிழ் இலக்கியப் பாடத்தை
தரமாக படித்துத் தந்திட்ட
இனிய ஆசிரியராம்
மர்ஹூம் முஹம்மது இஸ்மாயில்
ஆசிரியரும் எங்களுக்கு வாய்த்தது போல
அவர் மகனாம் அன்வர் இஸ்மாயில்.

தம்பியியின் துடிதுடிப்பும்
துவண்டுவிடாத் தைரியமும்
அரசியலில் தூரநோக்கும்
அன்பான வார்த்தைகளும்
எப்பகுதி மக்களுக்கும் ஏற்ற
இனியவராம் தலைவரினால்

வாயிலும் 'கா'
தோளிலும் 'கா'
வந்தோரை வரவேற்பதில் வல்லவராம்
'கா'வென்று வாயராரப் புகழ்ந்திடும்
செந்நெல் விளையும் பூமியாம் எங்கள்
சிறப்பு மிகு சம்மாந்துறையில்

எத்தனையோ கோடி செலவில்
எழில்மிகு நவீன சந்தை
ஹிஜ்ராவில் அமைத்துத் தந்த- எங்கள்
இறைவனுக்கும், இளைய தலைவருக்கும் -நம்
அரசுக்கும் நன்றி கோடி !
மாடுகளை மேய்த்திங்கு – தினமும்
மாசு படுத்திடாமல்- எங்கள்
மார்க்கட்டை கண்ணெனக் காப்போம் நாம்.

*சம்மாந்துறை ஹிஜ்ரா பொதுச்சந்தை திறப்பு விழா சிறப்பு மலர் 09-07-2005*

## எங்களூர் சம்மாந்துறை

*(1986 இல்)*

நாற்புறமும் நெல்வயல்களும் நெழிந்தோடும் நதிகளும்
ஏற்றமிலா குட்டைகளும் கடகடத்து
ஏரோடும் மாட்டுவண்டி தானுண்டு
ஆற்றலினை வளர்த்திட வோர் நூலகம் தானுண்டு
ஆனாலும்
நேர்மை நீதி சாற்றுவதைக் கேட்டுணராக்
கொள்கை யுள்ளோர் அதிகம் தம்பி

பள்ளமும் படுகுழியும் நிறையவுள்ள
பாதைகளே எம்மூரில் அதிகம் உண்டு
தெள்ளறி வூட்டுகிற கல்விச் சாலை
தெரிகின்றது அதன் நிலையை யார் கண்டார்.

உள்ளத்தில் தீமைபல உறைந்த அன்பர்கள்
ஒன்றாக சந்தியதில் கூடிநின்றே
விள்ளிடுவார் வீண்வார்த்தை நாளுமிங்கு
வீண்சண்டை விளைந்திடுமே மதுமயக்கால்

குழாய் பொருத்திட வில்லை குடிநீரில்லை
கொடுமையினைக் கேட்பதற்கு யாருமில்லை
விளைவுண்டு நெல்லுண்டு விதமான
தெங்கு பலா வாழைகள் உண்டு

சளையாத பாட்டாளி தோழர் உண்டு
தம்பிதான் தலைவரென்ற பெருமையுண்டு
விலை பேசி எம்மூரை விற்று வாங்கும்
வீண் தலைமைகளும் எங்களூரே

கைகட்டி வாய்பொத்தி அடிமை போன்று
கட்டுண்டு வாழ்வோரே மிக்க வுண்டு
பொய் சொல்ல ஏமாற்றி ஊரைத் தின்னும்
பேர்களுக்கே எம்மூரில் மதிப்பு மிச்சம்

நல்லோருக்கோ கற்றோருக்கோ நீதி நேர்மை
நியாயத்துக்கு இடமில்லை இந்த ஊரில்
அல்லுபகல் வேலியே பயிரை மேயும்
அநியாய ஆட்சியுள் எங்களூரே.

*தினபதி : கவிதா மண்டலம் 25-05-1986*

## ஏன் படைத்தாய் இறைவா

கண்ணுக் கினிய காட்சி பாய்ச்சி
காலச் சிந்தை அறிவை விதைத்தே
பண்புக் கல்வியை விளைவுக் கதிராய்
பாரில் இறைவா ஏனோ அளித்தாய் !

துன்பந் துயரம் துவண்டு துலைந்தே
துணைவன் துணைவி தூயமைந்தன்
அன்பை அழகை அமுத மொழியை
அழியாத களிப்பை என்றும் அருள்வாய் !

ஆக்கம் அளிக்கும் அருமைக் குர்ஆன்
அகத்தில் மிளிரும் தேன் துளி அல் ஹதீஸ்
நோக்கம் மறந்தோம் நோவினையுற்றோம்
நேர்மை கலைந்தே வாழும் எமக்கு

அலையும் கடலின் முத்தை வார்த்து
அருளிய மர்மம் உணர்ந்தே மறந்தோம்
மலையின் மடியில் மாநதி மலர்ந்து
மாங்கனி செந்நெல் விளைவும் அளித்தாய்

என்றும் உந்தன் அகத்தில் தொழுதே
இறைஞ்சிப் பாவம் மறைய மறந்தும்
இன்ப வாழ்வு அளிக்கும் இறைவா
என்னே எந்தன் கருணைக் கல்பு !

சிந்தனை செய்தும் சிறப்பை உணர்ந்தும்
சீமான் உந்தன் அருள்வழி நடக்கா
எத்தனை கோடி இன்ஸான் இருந்தும்
ஏனோ இறைவா என்னைப் படைத்தாய் ?

*வீரகேசரி : முஸ்லிம் சுடர்-15-09-1976*

## இன்ப நிறை நோன்பே

மனங்குளிர ஒலித்திடுமே
'மஃறிபு'க்காய் பாங்கொலியும்
சுணங்காமல் மூஃமீன்கள்
சூழ்ந் தொன்றாய் பள்ளியிலே
இணையில்லா இறையோனின்
இன்பநிறை நோன்பதனை...

முறையாகத் திறந்திடவே
முழுமனதாய்க் கூடியவர்
இறையோனின் உணவருந்தி
இறைஞ்சு கின்ற காட்சிதனை
பெரும் பேறாய்க் காணவைத்த
பேரிறைக்கே புகழனைத்தும் !

அடை கிடந்த ஊண்கதவு
அகன்று திறந்திட்டதனால்
மடை கடந்த வெள்ள மென
வாய் திறந்த நோன்பாளி
திடமனத்தில் ஒளிவீச
சீர்கனிந்த இறையாணை
நிறை கண்ட இன்பமதில்
நீந்தி யுணவுண்பாரே !

சுதந்திரன் 14-11-1971

## நபி மொழி

வேறு மதத்தைப் பழியாதே
வேற்றுமை யுலகில் காட்டாதே !
மாறுகள் செய்து வாழாதே
மடமைகள் கொண்டு அலையாதே !

பேசும் மொழிக்கு உரிமையினை
பேற்றே இங்கு வாழ்ந் திடுவாய் !
காசும் பணமும் கௌரவமும்
கடைசி வரைக்கும் நில்லாதே !

என்றே அருள்நபி மொழிந்ததனை
ஏற்று நாமும் ஒழுகாவிடில்
கன்றை இழந்த பசுபோலே
கதறி ஒருநாள் அழுவோமே !

*சுதந்திரன் 30-04-1972*

## அருள் செய்வாய் !

*இறைவா உன்னை மறந்ததனால்*
*இழிநிலை எம்மை எய்தியதோ ?*
*முறையாய் தொழில்கள் செய்தாலும்*
*முன்னைய விளைவைக் காணோமே !*

*அண்ணல் நபிகள் போதனையை*
*அருமைக் குர்ஆன் ஆணையினை*
*உண்மை அன்பு நேர்வழியை*
*உதறி இனியாம் வாழோமே*

*கருணைக் கடலாம் இறை சொல்லின்*
*கணக்கி லடங்கா உயர்வுரைகள்,*
*பெருமை உரிமை உயர்நெறியில்*
*பெறுவோ மரிய பேரின்பம்.*

*உழைப்பு மிகவே உற்பத்தி*
*உயர்ந்தே 'ஸரந்தீப்' இலங்கிடவே!*
*சளையா இதயத் துணிவதனை*
*தந்தே இளைஞர்க் கருள் செய்வாய் இறைவா !*

*தினபதி : 1972-04-07*

# அந்த நினைவு

அந்த நினைவு நெஞ்சத்தின்
அடித்தள உயிரின் அணுவெங்கும்,
உந்து வானமா யுலகில்
உயர்ந்து பறக்கத் துடிக்கிறது !

எத்தனையோ முறை அந்நினைவை
இதயச் சிறையில் பூட்டுகையில்
சக்தி மீறிப் பாய்கிறது
சலிப்பை அயரச் செய்கிறது !

என்றோ ஒருநாள் அந்நினைவு
எங்கும் வியாபித் தோங்கையிலே
அன்றே வடியும் நம் சமூகம்
அயர்ச்சி ஒளிந்து மகிழ்வுறுமே

என்றோ ஒருநாள் அந்நினைவு
ஈழத்தாயின் மடியினிலும்
நன்றே நிலவிடச் செய்திடுமே
நாட்டைக் கட்டி ஆண்டிடுமே

*தினபதி கவிதா மண்டலம்: 17-08-1972*

*குறிப்பு: மாமேதை மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் தந்தையும் எனது மூத்த வாப்பா ஆதம்பாவா பரிகாரியும் நல்ல நண்பர்கள இந்த உறவு எங்களிடம் தொடர்ந்தது. அவர் கவிதைகளை என்னிடம் காட்டுவார். என் கவிதைகளை அவரிடம் காட்டுவேன். இருவரும் திருத்திக் கொள்ளுவோம். இந்தக் கவிதை யின் கடைசி அடி அவருடையது. இன்று அது தீர்க்கதரிசனமாக உள்ளது.*

## யார் விவசாய மன்னன்

மழை வெயில் என்று பாரா வருந்தியே அவனுழைக்க
திரை மறைவிருந்த காணிச் செம்மலே மன்ன ரென்று
உரிமையைப் பெற்று வாழும் உண்மையின் நிலையைக் காண
உருகுதே கவிதை நெஞ்சம் ஊரிதை அறியுமோதான்

உழைத்திடும் உழவனுக்கே உத்தம மன்னன் என்ற
நிலைத்திடு பெயரை விட்டுநிலமுடை போடிக் கின்று
அழைப்பிதழ் விடுத்து இந்தியாவுக்கு அனுப்பிக் கண்ட
பயனேதும் இல்லை யென்று பகருதே கவிதை நெஞ்சம்.

சேறோடு சுரிபுரண்டு செய்வன அனைத்தும் செய்து
வேர்களை நீக்கி உச்சி வெயிலிடை உலர்ந்து வாடி
நேர் நிரை நட்டும் நல்ல நிலையுரப் பசளை எண்ணெய்
சீருடன் இட்டு நெல்லைச் செய்பவன் மன்னன் அன்றோ ?

கரையிலே குந்தி மீனைச் செதிலிடைக் கோர்ப்போருக்கு
நிலைபெயர் பட்டம் சூட்டும் நியதிபோல் போடிமாரை
விளைநில வேந்தராக்கி விருதளிக்கின்ற தன்மை
பிழைமகா பிழையே என்று பேசுதே கவிதை நெஞ்சம்

*இன்ஸான்: 28-04-1969*

குறிப்பு: *1969* களில் இருந்த அரசாங்க விவசாயத் திணைக்களம் கஷ்டப்பட்டு விவசாயம் செய்து அதிக விளைச்சலை காட்டும் விவசாயப் பொதுமக்களை இந்தியாவுக்கு அனுப்பாமல் போடிமாரை விவசாய மன்னராக தேர்ந்தெடுத்து அனுப்பிய முறைகேடைப்பற்றி எழுதிய கவிதை இது.

## மாலைப் பொழுதில்

மாலையிளம் பொழுதில் மனதைப் பறிகொடுத்தே
சோலையிளங் காற்றைச் சுவைத்திருந்தேன், அப்போது
என்றும் சிரித்தவளாய் என்னெதிரே தோன்றி , இசை
வண்ணத் தமிழில் மணிக் கவிதை கோடி தரும்
வட்ட முகத்தாள் வடிவழகி பால்நிலவு
விட்ட பெருமூச்சின் வேதனையை உற்றுணர்ந்தேன் !

அண்ட உலகிலுமா அல்லல் என நினைத்தே
மண்டும் அதிசயத்தில் வாய்திறந்து 'வான்மதியே !
என்ன கவலையடி ? ஏனழுதாய் ? உன்னழகுப்
பொன்னேர் முகமும் பொலிவிழந்து காண்பதென்ன ?
நெஞ்சத் துயரென்னை நீங்க உரைத்திடுவாய்
அஞ்சுகமே ! என்றேன், அழுதபடி கூறுகிறாள்

'உன்போற் பலபேரின் உளமெல்லாம் நான்புகுந்தே
அன்புக் கவிதை அளித்தேன் இதுவரையில் !
ஆனால்...எவனோ அமெரிக்கன் என்னழகில்
வீணாய் லயித்து விகஷமம் புரிகின்றான்.

அப்பலோ செய்ய அநேக லட்சம் டாலர்களைக்
குப்பையாய் கொட்டி குழியில் புதைக்கின்றான்
இந்தப் பணமனைத்தும் ஏழையர்க்கு இன்றிருந்தால்
எந்தத் துயர்தான் இடர்தந்து வாட்டிடுமோ ? '
என்றுரைத்தாள் வான்மதியாள், இருவிழிகளும் கலங்க

நின்றேன் மரம்போல நெடுநேரம் பார்த்திருந்தேன்.
மோனச் சிரிப்பு முகத்தில் பரவிவர
வானத் தழகி வண்ணமுகில் திரைக்குள்
சென்று மறைந்தாள், சிலையாக நானிருந்தேன்
என்று வருவாள் இனி ?

*தினபதி கவிதா மண்டலம்- 7-4-1969*

குறிப்பு: *1969* களில் அமெரிக்கா பெரும் செலவில் சந்திர மண்டலத்துக்கு அப்பலோ விண்கலத்தை ஏவியது. அதையிட்டு எழுதிய கவிதை இது.

## வாழ்ந்தால் பார்

*சீனி இல்லை என்மகளே*
*சிணுங்கி ஏனோ அழுகின்றாய் ?*
*தேனீர் காய்ச்சி ஈந்திடவும்*
*செல்வச் செழிப்பும் நமக்கில்லை.*

*செத்தல் மிளகாய் பருப்புக்கும்*
*சேர்ந்தே கியூ வில் உங்கப்பா*
*செத்த மூலை எலியாக*
*சோர்ந்தே வெயிலில் துடிக்கின்றார் !*

*நூறு ருபாய் செலவிட்டும்*
*பாழும் வயிறே உறங்கவில்லை*
*செத்தே மடிந்து அழிவதற்கும்*
*சற்றே எமனும் வருவதில்லை.*

*ஐந்து ஆண்டில் புத்தொளிரும்*
*அழகு ஈழம் என்றிங்கு*
*நைந்து கூறும் நம்மரசு*
*நல்லது, வாழ்ந்தால் பார் மகளே !*

*சுதந்திரன் :13-5-1975*

குறிப்பு: *1973* களில் அத்தனையும் தட்டுப்பாடு.அதற்காக வரிசையில் நின்று எழுதிய கவிதை இது.

## காலங்கள் போற்றிடும்

*மன்னார் வளைகுடா தனிலே*
*மங்கா எண்ணெய் வளமும்*
*எண்ணாத அளவுக்கு -இறைவா*
*என்றும் பொங்கிட வேண்டும் !*

*புதுப் பொலிவுடன் எங்கள் நாடு*
*பொருளாதாரத்தில் உயரவே!*
*எதிர்ப்புகள் எதுவுமின்றி- இங்கு*
*எல்லோரும் நலமாய் வாழ்கவே !*

*உலகத்தில் சிறந்த நாடாய்*
*உயர்ந் திங்கு நம்நாடு துலங்கிடின்,*
*களங்கம் ஏதுமில்லா தேசமென்று*
*காலங்கள் என்றும் போற்றிடுமே !*

*விடிவெள்ளி -07-09-2008*

## திருந்திடுவார்

மேல்நாட்டுப் பாணிதனை
மோச்ச மென மெச்சியிங்கெ
ஆல்விழுதாய் வாலிபர்கள்
ஆட்டுக் கடா முடிவளர்த்து
கால்வயிற்றைக் காக்கயிலா
கயவர்களாய் வாழ்கின்றார் ?

உரித்தவித்த பனங்கிழங்காய்
உலகத்தார் ருசித்திடவே
அரிதட்டு ஆடையினிலே
அலங்கரித்து அலைகின்ற - வரி
கட்டாக் காலிபோல்
வனிதையர்கள் சிலபேரும்...

மதிகெட்டே அலைகின்றார்
மானத்தைத் திறந்திங்கே
விதியிட்ட வரமன்று
வீணாயவர் வீழ்கின்றார்
சுதி கெட்ட நடனம்போல்
சுவைகெட்டு அசைகின்றார்.

எம்நாட்டு நாகரீகம்
ஏற்றபலன் கண்டதையா
பம்மாத்து நாகரீகம்
பலனைத்தான் தராதம்மா !
எம்மட்டு இவர்நடப்பு
திருந்திடுவார் விரைவினிலே

*சுதந்திரன்: 27-2-1972*

## தேர்வு நல்லாள்

*மாணவர்க்குப் பாடம்பல*
*மனமுவந்து வகுத்தமைத்துத்*
*தானமெனக் கொடுத்தவரை*
*தாமறியும் தேர்வு நல்லாள்*
*ஏனடியோ அவர்களெல்லாம்*
*எடுத்தவுடன் சித்திபெற*
*நீயுதவி செய்வதில்லை*
*நெஞ்சி லென்ன வஞ்சமடி ?*

*மாணவர்க்குன் கருணையினை*
*மங்கையே நீ வழங்கிவிடில்*
*மானிலத்தில் உன்னையவர்*
*மதியாமல் நடக்கவரும்*
*ஆணவத்தைப் போக்குதற்கோ*
*அல்லுபகல் உனை நினைக்க*
*வேணுமென்றோ இந்நிலையை*
*விரும்புகிறா யாரணங்கே !*

*கற்றவர்கள் தேர்வுபுகும்*
*கலைஞர்களின் சிந்தனையைச்*
*சுற்றவைத்த தேர்வுநல்லாள்*
*சுற்றுகின்ற இவ்வுலகம்*
*சுற்றுமட்டும் உன்பெயரும்*
*சுற்றிவரும் இவ்வுலகில்*
*கற்றவர்கள் உயர்வதற்குக்*
*காரணம் நீதானடியோ!*

*தினபதி கவிதா மண்டலம்* ***13-8-1969***

## ஏக்கம்

மூட்டை சுமக்கும் என்தோழா !
முதுகும் வளைந்து தேயுதடா
நாட்டுக் குழைக்கும் நம் பசியில்
நலிந்து சாதல்தான் முறையோ ?

கடையில் விலையின் பட்டியல்கள்
காலைப் பொழுதாய் உயர்ந்திடினும்
அடநம் வாழ்க்கை உயரவில்லை
அழுந்திச் சாதல் தான்முறையோ ?

வேலைப் பழுவில் நெஞ்சங்கள்
விம்மிப் புடைத்துக் கனத்திடினும்,
சாலைதனிலே நாம் சுமக்கும்
சாக்கின் பாரம் குறைகிறதா ?

அன்று பெற்ற கூலியையே
இன்றும் நாங்கள் பெறுகின்றோம்
என்றோ எங்கள் வாழ்வுயரும்
ஏக்கம் தீரும் நாள் வருமா ?

*தினபதி கவிதா மண்டலம் : 6-6-1970*

## உழவன் குரல்

நாடுயர வயல்விளைந்து, வளம்கொழிக்க
நாவேந்தர் வாழ்வுயர, செல்வம்பெற்று
நீடுயர, மக்கள்நலம் நிறைவுகாண
நெஞ்சமெலாம் இறைபக்தி மிளிர, மேலாம்
வீடுபெற, நல்லோர்கள் வேதம் ஓத
வீரநடை கண்டுழவர் பெருமைகாண
காடழித்துப் பொற்களனி செய்வோருக்கு
கடனளித்து விவசாயம் பெருகச் செய்வீர்!

இல்லாளின் அணிமணியை ஈடுவைத்து
ஏங்குகின்ற விவசாயி மனம்களிக்க,
சொல்லாலும் செயலாலும் உண்மையாக
துயர்களைய வேண்டுகிறேன். இல்லையாயின்
மல்லாடும் புயம் படைத்த உழவரேல்லாம்
வறுமை மிடிப் பிணிதுயரால் மடிந்தேபோவர்
சொல்லாடும் கவிதையிலே கேட்கின்றேன் நான்
துன்பமற விவசாயக் கடனளிப்பீர் !

வட்டிக்குக் கடன்பட்டு வயிறெரிந்து
வாழுகின்ற விவசாயி உளம்பூரிக்க
கட்டோடு அவன்கவலை பறந்து ஓட
களிப்போடு தோளிடையே கலப்பைதூக்கி
பட்டாக்கிச் சேறாக்கிப் பண்படுத்தி
பச்சைமுளை தூவிவிதைக்கின்ற ஏழை
நட்டாற்றில் விழாமற் கைகொடுப்பீர்
நலமளிக்கும் விவசாயக் கடனளிப்பீர் !

*தினபதி : கவிதா மண்டலம்*

## உழைப்போம் தோழா

வானம் அழுதிட வையம் நனைந்திட
மோனச் சிரிப்பில் முல்லை மலர்ந்திட
தேனீ ஈக்கள் தேனைச் சேர்த்தே
தோணி வடிவில் தொங்கிய கூட்டில்

இன்பச் சுமையை ஏப்பம் விட்டே
கண்ணைச் சிமிட்டும் கரடிக் கும்பல்,
நிலையாய் நாட்டில் நித்தம் வீணே
அலையும் தோழர் மலிதல் நன்றோ ?

நாட்டின் ஓட்டம் நமது கரத்தில்
வீட்டின் வாட்டம் விரட்டி ஓட்ட
உழைப்போம் தோழா உயர்வைக் குவிப்போம்
தொலைப்போம் தோழா துன்பத் துயரை

*தினபதி கவிதா மண்டலம் 26-4-1971*

## நாடும் வீடும் நமதன்றோ

இனிய ஆட்சி நாட்டினிலே ஏழ்மைத் துயரை விலக்கிடுதே
கனியும் உழவன் கரத்தினிலே காக்கும் துணிவைத் தந்திடுதே
நாட்டைக் காக்கும் உழவனிலே நம்பும் கொள்கையுற்றதனால்
காட்டைச் செந்நெல் கழனிகளாய் காட்டும் தீரம் பீறிடுதே

நெற்றிப் பனிகள் கழனியிலே நெல்லாய்க் காட்சி தந்திடவே
பற்றி உயர்த்திப் பார்புகழும் பண்பை உலகில் காட்டிடுதே !
நாடும் வீடும் நமதன்றோ நாளைய மக்கள் நமதன்றோ
தேடும் செல்வம் நாட்டுக்காய் தெவிட்டா கொள்கை யோங்கிடுதே !

கற்றுத் தேறும் நற்சமூகம் களையை ஒழித்து நாட்டுக்காய்
பற்றும் பணமும் பறந்திங்கே பாட்டின் பயனை பயந்ததுவே !
அன்புப் பற்று உளமதிலே அழகின் ஒளியாம் கதிர்களினால்
தினமும் நாட்டின் உயர்ச்சிக்காய் தீரம் முழுதும் காட்டினரே !

கடனைக் கட்டி இறுத்திட்டால் காலப் பயனைப் பெற்றிட்டால்
திடத்தை கடனும் அளித்ததினால் திரவியம் நாட்டில் மேவிடுதே !
உழவன் உயர்வின் பேற்றினிலே ஒயாவண்ணம் அரசாக்கி
பழகும் பயிலும் சேய்களுக்கும் பண்ணாய் சங்கில் முழங்கிடுவோம்

*சங்கு : 1969-07-1*

## மனைதோறும் நல்லுழவர்

வாவியிலே மீன்பாட
வயல்களிலே ஏரோடி
தேவியவள் முகச் செழிப்பில்
செந்நெற்கள் அசைந்தாட
காவியத்தில் களைப்பாறும்
கலப்பறியா எம்முழவர்
புவியுயிரை வாழவைக்கும்
புதுவுயிர்கள் இவர்அன்றோ?

முக்கனியின் சாற்றினிலே
மூழ்கிப்பாய் ‘கல்லோயா’
தக்கபெரு மாநதியை
தடுத்திட்ட அணைப்பினிலே
மக்களுயிர் நெற்பயிரை
மங்காமல் காப்பதற்கு
அகிலத்தின் அருமருந்தாய்
அவதரித்தான் எம்முழவன் !

இன்னோரின் இனிவழியில்
என்றும்நாம் இலங்கிட்டால்
முன்னேற்றம் கண்டிடுவோம்
முடுமைகளை யோட்டிடுவோம்
கண்களிலே பொலிவுபெற
‘கப்பலிலே அரிசேற’
மனைதோறும் நல்லுழவர்
மலியாரோ நம்நாட்டில்

*தினபதி கவிதா மண்டலம்: 13-12-1969*

## இலவச சவர்க்காரங்கள்

வண்ண வண்ண சவர்க்காரங்கள்
வடிவாக கடை அலுமாரியிலே
கண்ணைக் கவரும் உறைகளினுள்
கண்டாலே மயக்கும் மணக்கும் மனங்குளிரும்

ஊத்தையையும் போக்குகின்றதே
உடம்பையும் கழுவுகின்றதே
காத்திரமாய் நோய்வராமல்
காக்கின்றதே பலநாட்களுக்கு

மனித நேயம் மறந்தவர்களுக்கும்
மண்டியிடச் செய்தவர்களுக்கும்,
புதைகுழியில் இரத்தினங்களை
புதுமையாய் சேர்த்தவர்களுக்கும்

முட்டையப்பம் உண்டுவிட்டே
முழுமையாய் மாறியவர்களுக்கும்,
வண்ணக் கோவைகளெடுத்தே
வடிவாகக் காட்டுவேன் என்பவர்களுக்கும்

*பள்ளி கோயில் தேவாலயங்கள் மீது*
*பஞ்சசீலம் மறந்தவர்களுக்கும்*
*விகாரைகள் மட்டும் போதுமென்றே*
*விவாதங்கள் புரிபவர்களுக்கும்*

*மனிதரை மனிதர்களாக*
*மதிக்க மறந்த அனைவருக்கும்*
*தனியான தோர் சவர்க்காரவகை*
*தரணியில் இலவசமாய் கிடைக்காதோ?*

*மனிதனை மனிதனாய் மதித்துவாழ*
*மறந்தோரின் இதயத்தின் அழுக்குக் கறை*
*கணப் பொழுதில் போக்கி நல்ல*
*கண்ணியவானாக்கச் சவர்க்காரம் கிடைக்காதோ?*

***29-12-2014***

## சீதேவிக் கோழி

செத்தேநீ போனாயென் கோழிப்பேடே
சீதேவி நீயெனக்குச் செய்தநன்றி
முத்தான முட்டைகளை நாளுமிட்டு
மூப்படைந்தாய் வாழ்வொழிந்தாய் என்செய்வேன்!

குப்பைகளைக் கிளறிவரும் இரையையுண்பாய்
குஞ்சுடனே, நான் கல்வி கற்கும்போதில்,
தப்பாமல் புத்தகங்கள் வாங்குதற்குத்
தருவாயே பொருள் வருவாய் தயங்கிலேனே!

நெஞ்சினிலே உறைந்திருந்த நினதுஎண்ணம்
நெடுவடுவாய் நிலைத்திடுமே கோழிப்பேடே
வஞ்சமிலா உன்வாழ்வை மறவா வண்ணம்
வழங்கிவிட்டு மாண்டாயே அந்தோ அந்தோ!

ஏழைபணக்காரர்களும் உன் குலத்தை
இழிவாகப் பேசார்கள் நாளுஞ்சேவற்
கோழியினம் காலைதொறும் கூவியார்த்துக்
கொக்கரிக்க நீமாண்டு போனாயோ?

நீமாண்டு போனாலும் நினதுகுஞ்சு
நெடுங்குலங்கள் நின் நினைவை மாற்றமாட்டா
ஏமாந்து போகாமல் எனக்கவற்றை
ஈந்து சென்றாய் என்னன்பே! எனது நன்றி

தினபதி கவிதா மண்டலம்

குறிப்பு : எங்கள் பக்கத்து வீட்டு பெண்தன் மகனை கோழிகளின் வருமானத்தால் படிப்பித்தார். இக்கோழிகளுக்கு நோய் வந்து செத்துவிட்டன. அவற்றைப் புதைக்கும் போது அவர் பட்ட வேதனையின் புலம்பல் இது.

## கதையாய் கனவாய் போனதடி

தேயிலை கிள்ளும் செல்லாச்சி—சொந்த
தேசம் இதுதான் இலையாச்சி
பாயும் இல்லை உனக்காச்சி
பாரதம் செல்ல விதியாச்சி

வாளி தூக்கும் கறுப்பையா
வாழ்க்கை என்ன வெறுப்பையா
பாழாய் போகும் உன் வாழ்வை
பார்ப்பார் எவர்தான் உண்டையா?

மலையில் மாடாய் உழைத்தே- உன்
மழலைச் செல்வம் வாடுதடி!
கலைகள் படிப்பான் எனநினைத்தாய்
கதையாய் கனவாய் போனதடி!

உலகைச் சுமக்கும் பாட்டாளி
உயர்வை மலையாய் பேசுகின்ற
தலைவர் சிலபேர் உன்வாழ்வின்
தரந்தான் உயர உழைத்தாரா?

காங்கிரஸ் : 31-10-1971

## அநியாயம் செய்கின்றார்

துப்பாக்கி முனையினிலே
துடிதுடிக்கப் பொருளுயிரைத்
தப்பாமல் கொள்ளையிடும்
தரங்கெட்ட கூட்டத்தார்
இப்போது நாட்டினிலே
எங்கெங்கும் அலைகின்றார் !
அப்பாவி மக்களினை
அநியாயம் செய்கின்றார் !

வம்பர்கள் கூட்டத்தை
வகையாகப் பிடித்தமுக்கி
அம்பலத்தில் வைத்தவரின்
அகங்காரம் தனைப்போக்கி
கம்பத்தில் கட்டிவிட்டுக்
காட்சிக்கு வைக்கின்ற
சிம்மங்கள் இந்நாட்டில்
சீறியெழும் நாளெப்போ ?

*தினபதி கவிதா மண்டலம் : 5-9-1972*

## போற்றுவோம்

முக்கனியின் சாற்றினிலே
மூழ்கிப் பாய் 'கல்லோயா'
தக்கபெரு மாநதியை
தடுத்திட்ட அணைப்பினிலே
மக்களுயிர் நெற்பயிரை
மங்காமல் காப்பதற்கு
அகிலத்தின் அருமருந்தாய்
அவதரித்தான் நம் உழவன்

இலுக்காலே முகடமைத்து
ஏமாந்த உழவனுக்கும்
கல்வீட்டுத் திண்ணையிலே
கதைத்திருக்க வெளிச்சமிட்ட
வல்லாளர் இலங்கை புகழ்
ஏந்தல் எங்கள் பிரதமராம்
செயல்வீரர் பிரேமதாசா
பல்லாண்டு வாழியவே!

மந்திரியாய் எங்களுக்கு-அப்துல்
மஜீத்துரை அமைந்ததனால்
தந்திரமாய் 'வீட்டு'மழை
தளராது பொழிந்ததுவே!

பிந்திக் கிடந்த எங்கள்
அபிவிருத்தி தழைத்தோங்க
சகலதும் செய்தளித்து
சரித்திரமே படைத்தாரே !

ஆற்றலினை வளர்த்திடவோர்
அழகான நூல்நிலையம்
ஆற்றங்கரையினிலே
அமைத்தளித்த நம்மரசை
போற்றுவோம் பாடுவோம்
புண்ணியம் சேர்த்திடுவோம்
தாகம் தணித்திடற்குத்
தரவேண்டும் குழாய் நீரை

குறிப்பு : ஹிஜ்றா கிராம திறப்புவிழா மலரில் இடம்பெற்ற கவிதை இது.

## நாகநாதா

இரும்பு மனிதா நாகநாதா
எங்கோ சென்றாய் எம்மை விட்டு
கரும்புப் பேச்சில் தமிழ்மொழி யதனை
கட்டிக் காத்தாய் உயிரினும் மேலாய் !

அடியும் உதையும் அனேகம் பட்டே
அன்னை மொழியாம் அமுதத் தமிழை
வடியும் குருதி பீறிப் பாய்ந்திட
தடுப்புக் காவலில் காத்து நின்றாய் !

எங்கள் நாடாம் ஈழநாட்டில்
இயலிசை நாடகத் தமிழ் மொழியதற்கு
பங்கம் இன்றி உரிமை பெறவே
பலத்தை ஈந்தே
சென்றதும் ஏனோ ?

குறிப்பு: கொழும்பு கோல்பேஸ் திடலில் ஸ்ரீ இலக்கப் போராட்டத்தில் கலந்து கொண்டபோது அன்றைய அரசுப் பொலிசாரால் தலையில் அடிபட்டு காயப்பட்ட நாகநாதன் பின்னர் உயிரிழந்தார்.

## கிபீர் விமானங்கள்

அத்தனை கலையில் அமைந்துள்ள — எங்கள்
அத்தானின் வீட்டுக்குச் சென்றிருந்தேன்
பத்திரமாய் காலையுணவும் எனக்குத் தந்தே
பஸ்ஸில் ஏற்றிவிட அத்தானும் வந்திருந்தார்.

வானத்தை வட்டமிட்டதே இரண்டு
வனப்புமிகு கிபீர் விமானங்கள்
வானரங்களும் திடுக்கிடும் சத்தமாய்
விண்ணையும் மண்ணையும் அதிரவைத்ததுவே!

இப்படிச் சொல்லி வாய்மூடுவதற்குள்
இரண்டு விமானங்களும் மோதியதே,
கண் இமைப்பதற்குள் தீப்பிடித்ததே
சடுதியாய் விழுந்து நொருங்கியதே

எங்கும் புகை மேகங்கள்
எல்லாத் திக்கும் மக்கள் கூட்டம்
பங்கம் நடந்தே விட்டதுவேவென
பதறியோட்டம் பலபேர்கள்

வாய்க்கு வந்தபடி பல வதந்திகள்
வாயடைத்து நின்றவர்களை சுட்டவிமானம் இது
பேய் அறைந்தது போல் கிபீர் என்று
மாந்தரை கொன்றொழித்த விமானமிது.

என்றே சொல்லி சிலர் வம்பளந்தார்கள்
எத்தனை கதைகள் எத்தனை பேச்சுக்கள்
ஊருக்குச் செல்லும் அம்பாறை பஸ்ஸும்
உறுமியே வந்ததனால் ஏறிக் கொள்கிறேன் நானும்.

எல்லா உண்மைகளையும் இறைவன் அறிவான்
பத்திரமாய் பாதுகாப்பவனும் அவனன்றோ!
நெல்விதைத்தவன் நெல் அறுப்பான்
தேயிலை நட்டவன் தேயிலை பறிப்பான்
இறப்பர் நட்டவன் பால் எடுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுவடை செய்வன்
வினை விதைத்தவன் வினையே அறுப்பான்!

அன்புடன் பூங்காற்றுக்கு (றாஹில்)

## வைக்கோல் பட்டறை ஜீவன்

வைக்கோல் பட்டறைக்குள் இரவில்
வளமாய் படுத்துறங்கும் நாங்கள்
வளர்க்கும் செல்லப் பிறவியது
வளவையும் மக்களையும் காவல் காக்கும்.

மாடுகள் பூட்டி வயலுக்குள் செல்கையிலே
மரியாதையாய் இரு சில்லுக்கு இடையில் ஓடிவரும்
மாடுகள் புல் மேய்கையிலே எதிரே
மண்டியிட்டு துள்ளி துள்ளி குதிக்கும்.

பூச்சி பூரான் இலை தளை ஆடினாலும்
புதுக் குரலெடுத்தே புவியை அசைக்கும்
காய்ச்சி வைத்த பாலென்றாலும் புசியாமல்
காவல் காத்தே கண்ணுறங்கும்.

வைக்கோல் பட்டறை ஜீவனென்று
வைது குறைகள் சொல்லவேண்டாம்.
வையகம் காக்க வெகுவாய் வாய்த்த
வாகான பிறவி யென்போம் நாம்.

பெரியோர்கள் சினம் கொண்டு நாயென்றாலும்
பெரிதாகவே பாதுகாப்போம் நாம்
மலிவாய் எங்களுக்கு வந்தே வாய்த்த
மாவீரன் என்போம் பெருமையோடு.

எச்சில் முள்ளை எரிபொருளாய் ஏற்கும்
மெச்சத்தகு பிறவியது மானிடர்க்குத்
தோழமையாய் தொண்டாற்றி வாழுமந்த
தனிப் பெருமை காத்தே நாம் மதிப்போம்.

வீரகேசரி வாரவெளியீடு : **9-11-2014**

## யோசி அண்ணே

ஈழ நாட்டில் வறுமை நாளும்
ஏறிக்கொண்டே போகுதண்ணே!
வாழைக்குட்டி ஈன்றாற் போல
வளர்த்த பிள்ளை வாடுதண்ணே!

பானைக் குள்ளே கஞ்சி இல்லை
பசிக்கு தென்றே அலறும் அண்ணே!
வேளைக் குணவும் இல்லை என்றால்
வீறு கொண்டு எழுவோம் அண்ணே!

தொழிலில் ஊக்கம் பொங்கினாலும்
தொல்லை வந்து மாய்க்கு தண்ணே!
இழிந்த இந்த நிலைக்கு இங்கே
எவர்கள் என்று யோசி அண்ணே!

*செய்தி: 05-09-1971*

## ஈழத்து முஸ்லிம்காள்

அன்பினிலே கடைந் தெடுத்த
அழகுதமிழ் மொழியதனை
இன்பத்தில் இறுகணைத்து
இலக்கியங்கள் பல சமைத்து
உண்டுதினம் உரம்பெற்று
உரிமையுடன் பேசுகின்ற.

ஈழத்து முஸ்லிம்காள்
இன்றென்ன எங்கள் நிலை
பாழ்பட்டுத் தவிக்குதடா
பழந்தமிழோ எம்நாட்டில்
ஆளத்தான் அமர்கின்ற
ஆட்சிகளின் பிடியினிலே.

நெஞ்சினிலே திடங்கொண்டு
நிமிர்ந்திங்கே தமிழ்மொழிக்காய்
அஞ்சாமல் உரிமைகள் பெற
அல்லாஹ்வின் துணைகொண்டு
செங்குருதி சிந்தியேனும்
சீர்மையினைப் பெறுவோம்வா

*சுதந்திரன் - 1971-10-3*

## வீதி விதிமுறை

பள்ளியில் கற்கும் பிள்ளைகாள்
பாங்குடன் பாதையில் செல்லுங்கள்
துள்ளிக் குதிக்கும் பருவந்தான் - என்றாலும்
துயர விபத்தில் சிக்காதீர்கள்!

உங்களை உயர்வாய் நம்பியே
உரிமையுடன் வாழ்கின்றோம் - இங்கு
நாட்டின் பங்காளர் நீங்களன்றோ
பயன்தரும் செல்வமும் நீங்களே!

வீதியெல்லோர்க்கும் சொந்தம்
விதிமுறையினைக் கடைப்படித்தே
பக்குவமாய் பாதையில் செல்லுங்கள்
பலருக்கும் தொல்லையில்லாமல்!

கைகோத்து யாவரும் ஒற்றுமையாய்
குவலயத்தில் வாழ்தல் அவசியந்தான்
கைகோத்து பாதையில் சைக்கிள் சவாரி
கைமோசம் தந்துவிடும் கவனம் மக்காள்.

அன்புடன் பூங்காற்றுக்கு (றாஹில்)

குறிப்பு: பாடசாலைப் பிள்ளைகளின் பாதை ஒழுங்கு முறையைக் குறித்த கவிதை.

## மீன் குப்பை

ருசியான மீன்களைத் தேடிவாங்கி
கறிசமைத்து உண்டு மகிழ்கின்றோம்
பக்கத்து வீட்டாருக்கும் கொடுத்தே
பண்பாட குணத்தைக் காட்டுகிறோம்.

அறுத்து கழித்த குப்பைகளை
அள்ளி பாதையில் போடுகிறோம்
கறுத்த காகம் நாய் பூனையெல்லாம்
கண்டபடி குப்பைகளை கிளறி ..கிளறி..

வீதிகளெல்லாம் முள்ளைப் போடுவதால்
வந்தவர்கள் போவோர்கள்
வழிப் போக்கர் காலையெல்லாம்
குத்திக் காயப்படுத்தி வைத்தியசாலையில்.

இனிமேலும் இந்த இழிசெயல் வேண்டாம்
வெட்டிப் புதைப்போம் அல்லது
குப்பை வண்டியில் போட்டு
வேதனைகள் கொடுக்காமல் வாழ்வோமே.

*பிறை எப் எம் : 2015-6-13*

# உள்ளத்து உணர்வலைகள்

எங்கள் தேயிலைத் தேசத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு
எனக்கோர் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும்
இந்நாட்டிலுள்ள எல்லா மனிதர்களையும்
நான் இயன்றவரை சந்திக்க வேண்டும்.

நான் அவர்களை நேருக்குநேர் கண்டு
அவர்களின் பெயர்களை அறிய வேண்டும்
அவர்களுடன் அவர்களின் அன்பு மொழியில்
பேசி மகிழ்ந்து 'கூடாரத்துள்'தங்க வேண்டும்

மரக்கட்டைகள் நட்டு முள்கம்பி அடித்த வேலிக்குள்
நானும் நின்று நினைவுப் படங்கள் எடுக்கவேண்டும்
வெளிநாட்டுப் பிரமுகர் குழுவுடன் நானும் பேசி
நல்ல முடிவுகளை எல்லாருக்குமாய் எடுக்க வேண்டும்.

எனது வாழ்க்கைப் பயணம் முடியுமுன்- என்
நாட்டு மக்களை நான் சந்திப்பேன்
எனக்குப் பின் அவர்கள் உங்களுக்கும்
நல்ல உயர்ந்த நண்பர்களாகலாம்.

நான் சென்று திரும்பி வந்தால் உங்களையும்
நலன்புரி முகாமுக்கு அடிக்கடி கூட்டிச் செல்வேன்
அவர்களின் சுகதுக்கங்களை நீங்களறிவீர்கள்
அப்போது நீங்களும் அவர்களுக்குதவி செய்தே
நல்ல நண்பர்களாகலாம் ஆழ்ந்து யோசிப்போம்
தாய் நாட்டை நேசிப்போம் தினமும்.

சூரியன் எப் எம் பண்பலை *2003-7-25*

## செம்மொழி மாநாடு - 2010

பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய்
புறப்பட்ட செம்மொழியின் 2010 ஆண்டு
மாண்புறு கோவை மாநாட்டில் கலந்து
காணவைத்த இறைக்கு நன்றி கோடி.

கோயம்புத்தூர் சென்ற யானும் பழைய
கற்கண்டு கவிஞர்களை கண்டு கொண்டேன்
வைரமுத்துவின் பக்கம் அமர்ந்து
கவிதை அரங்கில் கலந்து கொண்டேன்.

செம்மொழி மாநாட்டுச் சிறப்புக்
கொடியினுக்கு மதிப்பளித்தேன்- அங்கு
பெருஞ் செல்வமாய் வருகைதந்த
பேராளர்களைக் கண்டு கலந்து பேசினேன்.

ஊர்திகளின் ஊர்வலத்தில் கலந்துகொண்டு
உட்கார்ந்து உலாவலம் வந்தேனே!
பார்வையால் கவிதையால் வெள்ளையரை
பணிய வைத்த பாரதியின் முகம் பாாத்தேன்.

எங்கள் தேயிலைத் தேசத்தின் காமன் கூத்தை
நாடக அரங்கில் கண்டேனே
திக்கெட்டும் உள்ள ரசிகர்கள்
வாய்விட்டு சிரித்து பாராட்டுதலையும் கேட்டேனே.

அண்ணாத் துரையின் அருமைத் தம்பி
கருணாநிதியைக் கண்டு யானும்
பண்ணான ஈழத்துத் தமிழில் பேசி
பல நூறு விடயங்கள் பேசினேனே.

பண்டைக் கால உணவுகள் விற்கும்
உணவகத்துக்குச் சென்று வந்தேன்
பற்பல தீவனங்கள் உண்டு மகிழ்ந்தேன்
பங்கீடு செய்ய உங்களுக்கும் வாங்கி வந்தேன்.

உண்மைகளை உரக்க உரைக்கும்-எந்தன்
ஊவா சமூக வானொலியின்
கவிதை அரங்கேறும் நிகழ்ச்சிக்காய்
கவிதைப் புத்தகங்கள் வாங்கி வந்தேன்.

*ஊவா சமூக வானொலி– 2015 -5- 25*

## பனங்காய் பணியாரம்

யாழ்ப்பாணம் பழைய சோனகத் தெருவில்
இருந்து மாமாவும் மாமியும்
எங்களூர் சம்மாந்துறைக்கு முன்பு
வரும் போதெல்லாம்.....
பனங்கிழங்கு ஒடியல் பனங்காய் பணியாரம்
பனங்கற்கண்டு பயத்தம் பணியாரம்
கறுத்தக் கொழும்பான் மாம்பழம்- என்று
கணக்கற்று கொண்டு வருவார்கள்.

அண்மையில் நலன்புரி
நிலையத்திலிருந்து விடுபட்டு
எங்கள் இனிய உறவைத் தேடி
வெறுங்கையுடன் எலும்புந் தோலுமாய்
மாமாவும் மாமியும் வந்து சேர்ந்தது
இறைவன் செய்த புண்ணியமிங்க.

சீனிப் பனை மரமெல்லாம்
சீவியத்தை விட்டதனால்
தலையாலே தெறித்ததனால்
பனம் பழத்துக்கும் பனாட்டுக்கும்
நல்ல மவுசும் தட்டுப்பாடும்.

எங்க வீட்டு மூலையிலே
மிஞ்சியிருந்த இளம்பனை யொன்று
நன்றாக காய்த்து பழுத்து
மூக்குக்கும் மணத்ததுங்க
மாமா மாமி வருகையை முன்னிட்டு
இன்று காலை இரண்டு பழங்கள்
வீட்டு முற்றத்தில் விழுந்து
மீண்டும் மூக்குக்கு மணத்ததுங்க.

பொறுக்கி எடுத்த மாமி தோல் உரித்து
அழகாய்ப் பிழிந்து தலைத் தேங்காய்ப்பால்
இட்டு அளவாய் சீனிகலந்து – கொஞ்சம்
மஞ்சள் தூள் இட்டு உப்புப் பார்த்து
நாட்டுக் கோழி முட்டை
நாலைந்து அடித் தூற்றி
நச்சீரகம் மிளகு வறுத்துப் போட்டு
கொள்ளி அடுப்பு மூட்டி
கொதிக்கின்ற தேங்கா யெண்ணையில்
சுட்டுத் தந்தா பனங்காப் பணியாரம்
ருசியோ ருசி தனிரகமிங்க சுடச்சுட

பிரிந்து வாழும் உறவினர்களுக்கு
உதவிகள் செய்து
எம்முடன் இணைத்தே வாழ்வோம்!
ஆழ்ந்து யோசிப்போம்
தாய் நாட்டை நேசிப்போம்!

*ஊவா சமூகவானொலி : 2011-11-13*

## இளமைத் துடிப்பு

என்னைத் துயர்க்கடலில் - அடி
ஏனோ தவிக்க விட்டாய்?
உன்றன் நினைவாலே- நெஞ்சம்
உருகித் துடிக்குதடி!

பொங்கும் ஒளி நிலவில்-உனது
பூமுகம் காணாது
இங்கு தனித்திருந்தே-உனை
எண்ணிக் கலங்குகிறேன்!

பச்சைக் கிளிபோல — நீ
பாடும் இசை கேட்க
இச்சை கொள்ளுதடி —மனம்
ஏங்கித் தவிக்குதடி!

ஆற்றங் கரையினிலே- ஓர்
அந்திப் பொழுதினிலே — நிலாக்
கீற்றின் ஒளியினிலே - இரு
கிள்ளைகள் போலிணைந்தே!

பாட்டுக்கள் பாடியதும்- நாம்
பழகி மகிழ்ந்ததுவும் எனை
வாட்டி வதைக்குதடி — நினைவில்
வந்து சிரிக்குதடி!

உள்ள பொருளெல்லாம் -உனது
உருவைக் காட்டுதடி!
கள்ளீ உனது மடல் -காணக்
காத்துக் கிடக்கின்றேன்!

தினபதி கவிதா மண்டலம்

## இயற்கைப் பெண்ணாள்

துன்பம் சுமந்து வந்தாள்- என்
துணையை நாடி வந்தாள்
இன்ப மூட்டிவிட்டாள்- தன்
எழிலைக் காட்டிவிட்டாள்!

வண்ணம் மின்னும் நடையும் -அவள்
வாடும் மின்னல் இடையும்
கன்னச் சிவப்பின் வனப்பும்- என்
கவலை போக்கும் மருந்தாம்!

பொங்கும் ஆசையூட்டி - எனைப்
புலவனாக்கி ஆட்டி
எங்குமெழிலை வார்த்தாள்- நல்
இயற்கை என்னும் பெயராள்!

துன்பம் சுமந்து வந்தேன்- ஒரு
துணையை நாடி நொந்தேன்
இன்ப மூட்டி விட்டாள்- தன்
இதயத் துள்ளே வைத்தாள்!

*தினபதி கவிதா மண்டலம் 20-6-1969*

## தங்கச் சிலை

கடுமையான கோடை வெயிலின்
கொடுமை அதனைப் பொறுமை கொண்டே!
இடையும் ஒடிய விழியு முருளக்
குடத்தில் நீரைத் தலையில் சுமந்தே
நடையும் தளர நாணம் பொங்க
நங்கை வருவாள் தங்கச் சிலையாய்!

தளும்பும் தண்ணீர் கன்னம் பட்டு
தடைகள் இன்றி நெஞ்சிற்றொட்டு
குளத்தில் பூத்த கமலம் போல
குமரி மேனி நனைந்தலாலே
அழகு மஞ்சள் ஒளியைப் பாய்ச்சி
அருணண் மறைவான் வெட்கம் கொண்டே!

குடிநீர்க் குடத்தை இறக்கி வைக்கக்
குயிலாய் அழைப்பாள் 'அத்தான்' என்றே
அன்பே ! ஏனோ உடை நனைத்தாய்
அனைத்தும் தெரிய அறிவி என்பேன்
படியும் வழியும் மோசம் அத்தான்
பறக்கும் நீர்தான் நனைத்ததென்பாள்!

*தினபதி கவிதா மண்டலம் 14-8-1971*

## பரிதவிக்கின்றேன்

துன்பந் தொலையா வாழ்வில்-துயரம்
துடைக்க வந்தாள் தோழா! - அவள்
கன்னச் சிவப்பில் கவிதை வடித்து
கவலை தொலைந்தேன் தோழா!

இன்பம் அறியா இதயந் தன்னில்
இனிமை வைத்தாள் தோழா! —என்
அன்பின் சிகரம் அணையா ஒளியை
அமைத்தாள் வாழ்வில் தோழா!

பஞ்சுக் கரத்தால் அள்ளி அணைத்தாள்
கொஞ்சி மகிழ்ந்தேன் தோழா! -என்றும்
பஞ்சமில்லா அன்பினில் ஆடி
பாடி மகிழ்ந்தோம் தோழா!

படித்துப் பட்ட தாரியானேன்
பார்க்கத் தொழிலிலை தோழா-அவள்
“கடிதில் கட்டுக தாலியை” என்றாள்
கவலை கொண்டேன் தோழா!

நாடு செழிக்கும் நற்பெயர் நட்டால்
நாடும் செல்வமென்றார்-ஆனால்
பாடு பட்டும் பலன் கிடைக்காமல்
பரிதவிக்கின்றேன் தோழா!

*தினபதி கவிதா மண்டலம் : 04-10-1969*

## இதயம் பாடுதே!

இனிய புலவர் உறவினிலே!
இதயத் தமுதம் ஊறிடுதே!
கனியும் அவர்தம் மொழியினிலே
கவலை முகிலும் கலைகிறதே!

செய்யும் தொழிலே செல்வமென
செப்பும் வீரர் கூட்டுறவில்
உய்யும் வண்ணம் உலகத்தில்
உழைக்கும் ஆற்றல் ஓங்கிடுதே!

உழைப்பால் உய்யும் ஊர்களிலே
ஊக்கம் பயிரா யோங்கையிலே
களைபற் றாத பேரின்பம்
கவிதை பாடச் செய்கிறதே !

துன்பம் தொடரும் போதினிலே
தூய அறிவுச் சுடர் பாய்ச்சி
இன்பப் பாடல் எழுகிறதே
இதயம் அவற்றைப் பாடிடுதே!

கல்வி கற்றுத் தொழில் தேடி
காலச் சுவட்டில் அலைகையிலே
வெல்லும் வாழ்க்கைப் போராட்டம்
விரிந்து கவியாய் பீறிடுதே!

தினபதி கவிதா மண்டலம்

## மர்ம மனிதர்கள்

நாடெங்கும் மர்ம மனிதர்கள்
நடமாடித் திரிகின்றார்கள்
பாடுபட்டுழைப்பவர்க்கும் நிம்மதியாய்
படுத்துறங்க முடியாது போனதுவே.

எங்கிருந்து இந்த ஈனர்கள் வருகிறார்கள்
இறைவனுக்குத் தான் தெரியும்
பங்கங்கள் செய்தே தினமும் மக்களினை
பரிதவிக்க வைக்கிறார்கள் இவர்கள்.

வேறு கிரகத்திலிருந்து வெளிக்கிட்டு
வருகின்றார்களோ பெண்களிடம்
கயவர்கள் காடைத்தனம் காட்டி
கண்ணில் படாமல் மறைகின்றனரோ?

அமைதியாய் தூங்க முடியவில்லை
அவசரத்துக்கு பயணம் செய்ய முடியவில்லை
ஊமைகளாய் எல்லோரையும் ஆக்கிவிட்டே
உலாவுகின்றார்கள் இந்தப் பிசாசுகள்.

மலையக தேசமெங்கும் மர்ம மனிதர்கள்
மலிந்தது போதாதென்று வடக்கு கிழக்கு
தென்கிழக்கு ஒலுவில் சம்மாந்துறை
இறக்காமம் அத்தனையிலும் மலிந்துபோனார்கள்.

கிறிஸ் பூசிய மனிதராகவும்
கறுப்புச் சட்டை மனிதராகவும்
கறிக்கு வேகாத மரவள்ளிக் கிழங்காய்
கஷ்டப்படுத்துகின்றார் மக்களினை

எங்கும் அமைதி அபிவிருத்தி
ஆனந்தம் எங்கள் நாட்டினிலே
பங்கம் செய்யும் மர்ம மனிதர்களை
பக்குவமாய் பிடித்தமுக்கியே

சிங்கப்படை மக்களெல்லாம் சேர்ந்தே
சிக்கல் பேர்வளிகளைக் கண்டுபிடித்தே
அங்கங்கு மரத்தில் கட்டிவைத்தே
அவர்களுக்கு தண்டனை வழங்காரோ?

*2013-7-15*

குறிப்பு: யுத்தம் முடிந்த பின் கிறிஸ் மனிதர்கள் மர்ம மனிதர்கள் நாட்டில் உலாவிய காலம் எழுதப்பட்டது.

## சினேகப் பறவை

நாணல் காடுகளெல்லாம்
நாசமாய் எரிந்து போனதினாலே
எங்கள் இலுக்கு வீட்டு குடிசையின் மேல்
இனிதாய் வாழ்ந்திட வந்தாயோ?
உந்தன் வரவு நலமாகட்டும்
உதவிகள் செய்ய தயங்கோமே
சினேகிதிகள் போல் நாங்களுமே!

## உள்ளமெல்லாம் பூக்கட்டும்

வண்ண மலர்கள் வடிவழகாய்
பூத்துக் குலுங்கு கின்றதே!
எந்தன் செல்வ மகளே-நம்
உள்ளமெல்லாம் நாட்டின் உயர்வுக்காய்
உயர்ந்தே இணைந்தே பூத்திடட்டும்

## துரத்தப்பட்ட பிச்சைக்காரர்

கூரையில் சுரக்காய்
கொட்டுக்குள் நெல்லு - முடா
பானைக்குள் அரிசி
வங்கியில் சேமிப்பு
யாரிடமும் கையேந்தா
ஊரார்கள் நாங்கள்-அன்று
துரத்தப்பட்ட பிச்சைக் காரரானோம் இன்று

## எழுதப்படாத காகிதங்கள்

ஏன் எதற்கு என்று
கேட்கப்படாமல்
எத்தனையோ உயிர்கள் அழிவுகள்.
குற்றவாளிக் கூட்டில் நாங்கள்
எழுதப்ப படாத காகிதங்களாய்.

## வற்றிக் கொண்டிருக்கும் வரவு

ஆயிரம் பனைகள்
அப்பனும் மகனுக்கும்
அத்தனையும் தலையாலே
தெறித்த தனால்- இன்று
பல்லுக்குத்த ஈர்க்கி லில்லை.

## கொழுந்துக் கூடை

கால் நீட்டி
படுக்க யியலாத
தோட்டத்து லயன்களாய்
கொழுந்துக் கூடை

## உறவுக் கோலங்கள்

பிறந்த மண்ணை விட்டு
பேசிய மொழியை மறந்து விட்டு
உறவுகளை உதறித் தள்ளிவிட்டு
இன்னு மேன் அங்கிருப்பான்,
எங்கள் தாய் மண்ணுக்கு வந்திடுவோம்
உறவுக் கோலங்களை இணைத்தே
இன்புறுவோம்.

## தடைகள்

முட்கம்பி வேலிக்குள்
முகம் புதைத்தே கிடக்கின்றோம்
தடைகள் நீங்கி
எம் தாயகத்தில் பாதம்
படுவ தெப்போ?
உருகுதே கவிதை நெஞ்சம்
ஊரிதை அறியுமோ தான்.

## வெள்ளைத் தாள்

ஊடக வியலாளர் ஆனாய் நீ- சிவராம்
உலகமே அறியும் உன்னைத்தான்
செங்குருதி சிந்தவைத் துன்னை
நடுத் தெருவில் போட்டது யாரோ?
உள்ளம் உருகுதையா
ஒவ்வொரு நாளும் உன்
உழைப் பதை படிக்கும் போதே.

## நெஞ்சிலிட்ட கோலம்

இனியேனும் நாங்கள்
இன்பமாய் வாழ்ந்தே
இலங்கைய ரென்றே
இணைந்தே வாழ்வோமே
நெஞ்சி லிட்ட கோலமாய்!

## நெடுவடு

சின்ன வயதில்
யார் சொன்னாலும்
ஏறாத புத்திகள்
ஆறாத காயங்கள்
நெஞ்சில் நித்தமும்
நெடுவடுவாயானது.

## வசந்த காலம்

நல்லூர் கந்தன் பதியில்
மணல் வெளியில்
நாலைந்து பழைய நண்பர்களுடன்
உட்கார்ந்து பனங்கூழ் பருகி
பழைய சோனகத் தெருவில் உலாவி
வரும் நாட்கள்
வடக்கின் வசந்தமாய்
மீண்டும் வந்திடாதோ.

## மணல் வீடு

எங்கள் தேயிலை தேசத்து
பெருந் தோட்டத் தொழிலாளர்களுக்கெல்லாம்
கல்வீட்டுக் கனவுகள்
மணல் வீட்டுக் கதையாகுமோ ?

## உணரப்படாத கனவு

எங்கள் தேசத்தின்
இன்னுமோர் மூலையில்
தீர்க்கப்படாத
உணரப் படாத
பட்டினிச்சாவுகள்
நோய்கள், பாவம் மக்கள்
உள்ளத்தைத் திறந்திங்கு
உண்மைகள் உணரப்படுமோ?

## ஆசிரியர் தினம்

ஏணியாய்
தோணியாய்
பாலமாய்
ஆசிரியர்கள்
அவர்களுக்கும் - ஓர்
தினம் மறக்கலாமா?

## புதுமை

ஒவ்வொரு நிமிடங்களும்
விமானச் சத்தங்கள்
வானத்தைப் பார்த்துப் பார்த்தே
எங்கள் வாழ்வு நகர்கின்றதே.

## சாக்கடை

*இன்னும் விடிவு*
*எத்தனை நாளில்*
*பஞ்ச சீலம் நெஞ்மெல்லாம்*
*பாவ நாற்றுச் சாக்கடைக்குள்*

## பேருந்து

*தலைநகரிலிருந்து- இரவில்*
*ஊருக்குத் தூரப்பயணம்,*
*பிரயாணி தூங்கி வந்தால்*
*சொகுசுப் பயணம்*
*சாரதி தூங்கினால்*
*கடைசிப் பயணம்*

## பூச்செண்டு

*தாஜ்மஹால் சிற்பிக்கு*
*கைகள் இல்லை - இன்றைய*
*எம்பெற்றோர்க்கு*
*இதயமே இல்லை- எங்கள்*
*புதைகுழியின் மேல்*
*நட்டுவிடுங்கள் - இப்*
*பூச்செண்டுகளை மணக்கட்டும்.*

## சாகாதவர்கள்

எதுவுமில்லை எதுவுமேயில்லை
மகத்துவ மானார்கள்
சாவதுமில்லை அவர்கட்கு
சதாவும் நெஞ்சங்களிலே
சரித்திரமாய் வாழ்கின்றார்கள்
வீரம் தோய்ந்த மண்ணில்

## கைக்குட்டை

என்று தருவா ளென
ஏங்கித் தவித்த
வெறும் சீலைத் துண்டு

## உண்டியல்

விலைவாசி
உயர்வின்
கடைசி ஆயுதம்
உடைப்பதற்கு - உண்டியல்

## துணை

அறுவை மனக் கடலில் தோழி
அன்புப் பூக்கள் மலரட்டும்
துருவ நட்சத்திரம் நீ- உன்
துணைக்கு வந்திடவா நன்மைக்கு

## கனவுகள்

தோட்ட மெல்லாம்
கல் வீடுகள்
துறைமுக மெல்லாம்
சரக்கு கப்பல்கள்
பாட்டாளி மக்களுக் கெல்லாம்
சம்பள உயர்வு
பட்டினி கிடந்தார்க்கு
மலிவு விலையில் உணவுகள்
எண்ணெய் வளத்தால்
எங்கள் நாட்டில்
எல்லோர்க்கும் தொழில் வாய்ப்பு

## தேசியக் கொடி

பட்டொளி வீசி உயரப் பறக்கும் - எங்கள்
சுதந்திரக் கொடிகளே
சட்டென விழுந்திடுங்கள்- நல்ல
சட்டைகள் தச்சுப் போட
ஆங்கிலக் கொடி இறங்கியது அன்று
தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின்
வறுமைக் கொடி உயர்ந்தே பறக்கின்றது இன்று
என்று இறங்கும் எங்களுக்கும்.

## வீ. ஆனந்தன்

அரச துப்பாக்கி வெடிகள்
பேருந்துக்கு – புதுக்குடியிருப்பில்
செத்துத்தான் போனீர் ஆனால்
சாகும்போதும் இன்னோர் உயிரை
மடிக்குள் சாகாமல் காத்தவன் நீ.

## எஸ். எம். எஸ். (குறுந்தகவல்)

இன்னும் என் பேரனிடம்
கேட்டுப் படித்து
முடிக்காத பாடம்

## பட்டாசு

பட்டாசு கொழுத்தி
பறக்கவீடும் பணத்தை
தட்டில் வைத்து
தாரை வார்ப்போம்
ஏழைகளுக்கு

## ஓசி

ஒருநாளைக்கு
எத்தனையோ சிகரட்டுக்கள்
பத்திச் சாம்பலாக்கிட – ஆனால்
தீப்பெட்டி மட்டும்
ஓசியில் வேண்டும் அவருக்கு
ஒவ்வொரு நாளும்.

# இரங்கற் கவிதைகள்

## மர்ஹூம் எங்க வாப்பா

அபூபக்கர் ஆதம்பாவா என்று
அழகான பெயர்தா னிருந்தும்
'வெள்ளத்தம்பி' எனும்பெயரை
காப்பாற்றி வாழ்ந்தார் எங்க வாப்பா.

கூட்டுக் கரத்தை மாடு பூட்டி
கோமாரி மங்க மாரியம்
தென்னந் தோட்டம் சென்று
தேங்காய் ஏற்றி வந்து விற்பார்.

பள்ளவெளி நெல்லுச் சேனை
பனையடிவட்டை மேல்கண்டம்
அத்தனையிலும் செந்நெல் விதைத்தே
அவதானமாய் விவசாயம் செய்வார்.

தேனீக் கடைவைத்தும் சீர்மையாய்
சில்லறைக் கடை நடாத்தியும்
தம்பிமார் அனைவரையும் படிப்பித்தே
தரமாய் வாழ்வில் உயரச் செய்தார்.

ஓய்வு இல்லா உழைப்பாளி
ஒருத்தர் சதத்ததையும் வீணே எடுக்கார்
ஆய்வுகள் செய்தே முடிவெடுப்பார்.
அவதானமாய் வாழ்ந்திட்டார்.

கட்டுப்பாட்டுடன் தம்பி தங்கைகளை
கவனமாய் வளர்த்தே படிப்பித்தார்
தட்டுப்பாடுகள் பல வந்தாலும்
தைரியமாய் எங்களைக் காத்தார்

இருகை ஏந்திப் பிரார்த்திக்கின்றோம் -இறைவா
எங்கள் வாப்பாவுக்கும் சுவனத்தை
அள்ளிக் கொடுத்தே அருள் பாலிப்பாய்
ஆதரித்தே நேசிப்பவனும் நீ அன்றோ. ஆமீன்!
யாறப்பில் ஆலமீன்

## மர்ஹூம் சம்சுதீன் தம்பி

இதயத் துடிப்பே சம்சுதீன் - தம்பி
எம்மை விட்டுச் சென்றனையோ
சதையும் நகமும் போலிங்கு
சமமாய் பேசி வாழ்ந்தோமே!

எங்கள் குடும்பச் சந்திரனாய்
என்றும் வாழ்வாய் என்றெண்ணி
மங்கா இறையை வேண்டிற்றோம்
மறந்தோ அவனும் விட்டானோ?

இடுப்பில் சுமந்த காயந்தான்
இன்னும் மறைய வில்லையடா
கடுப்புக் காய்ச்சல் உனை வாட்டக்
காலன் கொண்டு சென்றானோ?

உத்தி யோகம் உமக்கென்றே
உயர்வாய் நாங்கள் நினைத்திருந்தோம்
சக்தி யாவான் அல்லாஹ்தான்
சடுதியாக அழைத்தது மேன்?

திருமணம் பேசி பலர் வந்தார்
செய்வோம் வாழ்வோம் என்றிருந்தோம்
திருமறை ஓதவைத்தாயோ – தம்பி
தேம்பிப் புலம்ப வைத்தாயோ!

உனக்கு யாரும் அநியாயம்
ஊண்டு பண்ணி இங்கிருந்தால்
சுணங்கா இறைவன் அவர்கட்கும்
தொல்லை கொடுக்கத் தயங்கானே!

வாப்பா உம்மா சகோதரர்கள்
வளைந்து நின்று கதறியழ
உற்றார் சுற்றம் புடைசூழ
உம்மை தூக்க வைத்தானோ?

வல்ல இறைவா தம்பிக்கு
வழங்குவாயோ சுவர்க்கத்தை
சொல்லும் செயலும் உனதன்றோ
தூய இறையும் நீயன்றோ!

'பிர்தௌஸ்' என்னும் சுவனத்துள்
பிரியா நீண்ட வாழ்வுக்கே!
அல்லாஹ் அழைத்த அன்புக்காய்
அமைந்தாயோ ஆருயிரே!

தோற்றம் : *02-05-1960* மறைவு : *21-10-1984*

## மர்ஹும் அல்ஹாஜ் இஸ்மாலெவ்வை மீராசாய்வு

உயர்ந்த மலரன்ன
எங்கள் குடும்பத்தின்
ஊற்றாய் வாழ்ந்திட்ட
இஸ்மாலெவ்வை மீராசாய்வு
எங்களின் மறக்க முடியாத வாப்பாவுக்கு...

காக்காவுக்குக் காக்காவாய்
தம்பியர்க்குத் தலைவனாய்
மருமக்களுக்கு மாமனாராய்
மக்களுக்கு அறிஞனாய்
மார்க்கப்ப பற்றில் தப்லீக்கை
மனம் நிறை ஏற்றீரே...! வாப்பா...

ஆயிரம் உறவுகள்
அணியாய் இருந்தாலும்
வாய் நிறைய வாப்பா என்று
இனியாரை அழைப்போம் நாம்
எங்கள் இனிய வாழ்வுக்காய்
என்றும் உழைத்தீரே வாப்பா...
நாங்கள் உலகின் மூலையில்
எங்கிருந்து உழைத்தாலும்
என்றும் மறவோமே
எங்கள் அன்பு வாப்பாவை...

ஊரில்மையத்து விழுந்தால்
உடனே சென்று குளிப்பாட்டி
வெள்ளைக் கபனிட்டு
தொழுகை நடாத்தி
கபுறு தலைமாட்டில்
கடமை யாவும் செய்தீரே வாப்பா...
மிஹ்ராஜ் இரவினிலே அல்லாஹ்
மிகவும் விரைவாய்
அழைத்ததினால்
எங்களைவிட்டு
இறையடி எய்தினீரோ?

இறைவா..!
நீயே எங்கள் வாப்பாவுக்கு
ஜென்னதுல் பிர்தெளஸ் எனும்
சுவர்க்கத்தை உன்னருளால்
அளித்திடுவாய் வல்ல றஹ்மானே!
ஆமீன்... அமீன்... யாரப்பல் ஆலமீன்.

குறிப்பு : எங்கள் மாமனார் மறைவையொட்டி மைத்துனர்கள் வெளியிட்டது

பிறப்பு : 30-06-1932 மறைவு : 24-09-2003

## மர்ஹூம் மாவீரன் மன்சூர்

*எம்.வை.எம். மன்சூர் தம்பி – நீ*
*ஒரு மாவீரன் தாண்டா*
*அஞ்சாமல் நமதூரின்*
*அரசியலை மாற்றிவிட்டாய்.*

*அஷ்ரபின் வழியினிலே*
*அமைதி காக்க புறப்பட்டாய் - வடகிழக்கு*
*மாகாணசபையின் உறுப்பினராகி*
*கீர்த்திகள் பல செய்துவிட்டாய்.*

*தேடித் தேடி வந்தவர்கள்*
*சுட்டனவே சுட்டார்கள்*
*வேதனைப்படும் வேளையிலும் – நீ*
*வேதம் ஓதியது இன்னும் ஒலிக்கிறது.*

*“ஏனடா நீ இன்னும் ஓதுகின்றாய்”*
*என்றே கேட்ட சண்டாளன்*
*சப்பாத்துக் காலால் உதைத்தே*
*சண்டித்தனம் காட்டினானே.*

*உண்டதை தின்டதை – ஒன்றாய்*
*உக்கார்ந்து படித்ததை*
*அன்போடு ஒரே மொழி பேசியதை*
*அத்தனையும் மறந்தே போனார்கள்.*

அந்த முகாமில் இருக்கின்றாய்
இந்த ஊரில் வாழ்கின்றாய்
அரசியல் கைதியாய் உள்ளாய் என்று
அநேகம் பேர் வந்து சொன்னார்கள்.

இன்னும் நீயும் வரவில்லை — எங்கள்
இதயத்தில் என்றும் வாழ்கின்றாய்
“பீசபீல்” மரணத்துக்கு
ஜென்னதுல் பிர்தௌஸ்
என்றார்கள் பெரியோர்கள் - நாங்களும்
இருகையேந்திப் பிரார்த்திக்கின்றோம்
எல்லாம் வல்ல இறைவனிடமே!

*பிறப்பு : 20-02-1958 இறப்பு : 30.01.1990*

## மர்ஹூம் ஆமீதுலெவ்வை பரிகாரி

ஆதம்பாவா பரிகாரி நூலச்சியர்
அருமை மகனார் ஆமீது லெவ்வை பரிகாரி
பேதமில்லாமல் திறமையாக ஆயுள்வேத
வைத்தியம் செய்தாரே நோயாளிகட்கும்.

சம்மாந்துறை கிராமசபையின் முதல் தலைவராய் -
அரசாங்க விவசாய பயிற்சி பெற்ற விவசாயியாய்
பனையடி வட்டையின் மேற்பர்வையாளராய்
பணிபுரிந்தீர் சகலரும் பாராட்டவே!

நேர்மையின் சிகரமாய் - தலை
நிமிர்ந்தே நடக்கும் பண்பாளராய்
ஆர்வமிகு மக்கள் தொண்டராய்
அபூர்வ நல்மனிதராய் திகழ்ந்தீரே!

நாஸீம், சுமையா, தாஸீம், சுகையா
சுபைதா, ஹாஸீம், மூஸீம், சுரைஹா,
சுலைஹா எனும் அழகு செல்வங்களை
உலகிற்கீந்து நற்பிரஜைகளாய் வளர்த்தீரே.

வல்ல இறைவா இவருக்காக
வழங்கிடுவாயே நற்சுவனத்தை
நல்லாரை என்றும் காக்கும்- எங்கள்
வல்லவனும் இயன்றவனும் நீயன்றோ!

பிறப்பு: 04-04-1941 இறப்பு: 07-01-2010

## அமரர் விபுலானந்தர் புகழ் வாழ்க.

*திக்கெட்டும் புகழ்மணக்கும் விபுலானந்த*
*தேசிகனைக் கலைத்தாயின் செல்வச் சேயை!*
*எக்காலும் புகழ்குன்றா யாழ்நூல்தந்த*
*ஏந்தலினைப் பாராட்டிப் புகழவேண்டும்*
*தக்க பெரு நிதியாக ஈழம் கண்ட*
*தமிழூற்றை வற்றாத கல்வியாற்றை*
*இக்கணமே சிலைவடித்துப் புகழவந்த*
*ஈழத்தாய் உன்னடியைப் பணிகின்றேன் நான்.*

*சர்க்கரையோ கற்கண்டோ தேனோ பாகோ*
*சவ்வாதோ உன்பெருமை கூறுதற்கு*
*அக்கணமே மக்களுணர்வெல்லாம் கண்ட*
*அமுதமலர்க் கொத்தே அரும்பணியே செய்தாய்*
*முக்கியமாய் அத்தினத்தில் வீணைதாங்கி*
*முன்வந்தாள் கலைமகளுன் புகழைப்பாட*
*திக்கெட்டும் ஈழமணித் தேசமெங்கும்*
*திகட்டாத திரவியமே நீடுவாழ்க.*

*மண்ணில் : 27-03-1892* *விண்ணில் : 19-07-1947*

*ஈழநாடு வாரமலர் 10-10-1969*

## மர்ஹூம் ஈழமேகம்

அன்புக்கோர் உறைவிடமாய்
அகிலம் தன்னில்
அழகு தமிழ் ஆசானாய்
இலக்கியத்தின்
பண்பு செறி ஆழியிலே
தோய்ந்த பேச்சில்
பரிசு பெற்றுத் தங்க மெடல்
பலவும் தாங்கி
மங்காத தமிழ் நாட்டின்
மேடையேறி
மாபெரிய பிரசங்க
மாரி பொழிந்து
அங்கீழ மேகமென
அண்ணா வாழ்த்த
அமரர் பதிமீண்ட தமிழ்க்
கவியே ஆற்றோம்!

தோற்றம் : *06-05-1923* மறைவு : *18-03-1985*

அன்புடன் பூங்காற்றுக்கு

## பொன்மனச் செம்மலே
## அமரர் சந்திரசேகரா

தேயிலைத் தேசத்தின் முத்தானவனே
தென்றலான தலைமகனே-பெரியசாமி சந்திர சேகரா
மலையக மக்கள் முன்னணியின்
மதிப்புக்குரிய பெருமகன் நீயன்றோ.

தமிழ்ப் பேசும் சமூக நலனுக்காய்-தினமும்
தவறாமல் நீதிக்குமாய்
போராடிப் போராடி சிறை சென்ற
பொன்மனச் செம்மலே சந்திர சேகரா!

பட்டப் படிப்புக்கும் பல்கலைக் கழகமும்
பாய் போட்டுக் கால்நீட்டி, நிமிர்ந்து
படுத்துறங்க வீடமைப்புத் திட்டங்களும்
பிரதேசச் செயலகங்களும் அமைத்தவனே!

மலையக மகனே தலைமகனே- எங்கள்
பெரியசாமி சந்திர சேகரா
சென்று விட்டாய் சடுதியாய்
அங்கும் தொழிலாளருக்காய் போராடவோ?

நிறைவான செயல்களால் உள்ளங்களில் நிறைந்தவனே
நித்திலம் உள்ள மட்டும் இன்னும்
ஆயிரம் சந்திர சேகர்கள்
அவதரிக்கட்டும் மலையகமெங்கும்.

தோற்றம் : *16-04-1957* மறைவு : *01-01-2011*

*ஊவா சமூக வானொலி*

## பிள்ளையினார் அமரர் வேலாயுத பிள்ளை

(கல்முனை முருகன் ஸ்டோர்ஸ்)

நீண்ட உறவு

அனைவருக்கும் அன்பு வணக்கம்
சாந்தியும் சமாதானமும் இன ஐக்கியமும்
உலகெங்கும் ஓங்கிடவே
எல்லாம் வல்ல இறையை வேண்டுகின்றேன்!

வேலைக் கரத்தில் பிடித்ததுமேன்- வேலவா
வேதனை மலையைப் பிளப்பற்கோ
பாலைப் பொழியும் நிலவதுபோல்
பார்வை அருளைச் சுரப்பதுமேன்!

என்ற கவிதை வரிகள்
முருகன் ஸ்டோர்ஸ் ஐயாவை
பார்க்கும் போதெல்லாம்
அடிக்கடி நினைவுகள்
வந்து சேரும் எனக்கு.

எனது வாப்பா
ஒரு பலசரக்கு வியாபாரி
நான் படிக்கும் காலத்தில்...
என்னைக் கூட்டிச் சென்று
ஐயாவிடம் அறிமுகப் படுத்தி வைத்தார்

புடித்து முடித்து நானும் வியாபாரி ஆனதினால்
அந்தத் தொடர்பு 50 வருடங்களுக்கு மேல் நீடித்தது.

ஐயாவின் திருமணம், வீடு குடிபுகுதல்
நல்லநாள் பெருநாள், வருடப் பிறப்பு
கைமுளுத்தம், பொங்கல்
பலகாரம் விருந்தென்று நீண்டு சென்றது.

பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கினேன் நானும்
பாண்டியூரன், நீலாவணன், மு.சடாட்சரன், ஜீவா ஜீவரெத்தினம்
எண்சோதிடர் வேலாயுதம் ஐயாக்கள் போன்றோரின்
புத்தகங்கள், வீரகேசரி பதிப்புக்கள்
இலவசமாய் தருவார் ஐயா
என் தமிழ் ஆர்வத்துக்கு உதவினார்.

முருக பக்தராகவும், சிவனார் பக்தராகவும்
காயத்திரி முருகேசு சுவாமியின்
அன்புக்குரியவராவும் வாழ்ந்தார்.
திருக்கோயில் கல்லடி என்று
சென்று வருவார் ஐயா.
சுனாமி பலரைத் தூரமாக்கியது
எங்களை இணைத்து வைத்தது
2-3 நாட்கள் ஐயாகுடும்பம் தங்கியதை
பெரும்பேறாய் கருதினோம் நாங்கள்

புதுச்சட்டிபானை புதிய வகை உணவுகள்- அதன்
தார்ப்பரியம் சுவைகள் உணரமுடிந்தது
இன்னும் பிணைப்பானது ஐயாமனைவிமக்கள் மருமக்கள்
பேரக் குழந்தைகள் சாதி மதங்களை கடந்து நின்றது.

ஒன்று வரவு ஒன்று செலவு
மனித வாழ்க்கை கணித வாழ்க்கை
ஐயா...அமர வாழ்வை அடைந்தாலும்
உங்கள் நினைவு நீண்டு போகும்
உங்கள் நெடுங்குலங்கள் குஞ்சுகள்
பிள்ளைகள் அத்தனையும்
ஏமாந்து போகாமல்
எமக்கு அளித்தீர்கள்
என்னென்பேன் உனது நன்றி

தோற்றம்: 24-01-1934 மறைவு: 16-08-2014

நன்றி- பிள்ளையினார் வேலாயுதபிள்ளை நினைவு மலர்

## பெருவிளக்கே அணைந்தனையோ

(மர்ஹூம் எம்.எம். இஸ்மாயில் (என்ஜினியர்)

அன்னநடை நடந்திங்கு
அனைவருக்கும் நலமோதும்
இன்முகத்தின் நறுமலராம்-எங்கள்
இஸ்மாயில் துரையையும்
கண்டு கொண்டானே காலன் - ஊரை
கலங்கிடவும் வைத்தானே!

ஒல்லியுடல் உயர் தோற்றம்
மென்மை மொழி மெதுவான நடை
வெள்ளை யுடை வீரனின் சாயல்
கள்ளமிலா உளத்தினராய்
கண்டோரை மதித்திடும் நல்
கண்ணியவான் இஸ்மாயீலே!

கோடை மழை பொழிந்திட்டால்
கூடைநிறை விதையேந்தி
சாடையால் கூப்பிட்டு
சால்வை நிறை விதையீந்து
நாட்டிடுவீர் வீட்டினிலே
நாட்டுக்கும் நலம் என்பார்.

ஊருக்குப் பெருவிளக்காய்
உயர்ந்தே நின்றீரே
யாருக்கும் அஞ்சிடாத
யானையாய் உழைத்தீரே
பாருக்குள் பிரதி நோக்கா
பண்பாளராய்த் திகழ்ந்தீரே!

ஊருக்குள் ஓடும் நதி
உங்கள் அன்பைக் கூறுமப்பா
பாறையைத் துளைத்திங்கு
பாய்ச்சிய நீரெல்லாம்
இறைவனிடம் கையேந்தி
இறைஞ்சிடுமே உனக்காக!

வல்லயிறையோனே ! நீ அவர்க்கு
வழங்கிடுவாய் சுவனத்தை
அல்லலுறும் எங்களுக்கும்
அளித்திடுவாய் நற்கருணை!
சொல்லாமல் நல்லமழை
சொரிபவனும் நீயன்றோ!

*மறைவு : 19-10-1983*

## எங்கள் தங்கத் துரை
## - மர்ஹூம் அப்துல் மஜீது பீ.ஏ -

பிறந்திட்ட போதினிலே எம் ஏ யாம் - அவர்
படித்திட்ட வேளையிலே பீ ஏ யாம் - மக்களுக்கு
தொண்டு செய்கையிலே எம் பியாம் - மானம்
காத்திடவே கைத்தறி நெசவு மந்திரியாய் வந்தவராம்.

சுட்டாலும் வெண்மை தரும் சங்கு - அவர்
சுடுசொல் கேட்டாலே வெற்றி நமக்கே!
காட்டாற்று வெள்ளமாம் அவர் நெஞ்சம் - தினமும்
கலங்கும் ஏழைகட்கும் அப்துல் மஜீதே தஞ்சம்.

இலுக்காலே முகடமைத்த ஏழைகட்கும் - தினமும்
இலங்குகின்ற மின்சார வெளிச்சமிட்டே!
கல்வீட்டுத் திண்ணையிலே அமரவைத்த - எங்கள்
கண்ணீர் துடைத்த தங்கத் துரையே! நீங்கள்.

பிச்சைச் சம்பளம் எடுப்போர்க்கும்
பிணக்குகள் கோடி தீர்ப்பதற்கும் - நீங்கள்
நிச்சயம் மீண்டும் வேண்டுமென்றே
நெடுநாள் வாழ்ந்திடவே பிரார்த்தித்தோமே!

ஒன்று வரவு ஒன்று செலவு
மனித வாழ்க்கை கணித வாழ்க்கையானதுவே!
அன்போடு ஆதரித்த ஆனந்த முகத்தை
என்று காண்போம் இனி இவ்வுலகில் நாங்கள்.

கருணை யாளனே எம் மிறைவா
கரங்கள் ஏந்திப் பிரார்த்திக்கின்றோம்
பிர்தௌஸ் எனும் சுவனத்தை
பெரிய பரிசாய் அளித்திடுவாயே!
அல்ஹம்துலில்லாஹ்.

*மலர்வு: 1926-10-15 மறைவு: 29-11-2011*

*வெளியீடு: சமூக சேவை அமைப்பு சம்மாந்துறை*

## எங்கே மறைந்தாயோ எம் தலைவா!
## - மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் -

வந்தாரை வாழவைக்கும்
வளம் நிறை சம்மாந்துறையின்
செம்மை நிறை இம்மண்ணில்
சீர் கோடி செய்யப் பிறந்தாயோ?

அல்லாஹூ அக்பர் எனத்தொடங்கி
அனைத்துலகையும் ஆழவந்த
முஸ்லிம் காங்கிரஸ் எனும்
முதுசத்தை வளர்த்தாயோ?

கப்பல் துறையும் புனர்வாழ்வும்
புனரமைப்பும்
காலத்தால் அழியாதிருக்க
தப்பாமல் வேலை வாய்ப்புக்களை
தாராளமாய் வழங்கினீரே!

ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை
ஆனைத்து மேடைகளிலும் உரைத்தாயே!
கல்வி அமைச்சராய் வருவாயென
கனவுகள் கோடி கண்டோமே!

பாலமுனைக்கு நீங்கள்
பறந்து வருவீரென
ஆவலோடு நாங்கள்
அயராது காத்திருந்தோமே!

கொழும்பிலிருந்து விமானம்
எழுந்து வருகையிலே
அரணாயக்காவில் அல்லாஹ் - உம்மை
அழைத்துக் கொண்டானோ?

கிழக்கின் விடிவெள்ளியாய்
கீழ்வானில் உதித்தாயே!
விடியலைக் காணும் முன்பே
விதியின் கருமேகம் உமை மறைத்ததுவோ?

உம்மைப் போல் ஒருமகன்
உரிமைக் குரலில் இனி உரைக்க
எத்தனை கோடி யுகம் வேண்டும்
இனியும் ஒருமகன் பிறப்பானோ?

ஒலுவிலில் அடக்கம் செய்வதற்கு
ஓரிடம் அமைத்து வைத்தாயே தலைவா!
ஜாவத்தைப் பள்ளிதான்- உம்
ஜடலத்தை ஏற்றதுவோ?

உம்மரணத்தை எம் இதயங்கள்
உரிமையுடன் ஏற்கவில்லை
உன் மறைவோ அதுவல்ல
இனிமேல்தான்
உன் பிறப்பு தொடர்கிறது.

'பீசபீல்' என்னும் மரணம் உனக்கு
பிந்தாமல் வந்து சேரும் என்று
'கபன்'உடையைக் கூட
கையோடு கொண்டு சென்றாயோ?

அரணாயக்காவில் உம் உயிரை
இறைவன்
ஆகாயத்தில் உயர்த்தினானோ?
அந்நிமிடமே
பிர்தௌஸ் என்னும் சுவர்க்கத்தை
இறைவன்
பிரியமுடன் ஈந்தானோ?

மலர்வு : 23-10-1948 உதிர்வு : 16-09-2000

வெளியீடு : யுனிஷென் பௌண்டேசன்

## நெஞ்சங்களில் நிலைத்து வாழ்வீர் !
## - மர்ஹூம் யூ. எல். எம். முஹைதீன் -

சீனாவுக்கு எங்கள் எம்பி
சென்றவர் வந்ததினால்
செல்லக் கதைகள் கேட்டிடவே
சென்று அவர்முன் அமர்ந்தவேளை...

வேட்டியும் சால்வையும் விதமான
மஞ்சள் பொட்டுமிட்டே...
அஞ்சி... அஞ்சி... ஒருவர் வந்து
அமைதியாய் வணக்கம் என்றார்.

முஹையதீன் எம்.பி.யின் பக்கம்
முறுவலித்தே கிட்ட வந்தவர்
என் பிள்ளைக்கு அரசாங்க வேலை
எடுத்துக் கொடுத்ததற்கு
பத்து ஆயிரம் ரூபாய்கள்
வேணாம் என்று சொல்லாமல்
வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

மேசையின் மேல் வைத்த காசைக்கண்டு
வேகமாய் கோபங்கொண்டு
வீசிக் கொண்டிருந்த காற்றாடியின் மேல்
வீசினார் எம்பி காசை.

உந்தன் காசைப் பொறுக்கி எடு...
இங்கு நிற்காமல் ஓடு என்றுரைத்தார்
பொறுக்கி எடுத்தவனும் போய்விட்டான்
என்னென்பேன் இக்காட்சியை...

பறந்தகாசில் ஒன்று பதுங்கி இருந்தது
கதிரையின் இடுக்கிற்குள் அதைக்
கண்டநான் எடுத்தே!
கனவான் முஹைதீனிடம் கொடுத்தேன்
ஓடு... அஸீஸ் ஓடு ... அதை
உரியவரிடம் கொடுத்துவிடு- அவன்
பாடுபட்டுச் சேர்த்த பணம்
பாவம்... கொடுத்துவிட்டு வா என்றார்.

சைக்கிளை எடுத்து நான் அவர் சென்ற பக்கம்
காசைக் கொடுத்திட வேகமாய் ஓட.. ஓட...
காசு கொடுத்த ஐயா காற்றாய்ப் பறக்க...
தூசியாய் நான் தொடர்ந்தே சென்றேன்.

இந்தாருங்கள் ஐயா உங்கள் மீதிப் பணம்
பெற்றுக் கொள்ளுங்கள் என்றேன் நான்
பெற்றவர் கூறினார் "பிழைக்கத் தெரியாத
உழைக்கத் தெரியாத" உத்தமர் எம்பி என்று
கொடுத்துவிட்டேன் சேர்அவர் பணத்தை.. ஆனால்
உழைக்கத் தெரியாத பிழைக்கத் தெரியாத
உத்தமர் எம்பி என்று-உளறிவிட்டு
செல்கின்றார்... என்றேன் நான்.

உன்பிள்ளைக்கு காய்ச்சல் வந்தால்
ஊர் ஆஸ்பத்திரி உள்ளது - ஆனால்
என் பிள்ளைக்கு காய்ச்சல் வந்தால்...
இங்கு நான் வைக்கலாமா?

அப்பலோ ஆஸ்பத்திரியில் ஒரு நாளைக்கு
எத்தனை ஆயிரம் வேண்டும்
இவர் தந்த பணம் எனக்கு
எத்தனை நாளைக்குக் காணும் என்றார்.

ஆமாம் உழைக்கத் தெரியாமல்
கபுறுக்காய் மட்டும் உழைத்து
காஞ்சிரமரமாயானீர்கள்
சரித்திரமானீர்கள் சான்றோன் நீ...
அறிஞர் சித்திலெவ்வை போல்
அப்துல் காதர் ஆலிம் போல்
அழியாப் புகழ் பெற்று நீ
என்றும் வாழ்வீர் பிர்தௌஸில்

தோற்றம் : *18-02-1939* மறைவு : *01-04-2005*

வெளியீடு : புறக்டர் எனும் புனிதர் மர்ஹூம் U.L.M. முஹைதீன்

## மர்ஹூம் டொக்டர் மீராலெவ்வைப் போடி

வெள்ளை அலறி பூத்திங்கே
வீதியெல்லாம் மணப்பது போல் - நற்
கொள்கை தேடிக் கொண்டவராம்...
டொக்டர் மீராலெவ்வைப் போடி!

மத்ரஸா, மர்கஸ், பாடசாலை
மரணித்த பின்பும் நன்மைகள்
மறக்காமல் ஈந்திடும் என்றிங்கு
மனந் தளராமல் செய்தீரே!

வியர்வை உலருமுன் கூலியை
வயலுக்கே சென்று ஈந்திட்ட
உயர்வைக் கண்முன் கண்டேனே!
ஊருக்குள் கனிமரமாயத் திகழ்ந்தீரே!

சொல்வதைச் செயலில் காட்டிய
செயல் வீரர் நீங்களையா...
பல்கலை வேந்தராய் பாரினிலே
பலரும் போற்ற வாழ்ந்தீரே!

ஊருக் கெல்லாம் கந்தூரி
ஒரே நாளில் கொடுத்திட்ட
செருக் கில்லா மரைக்காராய்
சீர்மை கொண்டே மிளிர்ந்தீரே!

காலித் துறைமுகத்தில் கப்பல்கள்
கடுஞ்சுமையுடன் நிற்பது போல்
வேலி கட்ட வழியில்லா
ஏழை கட்கும் உதவினீரே!

வல்ல இறைவா இவருக்கு
வழங்கிடுவாயே பிர்தௌஸை
எல்லாப் புகழும் உனக்கேயாம்
இறைஞ்சுகின்றோம் உன்னிடமே!

தோற்றம் : 05-02-1907 மறைவு: 12-09-1984

## மர்ஹூம் காயிதே மில்லத் !

காயிதே ஆஸம் ஜின்னா வழியில்
காயிமே மில்லத் இஸ்மாயிலே
சாந்தி முஸ்லிம் லீக்கின் உயர்
சரித்திரம் போற்றும் தலைவராயீந்தாய்!
மூத்த அறிஞ்ஞரை மூடிமறைக்கும்
முன்னைய விந்தைக் காட்டிவிட்டாய்
ஆத்திரம் பொங்கி ஆறாத்துயரால்
அழுதே கண்ணீர் பீறிடச் செய்தாய்
ஏழை எளியற்கு மூத்த தோழர்
ஏந்தும் கைக்கு இல்லை யெனாத
வாள்முனை யொத்த பேச்சின் வீரர்
வழுவா திஸ்லாம் காத்த நற்சீலர்
அண்ணன் தம்பி ஆயினும் நீதி
அனைவர் களுக்கும் ஒன்றேயென்றும்
"அண்டை நாட்டை நேசி தோழா
அடைவாய் பெரிய இன்பம்" என்றார்
இறைவா எங்கள் அன்புத் தலைவரை
ஏனோ கெதியில் அழைத்துக் கொண்டாய்
கறையே யில்லாக் காயிதே மில்லத்
கண்ணை யிழந்தோம் காப்பாய் இறைவா!
இறைவா யுந்தன் சமூகந் தன்னில்
இலையோ அறிஞர், அதனால் நீயே
விரைவில் அழைத்தாய் வேதனை யீந்தாய்
விரைவாய் அனுப்பிடு வேறு அறிஞரை!

*சுதந்திரன் : 23-4-1972*

## மர்ஹூம் ஆறூன் துரையே அமீரலியே

ஆறூன் துரையே என்றேயினி
யாரைச் சொல்வோம் அமீரலியே
பாரை ஆள்வாய் நீயென்றே - புதுப்
பயணம் தொடர்ந்தோம் அமீரலியே!

வெள்ளைக் காரத் துரையாய் நீ
வீதியில் வந்தே சிரித்திட்டால்
கொள்ளைத் துயரம் மறைந்திடும் நல்
குணமகனை இனியும் காண்போமா!

பிச்சைச் சம்பளம் எடுப்பதற்கும்
பிணக்குகள் கோடி தீர்ப்பதற்கும்
நிச்சயம் வாழ்வாய் என்றெண்ணி
நெடிய கனவு கண்டோமே!

சாதி பேதம் பாராய் நீ
சற்றும் கதவை மூடாய்நீ
பாதி எம்பி எங்களுக்கு நீ
பறந்தாய் எங்கோ கண்மணியே!

நெஞ்சம் வெடித்தே உன்பிரிவால்
நொந்து துடித்தோம் அமீரலியே
கொஞ்சமும் கருணை இல்லாமல்
குவலயத திறைவன் அழைத்ததுமேன்?

வெள்ளிக் கிழமை இனிவருமோ
வேதனைப் புயலாய் சீறிடுமோ
கண்ணீர் மணிகள் நீர் தொட்டியின்
கதவை உடைத்தே ஓடிடுனோ!

கருணைக் கடலாம் எம்மிறைவா
கதறி அழுதே வேண்டுகிறோம்
பெருமை நிறைந்த சொர்க்கத்தை
பெரிய பரிசாய் அளித்திடுவாய்!

தோற்றம் : 7-6-1933 மறைவு : 7-9-1979

## மர்ஹூம் முஹம்மதலிக் காக்கா - நினைவில்
## - ஸமீம் ஸ்டோர்ஸ் -

*முகம்மதலிக் காக்கா நீங்கள்*
*முத்தான மனிதரப்பா!*
*சத்தான கதைகள் பேசி – கடையில்*
*சாமான்களை விற்கும் நினைவலைகள்*
*இன்னும் எம்மிதயத்தில் மறையவில்லை!*

*கன்னங்கரிய ஒரு மனிதர்*
*வெள்ளாடை யனிவதிலே தனிவிருப்புடையார்*
*வெள்ளைத் தொப்பி யணிந்து*
*பள்ளி விறாந்தையிலே – தொழுகை முடிந்தபின்*
*வேகமாய் துடிக்கம் இதயத்தை சற்று*
*ஆறுதல் படுத்திடக்*
*கால் நீட்டியமர்ந்து காண்போரிடம்*
*கனிவாய்ப் பேசியிருக்கும் காட்சிகளை*
*இன்னும் தேடுகின்றோம்...!*

*தம்பியும் காக்காவும் அடுத்து முடியும்*
*கட்டுச் காதம் கொண்டுவந்தா - இம்*
*மாயவுலகில் வாழ்ந்திருந்தீர்! - தம்பி,*
*முகம்மதுத் தம்பி இத்தரணி வாழ்வை*
*முடித்துச் சென்ற மடட்டிலா வேதனைகள்*
*உங்களையம் "ஆகிறத்துப்" பயணத்துக்கு*
*எங்களைவிட்டும் பிரித்துச் செல்லுமென்று*
*இங்கார்தாதன் இம்மியளவும் நம்பினார்?*
*இருந்தாலும்*
*"ஒவ்வொர் ஆத்மாவும் மரணத்தைத்*
*தழுவியே தீருமென்ற" இறைவசனம்*
*எங்கள் துயரத் தீயை அணைக்கிறது!*

பட்டோலை மருந்துகளும்
"பாமஸி" மருந்துகளும் இன்னும் பலவும்
கட்டாயமாய்க் கிடைக்குமென்று நம்பி வருவோர்
கிட்டாமல் சென்ற கதை குறைவே!

கைவைத்தியம், மற்றும்முள அனுபவ வைத்தியம்
யாவையுமே
உங்களிடம் இலவசமாய்ப் பெறுவோரும்
இங்கு இல்லாமலில்லை
நன்னோக்கம் கொண்டவர் நீங்கள்

உழைப்பவர்க்கும் வியாபாரிகளுக்கும்
உங்கள் வாடிக்கையாளர்க்கும்
பங்கமில்லாமல் நல்ல ஒரு வியாபாரியாய்
நல்ல மனிதராக
பலர் போற்ற வாழ்ந்தீரே!

சனக் கூட்டம் நிறைந்த வேளையிலும்
நிதானமாய் மெல்ல — மெல்ல
சாமான் கொடுத்துச் சந்தோசமாய்
சிரித்துப் பேசிய … நிகழ்வுகளை
என்றும் நாம் மறவோம்! உங்கள் கடைக்கு வருபவர்கள்
உட்கார்ந்து பொருள் வாங்கி
தங்க நிகர் அறிவுரைகள்
தாராளமாய்ப் பெறுவாரே!

இனவிரிசல்கள் தொற்று வியாதியாய்
கனப் பொழுதில் பரவிய வேளையிலும்
இன உறவுக்கோர் முன்மாதிரியாய்
வாழ்ந்தீர்கள்!
ஆதர் ஐயாவை அடைக்கலமாய் வைத்து
அன்புடன் அவரோடு உறவாடி
நிலையான நட்பாய் வாழ்ந்த நாட்கள்
இன்னும் உங்கள் உள்ளத்தை
தெளிவாய்க் கட்டக் கண்டோம்!

உங்கள் எண்ணங்கள் கனிவானவை!
உங்கள் பேச்சுக்கள் தெளிவானவை!
உங்கள் இலட்சியங்கள் உயர்வானவை!
எங்களால் ஒரு போதும் மறக்கப்பட முடியாதவை!
உங்கள் ஆருயிர் மனைவி
உங்கள் சின்னஞ்சிறு சிறகு முத்தாக் குஞ்சுகள்
றிஸானா, சமீம், நிப்றாஸ்
மற்றும் குடும்பத்தோர் நண்பர்கள்
யாவரதும் மனக் கவலைகள் தீர்த்திட
ஆறுதல் அளிப்பாய் அல்லாஹ்!
இவர் மக்கள் சிறந்து -- நற்பண்புடையோராய்
இம்மையிலும் மறுமையிலும் நீங்கள் விரும்பும்
நல்லவராய் வாழச் செய்து நல்லருள் சொரிவாய்
அல்லாஹ்வே!

வல்ல இறையோனே யா அல்லாஹ்!
நல்லவராம் எங்கள் முஹம்மதலிக் காக்காவின்
குற்றங்குறை பொறுத்து அவர் அமல்களை ஏற்று
நல்ல சுவரக்கமாம் "பிர்தௌஸை"
அளித்திடுவாய் றஹ்மானே!

வான்மழை பொழிந்திங்கு - செந்நெல்
வயல் எல்லாம் செழித்திடவே
வான்மறை தந்த வல்லவனே அல்லாஹ்வே
நீர் வளமும் தந்திடுவாய்!

தாய்மடியில் : 20-08-1944
இறையடியில் : 15-02-1997

ஜனாப் A. இப்றாஹிம் (ஆசிரியர்)
சம்மாந்துறை அஸீஸ்

# ஆயுள்வேத மருந்தகம்
# மர்ஹூம் இப்றாலெவ்வை

அஸ்ஸலாமு அலைக்கும்
எல்லோரும் நலமாய் வாழ
இறையோனை வேண்டுகிறோம்

அன்புடையீர்...
ஆவலோடு நீங்கள் அனேக நாட்களாய்
எதிர்பார்த்திருந்த ஆயுள்வேத மருந்தகம்
எங்களூர் சம்மாந்துறையிலும்...

ஆயுள்வேத குளிசை வகைகள்
அரிதான பட்டோலைச்சரக்கு வகைகளுடன்
அரிஸ்ட வகை மருந்துகளும்....

அவதிப் படுத்தும் வாய்வு, வாதக் கடுப்பு
இருமல் தடுமல் இடுப்புப் பிடிப்பு
நீரிழிவு, கொலஸ்ட்ரோலுக்குரிய
நிவாரண மருந்துவகை முதல்....

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
உத்தரவாதத்துடன் தயாரிக்கப்பட்ட
உன்னதமான மருந்து வகைகளையும்...

அழகுசாதனக் கிறீம் வகைகள்
இளநரை, பீனிசம், நோவு, கடுப்பு,
உடைவு, முறிவு, தலைமுடிக்குப்
பூசவல்ல தைல வகைகளும்
கறிக்கு ருசிக்கவல்ல மசாலா சாமான்களும்...

நலமான நல்லெண்ணெய் ,தரமான வேப்பெண்ணெய்
இலுப்பெண்ணெய், விளக்கெண்ணெய்,
ஒலிவெண்ணெய், கடுகெண்ணெய்,புல்லெண்ணெய்
சந்தண எண்ணெய்,, கருஞ்சீரக தைலம்

சுத்தமான தேன்,பன்னீர்,
அத்தர் வகைகளுடன்,அரைப்புக்கு பச்சைமஞ்சலுடன்
அத்தனையும் கிடைக்கக் கூடியதாய்...

வைத்தியர்களின் ஆலோசனைக் கிணங்க
மூக்குக் கண்ணாடி வரை நியாய விலையில்..
பல வருடங்களாய் எமது சம்மாந்துறையின்
வாடிக்கையாளர்களின் மனங்களை வென்று
மதிப்புப் பெற்ற இடம், நீங்களும்
நாட வேண்டிய இடம்...

இத்தனை மருந்துகளையும்
இதமாக பதமாக விற்கும்
எங்கள் இப்றாலெவ்வைத் தம்பி
ஜும்மாத் தொழுகைக்காய்
சென்ற நீங்கள்
சுமையாய் வந்தீர்கள்...

அமைதியை நிலைநாட்ட
அல்லாஹ் அழைத்தானோ?
வல்ல இறையோனே
வளமான சுவனத்தை
அருள்வா யென வேண்டி
இருகை யேந்துகின்றோம்
ஆமீன் ஆமீன்
யாரப்பில் ஆலமீன்.

உதயம் : 7-12-1955 மறைவு :19-9-2014

## மர்ஹூம் செலகிக் காக்கா!

*பாணும் பனீசும் ஐஸ் கேக்கும்*
*பக்குவமாய் பெட்டி கட்டி*
*தேனிலுமினிய பேச்சுடனே*
*தெருவில் வருமெம் செலகிக்காக்கா!*

*என்று காண்போம் இனி உம்மை*
*எங்கள் கவலையை எடுத்துரைக்க*
*மண்ணும் உம்மை உண்டிடுமோ*
*மனங்கள் தாங்குமோ உம் பிரிவை.*

*வறக்காப் பொளையில் மோட்டார் சைக்கிளிலே*
*வண்டாய் நீங்கள் பறக்கையிலே*
*மறக்கா இறைவன் நினைத்தானோ*
*மரணத்தாலே அணைத்தானோ!*
*சூறாவளி ஓய்ந்தவுடன் நீங்கள்*
*சுறுசுறுப்பாய் இளைஞர் சேர்த்து*
*ஊருக்குச் சேவை செய்த உங்கள்*
*உழைப்பதை மறப்போமா காக்கா.*

*செலகிக் காக்கா செலகிக் காக்கா என்று இனி*
*செல்லமாய் யாரை அழைப்போம் காக்கா!*
*செலவிட்டுப் போனாயோ உன் உடம்பை*
*சீமானே நீ மறைந்து போனீரோ!*

*இலங்கை வங்கி ஜலீல் மகனார்*
*நீ மாண்ட செய்தி கேட்டு*
*கலங்கியே அழுத காட்சியினை*
*கண்முன்னே எழுதுவேனோ!*

ஏழை பணக்காரர்களும் உன் குணத்தை
இழிவாகப் பேசார்கள், நாளுஞ் சேவற்
கோழியினம் காலை தோறும் கூவிப் யார்த்து
கொக்கரிக்க நீ மாண்டு போனாயோ!

நீ மாண்டு போனாலும் உனது குஞ்சு
நெடுங்குலங்கள் உன் நினைவை மாற்றமாட்டா
ஏமாந்து போகாமல் எமக்கவற்றை
ஈந்து சென்றாய், என்னென்பேன் உனது நன்றி

பெற்று வளர்த்த உம் குடும்ப
பாசத்தார்க்கு ஏதுரைப்போம்
உற்ற மனையாள் மக்களுக்கும்
உலகன் இறைவன் துணைதானே!

நல்ல சுவர்க்கம் எம்மிறைவா
நலமாய் ஈந்து அருளிடுவாய்,
வல்ல பொருளும் நீயன்றோ - எங்கள் இறைவா
வணங்கும் தெய்வமும் நீயன்றோ!

தோற்றம் : 12-1-1944 மறைவு : 06-10-1980

## விட்டுப் பிரியா வயது

### - மர்ஹூம் மு.த.முகம்மது சமீம் -

*அன்பான முகம் அமைதியான நடை*
*பண்பான பேச்சு, பலரையும் பவரும்*
*பக்குவமான பணிவு*

*முகம்மட் தம்பி (கலந்தர் லெவ்வை)*
*ஆதம்பாவா பாத்தும்மா அருமை தம்பதியினரின்*
*இனிய மகன் முத்தான*
*மூத்தமகன் முகம்மது சமீம் அவர்கள்...*

*இஸ்மாலெப்பை மஸாஹினா*
*தம்பதியினரால் ஈன்றெடுத்த*
*ஆபிதா(றோஸா) எனும் இனிய மனையாள்*
*ஸெய்னப் ,ஸமா, சம்லி அகமட்*
*எனும் நாமம் கொண்ட*
*ஏணியாய் மூன்று செல்வங்கள்...*

*ஸபூர் ஸனச முதல் துறைமுகம் வரை*
*மறக்க முடியா நண்பர்கள்*
*திறமையாய் சேவைகள்*
*செய்து விட்டே...*
*அவசரமாய் புறப்பட்டீரோ ! அல்லாஹ்விடம்*
*எங்கள் இனிய முகம்மது ஸமீமே...*

துறைமுகத்தில் விலகுவோருக்கு
தொகைகள் கொடுக்கும்போது
பிள்ளைகள் வந்தலையாது
பிணக்குகளில் சிக்காது
"கையோடு எடுத்துச் செல்வோம்"
"கவனமாக செலவுகள் செய்வோம்"
என்றுரைத்த வார்த்தைகள்...
இன்னும் எங்கள் காதுகளில்
"ரீங்காரமாய்" ஒலிக்கிறதே நண்பா

விட்டுப் பிரியா வயது
வேதனைகள் தந்தாலும்
அத்தனையும் அல்லாஹ்வின் நாட்டமே
அசைக்க முடியுமா எங்களால்..
பாவங்களை மன்னிக்கும் பண்பாளனே
எங்கள் இறைவா
தூவாணமாய் பன்னீர் வாசம் வீசும்
பிர்தௌஸ் எனும்
சுவனத்தைத் திறந்திடுவாய் என்று

இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கின்றோம்
இனிய நண்பர்கள் உற்றார் உறவினர்கள்
எங்கள் இனிய மர்ஹூம் முகம்மது சமீம்
அவர்களுக்காய்...
ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்'...
எல்லாப் புகழும் இறைவனுக்கே
அல்ஹம்துலில்லாஹ்.

*மலர்வு : 24-04-1970 உதிர்வு : 24-10-2012*

## மர்ஹூம் முகம்மது இப்றாஹிமுக்கு

அத்தாங்கால் வடித்தெடுத்த
அழகு மணி ரெத்தினமாய்
அத்தனை நற் செயல்களிலும்
அவதான எழுச்சியைக் காட்டினீரே..!

எங்கள் முஹம்மது இப்றாஹிமே..!
எம்மை விட்டுப் பிரிந்தனையோ...!
மங்காது உங்கள் நினைவுகள்
மரணித்தாலும் இவ்வுலகில்

எனக்கோர் மரணக் கவிதை
எழுதியே தரவேண்டுமென மரணத்தின் முன்
அதனை நான் முதல் படித்த பின்பே
அத்தனைபேரும் படிக்கவேண்டும் என்றாய் நேற்று

நேசமுள்ள வைத்தியராய்
பாசமுள்ள வியாபாரியாய்
அன்பின் ஊற்றாய்
அனைவருக்கும் நண்பனாய்
வீற்றிருந்தாயே இப்றாஹீம்
விட்டுத்தான் பிரிந்தாயோ?

*உன்னருமை ஞாபகங்கள் ஓடியே வருகின்றன...*
*இறப்பு இயற்கை நியதியே !*
*இருப்பினும் இவ்வளவு சீக்கிரமாய்*
*இறையடி சேர்ந்தனையோ...!*

*பாவங்கள் மன்னிக்கும் எம் இறைவா!*
*பரிந்தே வேண்டுகின்றோம் நாம் உன்னை*
*பிர்தௌஸ் எனும் உயர் சுவனத்தை*
*பெரும் பரிசாய், ஈந்திடுவாயே*

*தாய் மடியில்: 27-09-1954 இறையடி: 09-01-2004*

## அமரர் "வித்தியா" மகளே !

நீயில்லாத மழைத்துளிகளில் கூட
வெள்ளமாய் வித்தியா உன்
நினைவுகள் மட்டுந்தான் மகளே !
பாயில்லாமல் படுத்தே உருகுகின்றேன்
பாவிகள் செய்த கொடுமைகளை எண்ணி எண்ணி
புங்குடுதீவுக்கொரு கும்பிடு போட்டு
புறப்பட்டேன் மகளே நல்லூருக்கு
சென்றுவா தங்க மகளே கூரான
தீவேல்கள் ஆயிரம் ஆயிரம் கொண்டுவா!
குத்திக் குதறுவோம் அந்த மனித
மிருக அக்கிரமக் காமுகர்களை
வலிகள் தந்த விழிகளைத்தான் நான்
தேடுகின்றேன் மகளே- இத்தேசமெங்கும்
அனுதாப அலைகளாய்- ஆர்ப்பாட்டங்களாய்.

*பிறப்பு : 25-11-1996 இறப்பு : 18-02-2015*
*2015-5-18*



கவிஞர் சம்மாந்துறை அஸீஸ் தேன் சொட்டும் பேனாவின் சொந்தக்காரர். சம்மாந்துறையை பிரபலப்படுத்துவதிலும் அதன் கீர்த்தி ஓங்கி ஒலிப்பதிலும் நிறையவே சாதித்தவர். இயல்பான கவிதை நடையினாலும் ஆடம்பரமில்லாத பதப் பிரயோகங் களாலும் தன்னுடைய ஆக்கங்களை அழகு படுத்தியவர். முற்றத்தில் நிரம்பிக்கிடந்த அழகிய மொழியை தன்னுடைய வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட அம்சங்களுடன் பிசைந்தெடுத்து கலாபூர்வமாகச் செதுக்கி அழகு பார்ப்பதில் வெற்றிபெற்றவர். நாளைய இலக்கியச் செல்நெறியை நேற்றே கண்டுபிடித்துக் காரியமாக்கிய அற்புதமான கலைஞர்.

பிரபலத்தில் ஆர்வமற்று விருதுகளுக்காகப் படியேறித் திரிவதை வெறுத்து தன்னுடைய பணியை அபாரமாகக் காரியசித்தியுடன் சாதித்துக் காட்டியவர். இயல்பாகவே அன்பும் கருணையும் நிதானமும் ஆரவாரமின்மையும் அவருடைய குண நலன்களாய் அமைந்துவிட்டன. இதனால் இலக்கியமும் மொழியும் இவரின் இயல்பான குணநலன்களுடன் பொருந்தக்கூடியவகையில் வெளிப் படுகின்றன. வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் மென்மை யையும் எளிமையையும் தனது அணிகலனாய் இவர் கொண்ட மையினால் மிகக் கடினமான விடயதானங்களை மிக எளிதாய் எடுத்துரைத்தல் இவருக்குச் சித்திப்பட்டுவிட்டது.

சம்மாந்துறையில் கடந்த ஐந்து தசாப்தங்களாக எழுதிக் கொண்டிருக்கும் இவர் நாவலர் ஈழமேகம், பாவலர் பஸீல் காரியப்பர், மாறன் யூ.செயின், கவிமணி ஏ.ஸி.இஸ்மாலெவ்வை முதலியவர்கள் வரிசையில் முக்கிய இடம் பிடித்துள்ளார். இந்தப் பிரதேசத்தின் மூத்த படைப்பாளிகளான புலவர்மணி ஆ.மு. ஷரீபுத்தீன், மருதூர்க் கொத்தன், ஜீவா ஜீவரெத்தினம், அன்பு முகைதீன் முதலியவர்களின் கவிதைப் பாரம்பரியத்தை வருஷித்துக் கொண்டவர்.

மன்சூர்.ஏ.காதிர் (M.Ed.)

ISBN : 978-955-43028-0-8

9 789554 302808

cover design - nawas sawfi